533

# வரலாறு

## தரம் 11






புதிய பாடத்திட்டம் 2016

சிறுகுறிப்பேடு

இராஜ.சுப்ரமணியம்

பூபாலசிங்கம் புத்தகசாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Class No: | 900 |
| Acc No | 533 |

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

## புதிய பாடத்திட்டம் 2016

## (பாகம் - 01)

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

# தரம் - 11

## வினாவிடைகள்

## கணிப்பீடுகள்

## வரலாற்று விளக்கப்படங்கள்

Class No: 900
Acc No 533

பூபாலசிங்கம் புத்தகசாலை

202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.எண் : 0112422321, 0112435713
மின்னஞ்சல் :
Poobalasingham202@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | அலகு 01 / கைத்தொழிற் புரட்சி | 01 - 24 |
| 02. | அலகு 02 / இலங்கையில் பிரித்தானியர் அதிகாரத்தை நிலை நாட்டல். | 25 - 48 |
| 03. | அலகு 03 / இலங்கையில் தேசிய மறுமலர்ச்சி | 49 - 63 |
| 04. | அலகு 04 / பிரித்தானியரின் ஆட்சியில் இலங்கையின் அரசியல் மாற்றங்கள் | 64 - 81 |

**கணிப்பீட்டுப் பயிற்சிகள்.**

| | | |
|---|---|---|
| 05. | அலகு 01 / கைத்தொழிற் புரட்சி | 82 - 87 |
| 06. | அலகு 02 / இலங்கையில் பிரித்தானியர் அதிகாரத்தை நிலை நாட்டல். | 88 - 94 |
| 07. | அலகு 03 / இலங்கையில் தேசிய மறுமலர்ச்சி | 95 - 102 |
| 08. | அலகு 04 / பிரித்தானியரின் ஆட்சியில் இலங்கையின் அரசியல் மாற்றங்கள் | 103 - 108 |
| 09. | கணிப்பீட்டுப் பயிற்சிகளுக்கான விடைகள். | 109 - 110 |
| 10. | வரலாற்று விளக்கப்படங்களும் குறிப்புக்களும். | 111 - 124 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 01
# கைத்தொழிற் புரட்சி

## 01. கைத்தொழிற் புரட்சி என்றால் என்ன?

மனிதன் தனது கைகளினால் பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்தி பொருட்கள் உற்பத்தியை மேற்கொண்டதுடன் சுமார் ஆறு தசாப்த காலப்பகுதியில் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்ட பாரிய மாற்றமே கைத்தொழிற் புரட்சி என அழைக்கப்படுகிறது.

## 02. கைத்தொழிற் புரட்சியின் ஆரம்பத்தினையும் வளர்ச்சியையும் குறிப்பிடுக.

➢. 18ம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சி முதன் முதலில் ஆரம்பமானது.

➢. சுமார் அரை நூற்றாண்டுகளாகக் கைத்தொழிற் புரட்சியானது பிரித்தானியாவுக்குள் மாத்திரமே வரையறுக்கப்பட்டிருந்தது.

➢. ஆர்னோல்ட் ரொயின டீ என்ற வரலாற்று ஆசிரியரே இங்கிலாந்தில் (1760 - 1830) ஏற்பட்ட மாற்றங்களுக்கு "தொழில் புரட்சி" என்ற சொற் தொடரை முதலில் பயன்படுத்தினார்.

➢. கைத்தொழில் வளர்ச்சி மாற்றங்கள் கூட்டாகவும், வேகமாகவும் நடைபெற்றதால் "புரட்சி" என அழைத்தனர்.

➢. 19ம் நூற்றாண்டாகும் போது ஐரோப்பாவில் பிரான்ஸ், ஜேர்மனி, போர்த்துக்கல், ஸ்பானியா, ஒல்லாந்து முதலிய நாடுகளும் கைத்தொழில் புரட்சியில் ஈடுபடத் தொடங்கின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. கைத்தொழிற் புரட்சியானது முதன் முதலில் பிரித்தானியாவில் ஆரம்பித்தமைக்கான காரணங்கள் / பின்னணிகள் என்பவற்றைத் தருக.

➢. வெளிநாட்டு வர்த்தகம் விரிவடைந்தமை.
பிரான்ஸ், போர்த்துக்கல், ஸ்பானியா, ஒல்லாந்து ஆகிய நாடுகளில் வர்த்தகம் வளர்ச்சியடைந் திருக்கவில்லை. இந்நாடுகளை முந்திக் கொண்டு பிரித்தானியா வர்த்தகத்தில் முன்னணி வகித்தது.

➢. சனத்தொகைப் பெருக்கம்.
- 18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் பிரித்தானியரின் சனத்தொகை அதிகரித்தது.
- சனத்தொகை அதிகரிப்பு பண்டங்களுக்கான கேள்வியை அதிகரித்தது.
- கேள்வியை ஈடுசெய்வதற்கு உற்பத்தியை விரைவாக அதிகரிக்க வேண்டி இருந்தமை. (1770ல் 7.4 மில்லியனாக இருந்த சனத்தொகை 1840ல் 15.9 மில்லியனாக இரட்டித்தது.)

➢. விஞ்ஞான அறிவு வளர்ச்சியடைந்திருந்தமை, இதனால் இயந்திர சாதனங்களை உருவாக்கும் அறிவு பெறப்பட்டமை.

➢. கனிய வளங்கள் காணப்பட்டமை.
- இயந்திர சாதனங்களை இயக்கத் தேவையான இரும்பு, உருக்கு போன்ற கனியங்கள் பிரித்தானியாவில் காணப்பட்டமை.
- எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்ட நிலக்கரியும் அங்கு தாராளமாகக் காணப்பட்டது. (பேர்மிங்காம், இலங்காசயர், லிவர் பூல், மன்செஸ்டர் முதலிய பிரதேசங்களில் கிடைக்கப் பெற்றமை)
- குடியேற்ற நாடுகளிலிருந்தும் மூலப் பொருட்கள் கிடைக்கப் பெற்றமை.

➢. விவசாயத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களும் / தாராளமான தொழிலாளர்களின் நிரம்பலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நில உடமையாளர்களால் விவசாயிகளின் துண்டாக்கப்பட்டிருந்த சிறிய நிலங்கள் ஒன்றிணைக்கப்பட்டு பாரிய பண்ணைகளாக உருவாக்கப்பட்டன.
- நில அடைப்பு இயக்கத்தில் வேலையிழந்த விவசாயிகள் நகர்ப்புறங்களை நோக்கிப் புலம் பெயர்ந்தனர்.
- சிலுவை யுத்தங்கள் முடிவுற்றதனால் நில மானிய அடிமைகள் நகரங்களுக்கு வேலை தேடிச் சென்றமை.
- இக்காரணங்களினால் கைத்தொழிலுக்குத் தேவையான ஊழியர்கள் இலகுவாகக் கிடைத்தமை.

➢. **குடியேற்ற நாடுகள் அதிகமாகக் காணப்பட்டமை.**

- குடியேற்ற நாடுகள் பிரித்தானியாவிடமிருந்தே இறக்குமதி செய்ய வேண்டிய நிலையை கடல் வாணிபச் சட்டங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்டிருந்தமை.
- இந்தியாவிலிருந்து பருத்திப் பஞ்சையும், இலங்கையிலிருந்து இறப்பரையும் பெற்றுக் கொள்வது, தமக்குத் தேவையான மூலப் பொருட்களை குடியேற்ற நாடுகளிடமிருந்து பெற்றுக்கொண்டமை.
- குடியேற்ற நாடுகளை தமது சந்தையாக விரிவுபடுத்தியமை.

➢. தூரநோக்குள்ள அரசியல் கொள்கை காணப்பட்டது.

➢. சுதந்திரமான சமூக, பொருளாதாரப் பின்னணி காணப்பட்டமை.

- திறமைக்கேற்ற ஊதியம் பெறக்கூடியதாக இருந்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❧. சிறப்பான ஊதியம் சிந்தனை வளர்ச்சிக்கு வித்திட்டமை.
- ❧. பிரித்தானிய மக்களின் சமூக, மதச் சகிப்புத் தன்மையும், வெளிநாடுகளிலிருந்து கைத்தொழிலாளர்கள் வருகை தர உதவியது.

➢. பிரித்தானியாவில் வங்கித்துறை, நிதி நிறுவனங்கள வளர்ச்சி பெற்றமை

- ❧. முதலீடு செய்வதற்கான கடன் வசதிகளை வழங்கக் கூடிய வங்கியினரும், நிதி நிறுவனங்களும் பிரித்தானியாவில் தோற்றம் பெற்றமை.

➢. பிரித்தானியாவின் சிறந்த அரசியல் உறுதிப்பாடு. பொருளாதார வளர்ச்சிக்கு காரணமாக அமைந்ததுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சுதந்திரம், உதவிகள், வரிச்சலுகை, அரசியல் அமைதி, அரசின் பொருளாதாரக் கொள்கைகள் என்பனவும் கைத்தொழிற் புரட்சிக்கு வழிவகுத்தன.

➢. பிரித்தானியாவின் கேந்திர அமைவிடம்

- ❧. அத்திலாந்திக் சமுத்திரத்தின் மத்தியில் ஒரு தீவாகக் காணப்பட்டமை.
- ❧. துறைமுகங்கள், உள்நாட்டு நீர்ப்போக்குவரத்து, பாரிய வர்த்தகக் கப்பல்கள் கொண்ட துறை முகங்களாக இருந்தமை.

**04. கைத்தொழிற் புரட்சி பிரித்தானியா தவிர்ந்த மற்றைய ஐரோப்பிய நாடுகளில் முதலில் ஏற்படாமைக்குரிய காரணங்கள் யாவை?**

➢. சனத்தொகை வளர்ச்சி குன்றியமை, தேவைகள் அதிகரித்தமை.

➢. பத்தில் ஒன்பது பங்கினர் கிராமங்களிலேயே வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. நிலவுடமைச் சமூக அமைப்புக் காணப்பட்டமை.
- ➢. அடிமை முறை தொடர்ந்தும் காணப்பட்டமை.
- ➢. உள்நாட்டு இறைவரி முறை பாதகமாக அமைந்தமை.
- ➢. நெப்போலியன் யுத்தத்தால் அமைதி, தொழில் என்பன சீர் குலைந்திருந்தமை.
- ➢. பிரித்தானியாவைப் போன்று மூலப்பொருட்கள் தாராளமாகக் கிடைக்காமை.
- ➢. பிரித்தானியா பின்பற்றிய கொள்கைகள், ஏனைய நாடுகளின் கைத்தொழில் வளர்ச்சிக்கு பாதகமாய் அமைந்தமை.

  (உ + ம் : தமது உற்பத்திப் பொருட்களை மலிவாக விற்றமை)

**05. பிரித்தானியாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியை முன்னெடுத்துச் சென்ற மூன்று கைத்தொழில் துறைகளும் எவை?**

- ➢. நெசவுத் தொழில்
- ➢. இரும்புருக்குத் தொழில்
- ➢. நிலக்கரித் தொழில்

**06. கைத்தொழிற் புரட்சிக்காலத்தில் நெசவுக் கைத்தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சியைக் குறிப்பிடுக.**

- ➢. பிரித்தானியரின் துணி வகைகளுக்கு குடியேற்ற நாடுகளில் உயர் கேள்வி காணப்பட்டது.
- ➢. துணிகள் அதிக உற்பத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது.
- ➢. இச்சவால்களுக்கு முகங்கொடுக்கும் வண்ணம் புதிய கண்டுபிடிப்புக்கள் ஏற்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. நெசவுக் கைத்தொழில் சார்ந்த கண்டுபிடிப்புக்கள் பற்றிய அட்டவணை ஒன்றைப் பின்வரும் தலைப்புக்களைக் கொண்டு தயாரிக்குக.
ஆண்டு, கண்டுபிடிப்பாளர், கண்டுபிடிப்பு, பயன்கள்.

| ஆண்டு | கண்டு பிடிப்பாளர் | கண்டுபிடிப்பு | பயன்கள். |
|---|---|---|---|
| 1733 | ஜோன்கே | பறக்கும்நெசவு நூனாளி | நெசவு செய்யும் செயற்பாடு வேகமடைந்தது. |
| 1764 | ஜோன் ஹாக்கிரீவ்ஸ் | நூல் நூற்கும் ஜெனி | மிக நுண்ணியமான நூல் நூற்பதற்கு பயன்பட்டது. (கையினாலேயே இயக்கப்பட்டது) |
| 1769 | றிச்சார்ட் ஆக்ரைட் | வலுவினால் இயங்கும் நூல் சட்டம் | நல்தரபபருத்தி நூலை உற்பத்தி செய்யப் பயன் பட்டது. (பெரிதான இவ்வியந்திரம் நீரோட்ட வசதியுள்ள இடங் -களில் மாத்திரம் பயன்படுத்த முடிந்தது.) |
| 1776 | சாமுவல் குறொம்ரன் | மியூல் இயந்திரம (நூல் நூற்கும ஜெனியையும், நீர்ச்சட்டத்தையும் இணைத்த இயந்திரம்) | மென்மையானதும், சக்தி வாய்ந்ததுமான நூலை உற்பத்தி செய்ய முடிந்தது. |
| 1785 | எம்மன்ட் காட்ரைட் | விசைத்தறி | நீராவியால இயங்கும் நெசவு இயந்திரம் இதன் மூலம் நெசவுத் தொழில் துரிதப் -படுத்தப்பட்டது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. இரும்புருக்குக் கைத்தொழில் தொடர்பான கண்டு பிடிப்புக்கள் பற்றிக் குறிப்பிடுக.

- ➢. பிரித்தானியா இரும்புத்தாதை அதிகளவு கொண்ட நாடாக விளங்கியமையால் கைத்தொழிற் புரட்சிக்கு முன்னரே போர் ஆயுதங்கள், விவசாய உபகரணங்கள், வீட்டுப்பாவனைப் பொருட்கள் என்பனவற்றைத் தயாரிப்பதற்கு இரும்பும், உருக்கும் உற்பத்தி செய்யப்பட்டன.
- ➢. விறகு மூலமே இரும்புத்தாது முன்னர் உருக்கப்பட்டது. விறகினைக் கொண்டு பாரியளவு இரும்பையும், உருக்கையும் உற்பத்தி செய்ய முடியவில்லை.
- ➢. கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னரான பாரிய தேவையை நிறைவேற்றும் பொருட்டு மாற்று வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.
- ➢. நிலக்கரி மூலம் இரும்பு உருக்கும் முறை.
  - ✎. 1730ல் **ஆபிரகாம் டார்பி** விறகுக்குப் பதிலாக நிலக்கரியை உபயோகித்து இரும்பை உருக்கும் முறையைக் கண்டு பிடித்தார். இதன் மூலம் வார்ப்பு இரும்பை உற்பத்தி செய்ய முடிந்தது.
  - ✎. 1768ல் **ஜோன் றேபக்** நிலக்கரியிலிருந்து கந்தகத்தைப் பிரித்தெடுக்கும் முறையைக் கண்டு பிடித்தார்.
  - ✎. 1784ல் **ஹென்றிகோட்** ரோலர் மூலம் பதப்படுத்தப்பட்ட இரும்பு உருக்கும் முறையைக் கண்டுபிடித்தார்.
  - ✎. 1856ல் **ஹென்றி பேஸ்மர்** இரும்பிலிருந்து கழிவுகளை அகற்றி உருக்கு உற்பத்தி செய்யும் முறையைக் கண்டுபிடித்தார்.
  - ✎. 1870இல் **வில்லியம் சீமன்ஸ்** இரும்புத்தாதை உருக்கக் கூடிய மின் அடுப்பை கண்டுபிடித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. நிலக்கரிப்படிவுகள் பிரித்தானியாவில் அதிகளவில் காணப்பட்ட பிரதேசங்களைக் குறிப்பிடுக.
தென்வேல்ஸ், யோக்சயர், லங்காசயர், டர்ஹாம் நோதம்பர்லன்ட்

10. நிலக்கரிப்பயன்பாடுகள் பற்றியும், நிலக்கா அகழ்வின் மூலம் எதிர்நோக்கப்பட்ட பிரச்சிலை -களையும் குறிப்பிடுக.

பயன்பாடுகள்.

- இரும்பை உருக்குதல்.
- இயந்திரங்களை இயக்குதல்.
- வீட்டுப்பாவனைக்கு இலாபகரமானதும் செயல் திறன் மிக்கதுமான எரிபொருளாக விளங்கியது

**அகழ்வின் போது ஏற்பட்ட பிரச்சினைகள்.**

- நீரை வெளியேற்றத் தொழிலாளர்களே பயன் படுத்தப்பட்டனர்.
- ஆழமான அகழ்வின் போது சுரங்கத்தில் விஷ வாயு உருவாகுதல்.
- சுரங்கத்தில் வெப்ப நிலை அதிகரித்தல்.
- சுரங்கத்தில் வெளிச்சம் இல்லாதிருத்தல்.

**11. நிலக்கரிக் கைத்தொழில் தொடர்பான கண்டு பிடிப்புக்களையும் அவற்றின் பயன்பாடுகளையும் தருக.**

- **சுரங்கத்தைக் குளிரூட்டும் இயந்திரம்.**
  1735 இல் **தோமஸ் நியூகொமன்** என்பவர் சுரங்கத்தினுள் சேரும் நீரை குழாய் மூலம் வெளியேற்றவும், குழாய் மூலம் வெளியிலிருந்து வளியை அனுப்பி சுரங்கத்தைக் குளிரூட்டச் கூடிய நீராவியால் இயங்கும் இயந்திரமொன்றைச் கண்டுபிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. வினைத்திறன் மிக்க நீராவி இயந்திரம்
ஜேம்ஸ்வாட என்பவர் 1736ம் ஆண்டு நியூகொமனின் நீராவி இயந்திரத்தை விருத்தி செய்து, செயற்றிறன் மிக்க நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

➢. இரும்புக்கேபிள்கள் கண்டுபிடிக்கப்பட்டமை.
- இதுவரை காலமும் செப்புக்கம்பிகள் மூலம் பெண்களும், சிறுவர்களும் நிலக்கரியை சுரங்கத்திலிருந்து வெளியேற்றினர்.
- 1839ம் ஆண்டு இரும்புக்கேபிள்கள் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் அதன் மூலம் சுரங்கங்க -ளிலிருந்து இலகுவாக நிலக்கரியை வெளியே கொண்டு வர முடிந்தது.

➢. பாதுகாப்பு விளக்கு.
- 1812ம் ஆண்டில் ஹம்றிடேவி என்பவரால் பாதுகாப்பு விளக்கு கண்டுபிடிக்கப்பட்டது.
- இதனால் நிலக்கரிச் சுரங்கங்கள் வெளிச்சத்தைப் பெற்று, விபத்துக்களைத் தவிர்க்க முடிந்தது.

12. நிலக்கரிக் கைத்தொழிலின் முன்னேற்றம் காரணமாக வளர்ச்சி கண்ட உபதுறைகளைக் குறிப்பிடுக.

➢. நிலக்கரியை எரிக்கும் போது உண்டாகும் தார் பெரும் தெருக்களை அமைப்பதற்குப் பெரிதும் பயன்பட்டது.

➢. புடவைகளை நிறமூட்டுவதற்குத் தேவையான சாய வகைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

➢. மருந்துப் பொருட்கள், நறுமணப் பொருட்கள், கிருமிநாசினிகள், செயற்கைப் பசளை, திரவ எண்ணெய் போன்றன நிலக்கரிக் கழிவிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. **கைத்தொழில் புரட்சியால் வளர்ச்சியடைந்த வேறு துறைகளைக் குறிப்பிடுக.**

➤. போக்குவரத்துத் துறை ➤. தொடர்பாடல் துறை

➤. விவசாயத்துறை

14. **போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி (மாற்றங்கள்) பற்றி தருக.**

➤. கைத்தொழில் துறையில் ஏற்பட்ட பாரிய வளர்ச்சி காரணமாக தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருட்களைக் கொண்டு செல்லவும்.

➤. முடிவுப் பொருட்களை சந்தைக்கு கொண்டு செல்லவும், வீதிகளை மேம்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

➤. இதன் காரணமாக பல கண்டுபிடிப்புக்களும் ஏற்பட்டன.

**கண்டுபிடிப்புக்கள்.**

➤. 1811ல் **ஜோன் மக்கடம்** என்பவரால் பெருந் தெருக்கள் அமைக்கும் முறை கண்டுபிடிக்கப் பட்டது.

(வலுவான அத்திபாரமிட்டு பெரிய கற்களையும், மண்ணையும் பரப்பி அதன் மேல் சிறிய கற்களைப் பரப்பி அவற்றைத் தட்டி மட்டப்படுத்தி பெருந்தெருக்களை அமைத்தலே மக்கடம முறை எனப்பட்டது.)

➤. மக்கடம் முறையில் அமைக்கப்பட்ட பெருந் தெருக்களில் பண்டங்களையும், பயணிகளையும் சுமந்த வாகனங்கள் வேகமாகவும், வசதியாகவும் பயணம் செய்ய முடிந்தது.

➤. 1814ம் ஆண்டில் **ஜோர்ஜ் ஸ்டீவன்சன்** "ரொக்கட்" எனப்படும் நீராவியின் சக்தியால் இயங்கும் புகையிரத என்ஜினைக் கண்டுபிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௩. நிலக்கரி மற்றும் மூலப் பொருட்களைக் கொண்டு செல்வதற்குப் புகையிரத வண்டிகள் பெரிதும் பயன்பட்டன.
௪. கைத்தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்கள் விரைவாக ஒரே தடவையில் குறைந்த செலவில் கொண்டு செல்ல முடிந்தமை.

➢. 1807ல் அமெரிக்கரான **றொபட்புல்டன** புகைப்படகைக் கண்டுபிடித்தார். இக்கண்டு பிடிப்பானது நீர்வழிப் போக்குவரத்துக்கு வழிவகுத்தது.
➢. 1811ல் **ஹென்றிபெல்** புகைக் கப்பலைக் கண்டுபிடித்தார். இதற்காக ஆரம்பத்தில் எரி பொருளாக நிலக்கரியும், விறகும் பயன் படுத்தப்பட்டன.
➢. 1885ல் ஜேர்மனியரான **டெம்ளர்** மோட்டார் வண்டியைக் கண்டுபிடித்தார்.
➢. 1903ல் அமெரிக்கர்களான **ரைட் சகோதரர்கள** ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்தனர்.

**15. தொடர்பாடல் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியைக் குறிப்பிடுக.**

➢. 1804ல் "பெனி எனும் தபால் சேவை" ஆரம்பிக்கப் -பட்டது.
➢. 1844ல் அமெரிக்கரான **சாமுவல் மோர்ஸ** என்பவரால் தந்தி முறை கண்டுபிடிக்கப்பட்டது.
➢. 1876ல் அமெரிக்கரான **அலெக்சாண்டர் கிரகம்பெல்** தொலைபேசியைக் கண்டுபிடித்தார்.
➢. 1895ல் இத்தாலியரான **குக்லி மார்க்கோனி** வானொலியைக் கண்டுபிடித்தார்.
➢. 1940ல் **ஜோன்லோகி பெயாட்** தொலைக்காட்சியைக கண்டுபிடித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கைத்தொழில் புரட்சியினால் விவசாயத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களைக் (வளர்ச்சி) குறிப்பிடுக.

➢. பாரிய விவசாயப் பண்ணைகள் உருவாகின.

- கைத்தொழில் புரட்சியின் விளைவாக நகரங்களில் உருவான பாரிய தொழிற்சாலை -களுக்கு விவசாயிகள் நகர்ப்புறத்தை நோக்கி நகர்ந்தனர்.
- கிராமப் புறங்களில் பயிர்ச்செய்கை நிலங்களை விட்டு சிறு நில உரிமையாளர்களும் விவசாய நிலங்களைக் கைவிட்டனா.
- இவ்வாறு கைவிடப்பட்ட விவசாய நிலங்கள் நில அடைப்பு இயக்கம் மூலம் பாரிய விவசாயப் பண்ணைகளாக உருவாகின.
- 1773ல் பாராளுமன்றச் சட்டம் மூலம் நில அடைப்பு ஆரம்பிக்கப்பட்டது.
- இவவிவசாயப் பண்ணைகளில் நவீன தொழில் நுட்பமுறைகள் பயன்படுத்தப்பட்டமையால் வசாயத்துறை வளர்ச்சி கண்டது.

➢. சுழற்சி முறை, நிலமாற்று முறை, வரிசையாகப் பயிரிடும் முறை மேற்கொள்ளப்பட்டமை.

- நிலத்தில் பருவத்திற்குப் பருவம் பயிர்களை மாற்றி சுழற்சிப் பயிர்ச்செய்கையின் மூலம் நிலத்தின் வளத்தை மேம்படுத்தும் முறை பின்பற்றப்பட்டது.
- நிலமாற்றுமுறையை தேனிப்பு ரவுன் சென்ட் அறிமுகம் செய்தார். இதன் மூலம் நோய் பரவாமல் குறைத்துக் கொள்வதுடன், விளைத்திறனையும் அதிகரிக்கக் கூடியதாக -விருந்தது.
- ஜென் ரோட்டல் எனபவரால் ஏர் பூட்டப்பட்ட குதிரைகள் மூலம் வரிசையாகப் பயிரிடும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் விதைப்பதற்குத் தேவையான விதையின


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவைக் குறைத்துக் கொள்ளவும், அதிக விளைச்சலைப் பெற்றுக் கொள்ளவும் முடியுமாயிருந்தது.

- விளைச்சலை அதிகரிக்கும் வகையில் 1800ல் குவானோ உரம் தென்னாபிரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்டது.

➢. விலங்கு வளர்ப்பில் புதிய தொழில்நுட்பமுறைகள் பயன்படுத்தப்பட்டமை.

- **ரொபர்ட் பெக்பெல்** என்பவரால் மேற்கொள்ளப் -பட்ட செம்மறி ஆடுகள் இனப்பெருக்கம் தொடர்பிலான புதிய கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

➢. கைத்தொழிற் புரட்சி காரணமாக செயற்றிறன் மிக்க கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டமையால் விவசாயத்துறையில் பாரிய புரட்சி ஏற்பட்டது.

- விவசாய இரசாயன உற்பத்திகள், நவீன போக்குவரத்துச் சாதனங்கள், களஞ்சியப் -படுத்தும் வசதிகள் கண்டுபிடிக்கப்பட்டமை.
- காடுகளை அழிப்பதற்கும், நிலத்தைப் பயன்படுத்துவதற்கும், விதைகளை உற்பத்தி செய்வதற்கும் நவீன கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

**17. 19ம் நூற்றாண்டில் கைத்தொழிற் புரட்சி வேறு நாடுகளில் பரம்பல் அடைந்தமைக்கான காரணங் -களைக் குறிப்பிடுக.**

➢. உலகம் முழுவதும் சனத்தொகைப் பெருக்கம் துரித வளர்ச்சியடைந்தமையால் பொருள்களுக்கான கேள்வி அதிகரித்தமை.

➢. ஐரோப்பாவில் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃ. ஆஸ்திரியப் பேரரசால் 30,000 மைல் நீளமான பாதைகள் அமைக்கப்பட்டமை.

ஃ. பெல்ஜியத்தில் வீதிக்கட்டமைப்பு இரு மடங்காக அதிகரிக்கப்பட்டது.

ஃ. பிரான்சில் தெருபபோக்குவரத்துடன் கால்வாய்ப் போக்குவரத்தும் ஆரம்பிக்கப்பட்டது.

ஃ. 1840ம் ஆண்டளவில் எல்லா நாடுகளிலும் புகையிரத வீதிகள் அமைக்கப்பட்டன.

➢. பிரான்சிலும், ஜேர்மனியிலும் நிலக்கரி கண்டு பிடிக்கப்பட்டமை.

ஃ. ஜேர்மனியிலும், பிரான்சிலும் மூலப்பொருட்கள் காணப்பட்ட பிரதேசத்திற்கும் சமீபமாக கைத்தொழிற்சாலைகள் தோற்றம் பெற்றன.

(உ + ம் : பிரான்ஸ் - அல்சேஸ்லொறன்,
பெல்ஜியம் - நூர் நதிப்பள்ளத்தாக்கு)

➢. வர்த்தக வளர்ச்சியின் பொருட்டு சட்டங்கள் நிர்வாகச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டமை.

➢. கைத்தொழில்களுக்கும், வீதி அமைத்தலுக்கும் அரச அனுசரணை கிடைத்தமை.

➢. யுத்த காலத்தில் இங்கிலாந்தில் பஞ்சு ஏற்றுமதி தேக்க நிலை அடைந்தமை. இதனால் ஐரோப்பாவில் கம்பளி உடைக்கும் கேள்வி அதிகரித்தமை.

➢. சுதந்திரம் பெற்ற பின்னர் அமெரிக்காவில் கைத்தொழிற்துறை வேகமாக வளர்ச்சி கண்டமை.

➢. ஜப்பான் மேலைத்தேய முறைகளைப் பின்பற்றி கைத்தொழில் துறையில் அதிக வளர்ச்சி கண்ட ஒரே நாடாகத் திகழ்ந்தது.

➢. 20ம் நூற்றாண்டின் போது சீனா, இந்தியா, இலங்கையிலும் கைத்தொழிற் புரட்சியின் செல்வாக்கு காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட மாற்றங் - களை / விளைவுகளைக் குறிப்பிடுக.

I. அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்.

II. பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்.

III. சமூகத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்.

19. கைத்தொழில் புரட்சியின் காரணமாக அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக.

➤. முதலாளி தொழிலாளி வகுப்பு வேறுபாடுகள் முரண்பாடுகள் ஏற்பட்டன.

➤. உச்ச இலாபம் பெறும் நோக்கில் முதலீடு செய்த முதலாளிமார் (பணக்கார வகுப்பினர்) தொழிலாளியின் உழைப்பைச் சுரண்டி குறைந்த கூலியை வழங்கினர். இதன் காரணமாக தொழிலாளரின் வாழ்கை கீழ் மட்டத்தில் காணப்பட்டது. இதன் காரணமாக தொழிலாளி, முதலாளி வர்க்கத்திற்கிடையில் முரண்பாடு தோன்றியது.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

➤ தொழிற்சங்கங்கள் தோற்றம் பெற்றன. தொழிலாளர்களின் நலன்

உ. தொழிலாளிகளின் நலன் பேணவும், அவர்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் இவை தோன்றின. தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தங்கள் என்னும் வகையிலான தொழிலாளர்களின் உரிமைப்போராட்டங்கள் ஆரம்பித்தன.

➤. புதிய அரசியல் கருத்துக்கள் தோற்றம் பெற்றன.

உ-. ரொபர்சென் என்பவரால் சமூகவுடமைவாதம் உருவாக்கப்பட்டது.

உ. கால்மாக்ஸ் என்பவரால் பொதுவுடமை வாதக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

Class No:
Acc No 533



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முதலாளித்துவம் என்னும் எண்ணக்கருவை அரசின் தலையிடாக் கொள்கையாக முன்வைத்தார்.
- பொதுவுடமைவாதம், தாராண்மை வாதம் முதலாளித்துவ வாதம், புதிய பேரரசு வாதம் என்பன கைத்தொழில் புரட்சியால் ஏற்பட்ட அரசியல் கொள்கைகளாகும்.

➢. குடியேற்றநாடுகளைக் கைப்பற்றுவதில் அதிகாரப் போட்டி ஏற்பட்டமை.

- குடியேற்ற நாடுகளிலிருந்து மூலப்பொருட்களை குறைந்த விலைக்குப் பெறவும், அதிக விலைக்கு முடிவுப் பொருட்களைச் சந்தைப்படுத்தவும் அரசியலில் ஆதிக்கப்போட்டிகளில் ஐரோப்பிய நாடுகள் இறங்கின.
- 1850களின் பின்னர் ஏற்பட்ட குடியேற்ற வாதக் கொள்கை புதிய குடியேற்ற வாதம் எனப்பட்டது. (நவகுடியேற்ற வாதம்) குடியேற்ற நாடுகளை விஸ்தரிக்கும் போட்டியில் வல்லரசுகள் இறங்கியமையே முதலாம் உலக மகா யுத்ததிற்கு வழிவகுத்தது.

➢. பிரித்தானியப் பாராளுமன்றத்தில் தொழிலாளர் நன்மை கருதி பல சட்டங்கள் இயற்றப்பட்டன.

- 1832ம் ஆண்டு தொழிற்சாலை சுகாதார ஏற்பாடுகள், விபத்துக்களைத் தடுக்கும் முறை, சிறுவர்களை தொழிற்சாலைகளுக்கு வேலைக்கமர்த்துதல், தொழிலாளர் தொடர்பான சட்ட திட்டங்கள் என்பன இயற்றப்பட்டன. 1833, 1844, 1847, 1850 களில் தொழிலாளர் பாதுகாப்பு சம்மந்தமான பல சட்டங்கள் இயற்றப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Class No. Acc No. Municipal Council Vavuniya Public Library

20. கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட அரசியல் (விளைவுகள்) நன்மைகள், தீமைகள் என்பவற்றைக் குறிப்பிடுக.

நன்மைகள்

➢. உரிமைப் போராட்டங்களை மேற்கொண்டு தொழிலாளர்கள் தமது உரிமைகளைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது.

➢. முதலாளித்துவ கொள்கையால் இலாபம் கருதி பாரிய முதலீடுகள், முயற்சிகள் பெருகின.

➢. தலையிடாக் கொள்கை காரணமாக தனியார் துறையினர் போட்டியுடன் ஈடுபட்டு தொழில்கள் பெருகின.

➢. வர்த்தகம் தொடர்பான எண்ணக்கருக்கள் வளர வர்த்தகம் வளர்ச்சி கண்டது.

தீமைகள்

➢. குடியேற்றவாதக் கொள்கையால் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே பிணக்குகள் ஆரம்பித்தன.

➢. குடியேற்றங்கள் விஸ்தரிக்கும் போட்டி 1ம் உலக மகா யுத்தத்திற்கு வழிவகுத்தது.

➢. தலையிடாக் கொள்கை காரணமாக தொழிலாளர் -களுக்கு முழுமையான பாதுகாப்பு கிடைக்கப் பெறாத நிலை ஏற்பட்டது.

➢. முதலாளித்துவ கொள்கை காரணமாக சமூக, விரோத உற்பத்தி விற்பனைகள் இடம்பெறத் தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. **கைத்தொழில் புரட்சியின் காரணமாக பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக.**

➢. கைத்தொழில் உற்பத்திகள் அதிகரித்தன.

➢. வர்த்தக நடவடிக்கைகள் பொருளாதாரத்தில் முதன்மை பெற்றன.

- விவசாயப் பொருளாதாரம் பின் தள்ளப்பட்டு ஏற்றுமதிப் பொருளாதாரம் முன்னிலைப் படுத்தப்பட்டது.
- தன்னிறைவுப் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டு சம்பளத்திற்கு வேலை செய்யும் வகுப்பு உருவானது.
- உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் விருத்தி அடைந்தது.

➢. ஐரோப்பிய, ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் தமது வர்த்தக நடவடிக்கைகளை விரிவு படுத்தியதன் விளைவாக முதலாளித்துவ பொருளாதார முறைமை வளர்ச்சியுற்றது.

➢. பல்தேசியக் கம்பனிகள் தோற்றம் பெற்றன.

- விரிவடைந்த வர்த்தக நடவடிக்கைகளுக்காக பண்டம் முதலீடு செய்தலானது தனிப்பட்ட முயற்சிகளினால் மேற்கொள்ள முடியாது போனது. இதனால் முயற்சியாளர்கள் ஒன்றிணைந்து கூட்டு வர்த்தகக் கம்பனிகளை உருவாக்கினர்.
- 19ம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் இந்த உள்நாட்டு வர்த்தகக் கம்பனிகள் பல்தேசிய வர்த்தகக் கம்பனிகள உருவாகின.
- இக்கம்பனிகள் பொருள் உற்பத்தி, விற்பனை -யிலும், நிதி மற்றும் வங்கி நடவடிக்கை -களிலும் ஈடுபட்டனர். வர்த்தகர்களுக்குக் கடன் வசதிகள் என்பவற்றை வழங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம் : ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி
ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி
பிரான்சிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி

➢. இங்கிலாந்து உலகின் தொழிற்சாலையாக மாறியது.
    ✎. மரபுமுறை விவசாய நாடான இங்கிலாந்து 19ம் நூற்றாண்டில் கைத்தொழில் நாடாக மாறியது.

➢. தொழிற்பகுப்பு சிறப்புத் தேர்ச்சி உருவானது.
    ✎. கைத்தொழிலுக்கு தொழிற்பகுப்பு நன்மை அளித்தது. அதனால் குடிசைக் கைத் தொழிலுக்குப் பாதகம் ஏற்பட்டது.

**22. பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட நன்மைகள், தீமைகளைக் குறிப்பிடுக.**

**நன்மைகள்.**

➢. கைத்தொழிற்சாலைகள் அதிகரித்தமை.
➢. உற்பத்திகள் பெருகின.
➢.. வேலை வாய்ப்புக்கள் அதிகரித்தமை.
➢. மக்களின் வருமானங்கள் உயர்ந்தன.
➢.. வாழ்க்கைத் தரம் உயர்வு பெற்றது.
➢. வங்கித்துறை வளர்ச்சியால் சேமிப்பு, கடன் பெறல் போன்ற வசதிகள் ஏற்பட்டன.
➢. நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் இலகு படுத்தப் பட்டன.
➢. வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, தொடர்பாடல் போன்ற துறைகள் வளர்ச்சி கண்டன.
➢. வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சி கண்டது.

**தீமைகள்**

➢. முதலாளி, தொழிலாளி எனும் வர்க்க வேறுபாடு ஏற்பட்டது.
➢. நகர்ப்புறங்களை நோக்கிய தொழிலாளர் நகர்வு கிராமிய தன்னிறைவு பொருளாதாரத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. சம்பளத்திற்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் வகுப்பு உருவானது.

➢. தொழிற்பிரிப்பின் காரணமாக இயந்திரப் பாவனை அதிகரிப்பு வேலை வாய்ப்பின்மையை ஏற்படுத்தியது,

➢. உழைப்பு சுரண்டல் நிலை, வேலைநிறுத்தப் போராட்டங்கள் ஏற்பட்டன.

**23. கைத்தொழிற் புரட்சியினால் சமூகத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடுக.**

➢. நகரங்கள் தோற்றம் பெற்றன.

✎. கைத்தொழில் விரிவாக்கத்தின் காரணமாக கிராமிய மக்களின் குடிப்பெயர்வு, அங்கு கிடைக்கப்பெற்ற வேலை வாய்ப்பு என்பன நகரங்கள் உருவாவதற்கு காரணமாகின.

➢. நகரங்களில் சனத்தொகை அதிகரிப்பு.

✎. கைத்தொழில் மயமான நகரங்கள் சனநெருக்கமிக்கவையாக மாறின. அதனால் சனத்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு ஏற்ப அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப் படவில்லை. வியன்னா நகரில் 1847ம் ஆண்டுக்கு முன்னரான 20 வருட காலப் பகுதியில் சனத்தொகை 20% இனால் வளர்ச்சியடைந்தது. ஆனால் வீடமைப்பு 11.5% மாத்திரமே வளர்ச்சி கண்டது.

➢. வகுப்பு ரீதியான சமூக அமைப்பின் தோற்றம். சமூகத்தில் செல்வந்தர் ஏழை என்ற பிரிவினர் தோற்றம் பெற்றனர். தொழிற்சாலைகளை உருவாக்கி நிர்வாகித்தோர் செல்வந்தர்களாகவும், அங்கு வேலை செய்தோர் ஏழைகளாகவும் விளங்கினர். செல்வந்தர்கள் ஏழைகளான தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி அதன் மூலம் இலாபமீட்டினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வந்தர்கள் சொகுசான வாழ்க்கை வாழ, தொழிலாளர்களோ, உரிமையோ, செல்வாக்கோ அற்றவர்களாக வாழ்ந்து வந்தனர்.

➢. செல்வந்த வகுப்பினர் இரு பிரிவுகளாக செல்வாக்குப் பெற்றனர்.
   - பிரபுக்கள், மத்திய வகுப்பினர் என இரு பிரிவினைக் கொண்டிருந்தனர். பிரபுக்கள் நிலச் சொந்தக்காரர்களாகவும், உயர்ந்தவர் -களாகவும் காணப்பட்டனர்.
   - வங்கியாளர்கள், ஒப்பந்தக்காரர், சிறு வியாபாரிகள், தொழில்நுட்பவியலாளர்கள் என்போர் மத்திய வகுப்பினராகவும் கருதப்பட்டனர்.
   - இவ்விரு வகுப்பினரும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்திச் சொகுசாகவும், உல்லாசமாகவும் வாழ்ந்தனர்.

➢. தொழிலாளர் வாழ்க்கை துன்பகரமானதாக இருந்தது.
   - குறைந்த வருமானத்துடன் கணவன், மனைவி இருவரும் வேலை செய்ய வேண்டி இருந்தது.
   - நீண்டநேர வேலை (12 - 14 மணித்தியாலங்கள்)
   - பாதுகாப்பற்ற தொழிற்சாலைகளில் வேலை செய்ய வேண்டிய நிலை.
   - சேரிப்புறங்களில் குடியிருப்பு
   - சுகாதார வசதியின்மை.
   - வேலையின்மை.
   - பிள்ளைகளை வேலைக்கமர்த்த வேண்டிய நிலை.

➢. சூழல் மாசடைதல்.
   - தொழிற்சாலைக்கழிவுகள், ஆறுகள், கால்வாய்களில் கலக்கப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. பருத்தித் தொழிற்சாலைகளில் சுவாச நோயால் இறப்பு.

ஆ. தொழிற்சாலைகளில் வெளியேறும் புகை வளிமண்டலத்தில் நிலைப்பதனால் ஏற்படும் மனித அச்சுறுத்தல்.

➢. சிறுவர் துஷ்பிரயோகங்கள் நிகழ்தல்.

**24. இலங்கையில் கைத்தொழில் புரட்சியின் செல்வாக்கினால் ஏற்பட்ட மாற்றங்களைத் தருக.**

**1. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகளில் முதலீடுகள ஏற்பட்டமை.**

ஆ. பெருந்தோட்ட உரிமையாளர்கள், தொழிற் - சாலை உரிமையாளர்கள் பணக்கார வகுப்பினராக உருவானமை. பிற்காலத்தில் கல்வி கற்ற செல்வந்த மத்திய தர வகுப்பினர் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றனர்.

ஆ. தொழிலாளர் வகுப்பு உருவானமை.

ஆ. தென்னிந்திய தொழிலாளர்கள் வரவழைக்கப் -பட்டமை.

➢. ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் முன்னிலை பெற்றமை

ஆ. முதலாளித்துவ பொருளாதார முறை இலங்கையிலும் வளர்ச்சியடைந்ததுடன், ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் முன்னேற்றம் கண்டது.

ஆ. வர்த்தக நடவடிக்கைகளுக்கு பணம் அனுப்பும் பொருட்டு வங்கிச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆ. பல நிதி நிறுவனங்கள் தோற்றம் பெற்றன.

ஆ. 1804ல் ஆளுநர் பிரட்ரிக் நோத் கோப்பி விதைகளைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலையை ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. இயந்திர சாதனங்கள் மூலம் தேயிலைக் கொழுந்தை உலர்த்துதல், ஏற்றுமதிக்கு தரப் - படுத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

➢. நகரங்கள் வளர்ச்சியடைந்தன. போக்குவரத்து காரணமாக வர்த்தக நிலையங்கள் வளர்ச்சி கண்டன.

## 2. போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் / வளர்ச்சிகள்.

➢. பெருந்தோட்ட உற்பத்திகளை கொழும்பிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கும், துறை முகத்துக்கும் கொண்டு செல்ல வேண்டிய தேவையும், பெருந்தோட்டத் துறைக்குத் தேவையான பண்டங்களைக் கொண்டு வரவும் போக்குவரத்துத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது.

➢. பெருந்தெருக்களும், புகையிரதப் பாதைகளும் அமைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

✎. ஆளுனா எட்வேட் பாண்ஸின் காலத்தில் பின்வரும் பெருந்தெருக்கள் அமைக்கப் பட்டன.

1. கண்டி - கொழும்பு பிரதான வீதி
2. குருணாகலை - கண்டிப்பெருந்தெரு
3. தம்புள்ள - கண்டிப்பெருந்தெரு

✎. 1850ம் ஆண்டின் பின்னர் கல்லும், தாரும் பயன்படுத்தித் தெருக்கள் அமைக்கப்பட்டன.

✎. ஆறுகளுக்குக் குறுக்காக மரப் பாலத்திற்குப் பதிலாக இரும்புப் பாலங்கள அமைக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. ஆளுநர் ஹென்றி வார்ட் அவர்களால் புகையிரத வீதிகள் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப பட்டது.

அ.1858ம் ஆண்டு ஆரம்பித்த கண்டி - கொழும்பு புகையிரதப்பாதை 1863ல் நிறைவடைந்தது.

ஆ.ஆளுநர் ஹேர்குலிஸ் றொபின்சன் கண்டியி -லிருந்து நாவலப்பிட்டி வரை 1871ம் ஆண்டளவில் அமைத்தார்.

இ.1899ம் ஆண்டு சேர் ஆதர் கோடன் பேராதனையிலிருந்து பண்டாரவளை வரையும் புகையிரதப பாதையை நீடித்தார்.

## 3. தொடர்பாடல் ரீதியான அபிவிருத்திகள்.

➢. நீண்ட காலமாக ஆட்கள் மூலமாகவே இலங்கையில் செய்திப் பரிமாற்றம் நிலவியது. 1815 இல் கொழும்பு, திருகோணமலை, காலி, கண்டி, யாழ்ப்பாணம் ஆகியவைகளை இணைக்கும் தபால் சேவை இலங்கையிலே ஆரம்பிக்கப்பட்டது.

➢. ஆசியாவிலேயே முதன் முதலாக குதிரை வண்டி மூலமான தபால் சேவை இலங்கை -யிலேயே ஆரம்பிக்கப்பட்டது.

➢. 1857ல் முதன் முதலாக இலங்கையில் தபால் முத்திரை வெளியிடப்பட்டது.

➢. 1858ல் தந்தி மூலமான செய்திப்பரிமாற்றம் அறிமுகப்படுத்தப்பட்டது.

➢. 1903ல் 340 தபால் நிலையங்கள் செயற்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 02
# இலங்கையில் பிரித்தானியர் அதிகாரத்தை நிலை நாட்டல்.

01. பிரித்தானியர் இந்தியாவில் ஏற்படுத்திக் கொண்ட வர்த்தகத் தொடர்புகளைத் தருக.

➢. 1600ம் ஆண்டு ஆங்கிலேயேக் கிழக்கிந்தியக் கம்பனியை உருவாக்கினர்.

➢. வில்லியம் ஹோகின்ஸ் 1608ல் சூரத்தை அடைந்து மொகலாய மன்னன் ஜஹாங்கீரிடம் வர்த்தக அனுமதியைப் பெற்றான்.

➢. இந்தியாவில் நிறுவப்பட்ட வர்த்தக நிலையங்கள்.

| | | |
|---|---|---|
| ❧. | மசூலிப் பட்டினம் | - கி.பி. 1625 |
| | சுராக் | - கி.பி. 1625 |
| | திருவாங்கூர் | - கி.பி. 1625 |
| ❧. | சென்னை | - கி.பி. 1639 |
| | பம்பாய் (மும்பை) | - கி.பி. 1661 |
| | கல்கத்தா | - கி.பி. 1690 |

(குறிப்பு : 1664ல் பிரான்சியரும் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியை நிறுவினர். பாண்டிச்சேரி, காரைக்கால், சந்திரநாகூர் போன்ற இடங்களில் வர்த்தக நிலையங்கள் நிறுவப்பட்டன.)

02. பிரித்தானியர் இலங்கை மீது அதிக கவனம் செலுத்தியமைக்கான காரணங்களைத் தருக.

➢. இலங்கையின் அமைவிடம்.

❧. கீழைத்தேச, மேலைத்தேச வர்த்தகப் பாதையின் மையத்தில் கேந்திர நிலையமாக விளங்கியமை.

❧. இந்தியாவைச் சூழவுள்ள பிரதேசங்களில் கடற்படை வர்த்தக ஆதிக்கம் என்பவற்றை நிலை நாட்ட இலங்கையின் அமைவிடம் பொருத்தமானதாக இருந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. தமது கப்பல்களை திருத்தியமைக்கப் பொருத்தமான துறைமுகங்கள் காணப்பட்டமை.
- ➢. இந்தியாவுக்கு கிழக்கு, மேற்கு வர்த்தக நடவடிக்கைகளை இலங்கையிலிருந்து நிர்வகிக்க முடிந்தமை.

➢. திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம்.

- ➢. திருகோணமலைத் துறைமுகம் வங்காள விரிகுடாவை நோக்கி அமைந்திருந்தமை.
- ➢. இநதியாவின் கிழக்குக் கரையோரத்தில் கடற்படைப் பலத்தைப் பாதுகாக்க இத்துறைமுகம் பொருத்தமானதாக இருந்தமை.
- ➢. வடகிழக்குப் பருவக்காற்றுக் காலத்தில் கப்பல்களைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இருந்தமை.
- ➢. பிரான்சியருடனான மோதலில் பழுதடைந்த கப்பல்களை திருத்திக் கொள்ள திருகோணமலைத் துறைமுகம் பொருத்த - முடையதாய் இருந்தமை.

➢. வர்த்தக முக்கியத்துவம்.

- ➢. இலங்கை கறுவா உட்பட பல வாசனைத் திரவியங்களுக்கு புகழ்பெற்று விளங்கியது.
- ➢. இலங்கைக் கறுவாவுக்கு ஐரோப்பிய சந்தையில் அதிக கேள்வி நிலவியமை.
- ➢. கறுவா வியாபாரத்தில் தனியுரிமை பெற்று அதிக இலாபம் ஈட்ட விரும்பியமை.
- ➢. மிளகு, ஏலம், கராம்பு, முத்து, மாணிக்கம் யானைத் தந்தம் போன்ற பெறுமதிமிக்க வர்த்தகப் பொருட்கள் இலங்கையில் கிடைக்கப் பெற்றமை.
- ➢. மூலப்பொருட்களைப் பெறுதல், சந்தை வாய்ப்புக்களை விரிவுபடுத்தல்
- ➢. சீனாவுடனான பிரித்தானிய வர்த்தகத்தை பாதுகாத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. **பிரித்தானியருக்கும் கண்டி இராச்சியத்திற்குமான தொடர்புகளைக் குறிப்பிடுக.**

➢. 1762ல் ஜோன்பைபஸ் குழு வருகை. (கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் வேண்டுகோளின் படி)

- பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனியால் அனுப்பப்பட்ட முதலாவது குழுவாகும்.
- இலங்கையின் அரசியல் நிலை அறிதல், கண்டியுடனான இராஜதந்திர உறவு முறைகளை மதிப்பிடுதல், கரையோர வர்த்தக உரிமையைப் பெறுதல் போன்றன. இக்குழுவின் நோக்கங்களாக அமைந்தன.
- ஐரோப்பாவில் பிரித்தானியருக்கும் ஒல்லாந்த -ருக்கும் இடையில் நிலவிய நட்பு உறவின் காரணமாக ஒல்லாந்தரை விரட்டும் மன்னன் கோரிக்கையை நிறைவேற்ற முன் வராததால் இக்குழுவின் வருகையினால் சாதகமான விளைவுகள் எதுவும் நிகழவில்லை.
- பைபஸ் தூதுக்குழுவின் வருகை ஒல்லாந்தருக்கும் ஆச்சரியத்தையளித்ததுடன் கண்டி மீது யுத்தம் தொடுக்கத் தயாராகினர்.

➢. 1782ல் ஹியுபொயிட் தூதுக் குழு வருகை.

- இக்குழுவின் நோக்கம் பிரித்தானிய இராணுவத் தலையீடாக இருந்தது.
- ஒல்லாந்தருக்கு எதிராக இராணுவ உதவி வழங்குவது, திருகோணமலையைக் கைப்பற்றி பின் அங்கு தங்கும் படையினருக்குரிய தேவைகளை மன்னன் நிறைவேற்ற வேண்டும் என்பவையே பிரதான நோக்கங்களாக அமைந்தன.
- கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் 34 வருட ஆட்சியின் பின் பதவியேற்ற இராஜாதி இராஜசிங்கன் பிரான்சியரின் தாக்குதலால் சிதறுண்ட பிரித்தானியருடன் உடன்படிக்கை செய்யத் தயங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. 1795ல் றொபர்ட் அன்ட்றூஸ் தூதுக்குழு வருகை.
  - ✎. ஆகஸ்ட் மாதம் 1795ல் திருகோணமலைத் துறைமுகத்தைக் கைப்பற்றியதன் பின்னர் இராஜாதி இராஜசிங்கனைச் சந்தித்தான்.
  - ✎. இலங்கையில் ஒல்லாந்தர் வசமுள்ள ஏனைய கோட்டைகளைக் கைப்பற்றுவதே நோக்கமாயிருந்தது.

**04. பிரித்தானியர் இலங்கையில் தமது ஆதிக்கத்தினை நிலை நாட்டிய சந்தர்ப்பங்களை எழுதுக.**

- ➢. 1796ம் ஆண்டில் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி கரையோரப் பிரதேசங்களில் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தியது.
- ➢. 1802ல் கரையோரப்பிரதேசங்கள் முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்படுதல்.
- ➢. 1815ம் ஆண்டில் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றல்.

**05. கியூ கடிதம் என்பது யாது?**

- ➢. ஒல்லாந்த மன்னன் 5ம் வில்லியத்தால் (ஸ்டெட். ஹோல்டர்) பிரித்தானியருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கடிதமாகும்.
- ➢. ஒல்லாந்தர் வசமிருந்த இலங்கையின் பிரதேசங்கள் பிரான்சியரின் கைவசமாவதைத் தடுப்பதற்கும்.
- ➢. ஆங்கிலப் படைகளை அப்பிரதேசங்களுக்கு அனுமதிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- ➢. இங்கிலாந்தின் கியூ மாளிகையிலிருந்து எழுதியமையால் கியூகடிதம் எனப்பட்டது.

**06. கியூ கடிதத்தைப் பிரித்தானியர் தமக்கு சாதகமாக எழுதிக்கொண்டமைக்கான சந்தர்ப்பத்தினைக் குறிப்பிடுக.**

- ➢. பிரான்சின் புதிய இராணுவக் கொள்கை காரணமாக ஒல்லாந்து ஆக்கிரமிக்கப்பட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்து இளவரசன் 5ம் வில்லியம் பிரித்தானியாவில் தஞ்சமடைந்தான்.

➢. இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் பிரான்சின் ஆதிக்கத்திற்கு உட்படும் சந்தர்ப்பம் உருவானது.

➢. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை ஒல்லாந்து ஆளுநருக்கு அக்கடிதத்தை தமக்குச் சார்பாக எழுதுவித்தனர்.

**07. இலங்கையின் கரையோரப்பிரதேசம் பிரித்தானி -யரின் வசமான முறையை எழுதுக.**

➢. கியூக் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட ஒல்லாந்த ஆளுநர் பன்எங்கல்பக் அக்கடிதத்தை ஏற்க மறுத்தார். (1795, பெப்ரவரி மாதம்)

➢. 1795ம் ஆண்டு காலப்பகுதியில் ஒல்லாந்தா வசமிருந்த திருகோணமலைக்கோட்டை தாக்கப்பட்டது. இத்தாக்குதலால் (ஒல்லாந்தா்) பன் எங்கல்பெக் நிபந்தனையற்ற முறையில் அடி பணிந்தான்.

➢. அதனைத் தொடர்ந்து ஒல்லாந்தர் வசமிருந்த கரையோரப்பிரதேசங்கள் பிரித்தானியரின் வசமாகியது.

26.08.1795 திருகோணமலை
17.09.1795 மட்டக்களப்பு
27.09.1795 யாழ்ப்பாணம்
05.10.1795 மன்னார்
24.11.1796 புத்தளம் / கற்பிட்டி
ஜனவரி 1796 நீர்கொழும்பு, காலி
16.02.1796 கொழும்பு

**08. இலங்கையில் கரையோரப்பிரதேசங்களில் பிரித்தானியர் ஆட்சி நடைபெற்ற முறையைத் தருக.**

➢. ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் ஆட்சி. (1796 - 1798)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃ. சென்னை நிர்வாகத்தினால் கரையோரப் பிரதேசத்தை நிர்வகிக்க (ரெசிடன்) வதிவிடப் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டார்.

ஃ. அவரால் வரி வசூலிப்பதற்கென கலெக்டர் எனப்படும் உதவிப்பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டனர்.

ஃ. இவர்களின் நிர்வாக மையம் கச்சேரி எனப்பட்டது.

ஃ. கலெக்டர்களுக்காக உதவி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் அவுமில்தாரர்கள் என அழைக்கப்பட்டனர்.

ஃ. இவர்கள் உதவிக்கு மேலும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அதிகாரிகள் அனைவரும் கலக்டரின் மேற்பார்வையின் கீழ் வரி வசூலிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

**09. 1797ல் பிரித்தானிய (ஆங்கில) கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் ஆட்சிக்கு எதிராக கலவரங்கள் ஏற்பட்டமைக்கான காரணிகளைத் தருக.**

➢. சென்னையிலிருந்து வரவழைக்கப்பட்ட அதிகாரிகள் இந்நாட்டின் மொழி, கலாச்சாரம், சம்பிரதாயம் போன்றவற்றில் அனுபவம் இல்லாமை. இதன் காரணமாக கரையோர சுதேசிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டமை.

➢. தமது செலவினைச் சமாளிக்க புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டமை.

உ + ம் : (தென்னை வரி, கள் வரி, சாராய வரி, உப்பு வரி)

ஃ. வரிகள் பணமாக அறவிடப்பட்டமை.

ஃ. 10 தென்னை மரங்களுக்கு மேல் உள்ள காணிகளில் ஒரு தென்னை மரத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வெள்ளிக்காசு வீதம் வரி செலுத்த வேண்டியிருந்தது.

ஃ. அறுவடையைக் கருத்திற் கொள்ளாது வரி வசூலிக்கப்பட்டமை.

➤. முதலியார், முகாந்திரம் போன்றோரின் எதிர்ப்பு.

ஃ. இதுவரை சிவில் இராணுவ அதிகாரங்கள் பெற்றிருந்த இவர்கள் கைவிடப்பட்டு தென்னை மர வரியையும் செலுத்த வேண்டியவர் - களாயினர்.

ஃ. இவர்களே கலகத்தைத் தூண்டுதில் பிரதான செல்வாக்குச் செலுத்தினர்.

➤. பாரம்பரிய நிர்வாக வரி சேகரிக்கும் முறைகளில் அக்கறை செலுத்தாமை.

**10. 1797ம் ஆண்டுக் கலகத்தினால் ஏற்பட்ட விளைவு -களைத் தருக.**

➤. கிளர்ச்சி பற்றி ஆராய்ந்து சீர்திருத்தங்களைப் பரிந்துரைக்க பிரிகேடியர் ஜெனரல் டி மியூரன் தலைமையில் மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

➤. 1798ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஆங்கிலேயர் நிர்வாகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன.

**11. மியூரன் குழுவின் பரிந்துரைகளைத் தருக.**

➤. வரி வசூலிப்பதில் சென்னை அவுமில் தாரர்களுக்குப் பதிலாக சுதேச உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல.

➤. தெங்கு வரி உட்பட புதிய வரிகள் நீக்கப்படல் வேண்டும்.

➤. வரி வசூலித்தலுக்கும், நீதி வழங்கலுக்கும் வெவ்வேறான உத்தியோகத்தர்கள் நியமிக்கப் படல் வேண்டும்.

➤. ஒல்லாந்தரின் நீதிமன்ற முறையை மீண்டும் தாபித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. பண மூலம் வரி செலுத்தும் முறை அகற்றப்பட்டு பொருட்கள் மூலம் வரி செலுத தப்பட அனுமதிக்கப்படல்.
- ➢. ஏல விற்பனை முறை நீக்கப்படல்.

(குறிப்பு : மியூரன் குழுவின் பரிந்துரைகளையும், விளைவுகளாகக் குறிப்பிடலாம்)

**12. இரட்டை ஆட்சி முறை என்றால் என்ன?**

- ➢. இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை பிரித்தானிய அரசாலும், கிழக்கிந்திய வர்த்தகக் கமபனியாலும் கூட்டாக மேற் கொண்ட ஆட்சி முறையே இரட்டை ஆட்சிமுறை எனப்பட்டது.
- ➢. நிலவிய காலம் 1798 - 1802
- ➢. 1797ல் ஆங்கில வர்த்தகக் கம்பனிக்கு எதிரான கிளர்ச்சி, சென்னை நிர்வாகிகளின் பலவீனங்கள், நிர்வாகக் குறைபாடுகளை பிரித்தானிய அரசாங்கம புரிந்து கொண்டமையாலும் பிரான்சியர் இந்து சமுத்திரப் பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுப்பதற்கும் இரட்டை ஆட்சி முறை தோற்றுவிக்கப்பட்டது.

**13. "இரட்டை ஆட்சி முறையின் குறைபாடுகள் இவ்வாட்சியைத் தோல்வியடையச் செய்தது" அவற்றைக் குறிப்பிடுக.**

- ➢. ஆளுனர் அரசுக்கும் மற்றும் கம்பனிக்கும் பொறுப்புக் கூறவேண்டியிருந்தமை.
- ➢. ஆளுனருக்கு கம்பனி உத்தியோகத்தர்கள் போதியளவு ஒத்துழைப்பு வழங்கவில்லை.
- ➢. கம்பனி அலுவலகர்கள் திறமையில்லாதவர்களாகவும், இலாபத்தினையே நோக்கமாகக் கொண்டிருந்தனர்.
- ➢. இக்குறைபாடுகள் காரணமாக 1802ம் ஆண்டு இரட்டை ஆட்சி முறை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. 1803ம் ஆண்டு பிரட்ரிக் நோத் கண்டி மீது படை எடுத்தமைக்கான காரணங்களைத் தருக.

- ➢. 1800 ஆண்டு மெக்டோவலின் மலையகத் தூதுப் பயணத்தில் எதுவித பயனும் கிடைக்காமை. சுதந்திர அரசாக கண்டி இருப்பதை நோத் விரும்பவில்லை.
- ➢. மலையக எல்லைப்புறங்களில் கோட்டைகள் இருந்ததால் ஏற்பட்ட செலவைக் குறைத்துக் கொள்ள விரும்பியமை.
- ➢. கரையோரப்பிரதேச மக்களும், கண்டி மன்னனையே தமது மன்னனாகக் கருதியமை.
- ➢. கரையோரப் பகுதியினரின் கிளர்ச்சிக்கு கண்டி மன்னன் உதவியமை.
- ➢. கண்டி மன்னன் பிரான்சியரின் உதவியை நாடலாம் எனச் சந்தேகித்தமை
- ➢. கொழும்பு தலைமையகத்திலிருந்து இராணுவத் தலைமைப்பீடமான திருகோணமலையுடன் தரை வழிப்பாதை ஏற்படுத்த விரும்பியமை.
- ➢. கண்டி இராசதானியில் காணப்பட்ட கடவை வரிகளை நீக்கிக் கொள்ள நினைத்தமை.

உடனடிக் காரணம் :

- ➢. 1802ல் கரையோர வர்த்தகர்கள் மலையகத்தில் ஒற்றர்கள் எனக் கருதித் துன்புறுத்தத்தப்பட்டமை.

15. 1803ம் ஆண்டு ஆள்பதி பிரட்ரிக் நோத்தின் படையெடுப்பு தோல்வியில் முடிவுற்றதற்கான காரணங்களைத் தருக.

- ➢. மன்னனும், மக்களும் பாதுகாப்பு உத்தியோக நகரத்தை விட்டு தம்மை ஆயத்தப்படுத்த ஹிங்குறாங்கெத்தைக்குப் பின்வாங்கியமை.
- ➢. கண்டிய மக்கள் அரசு விசுவாசிகளாக இருந்தமை.
- ➢. படையெடுப்பு நிகழ்ந்த காலத்தில் மழைக்காலம் ஆரம்பமானதால் ஆங்கிலப்படையினர் நோய் வாய்ப்பட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. கரையோரப்பகுதிகளிலிருந்து கண்டியுடனான தொடர்புகளைத் துண்டித்தனர். இதனால் உணவு, குடியானங்கள் தடைப்பட்டன.
- ➢. கொழும்புடனான தகவல் தொடர்புக்கும் இடைஞ்சல் ஏற்படுத்தினர்.
- ➢. தமது பொம்மை ஆட்சியாளனான முத்துச்சாமி கொல்லப்பட்டமை.
- ➢. நோத்திற்கு கண்டி இராச்சியம் தொடர்பான அறிவோ, அனுபவமோ இல்லாமை.

**16. ஜோன் டொயிலி பற்றி அரசியல் தவிர்ந்த விடயங்களைக் குறிப்பிடுக.**

- ➢. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி.
- ➢. இலங்கைக் கலாசாரத்தை இழிவுபடுத்தாது அவற்றை விளங்கிக் கொள்வதற்காகக் கற்றுக் கொண்டார்.
- ➢. கரதொட்ட தர்மராம பௌத்த பிக்குவிடம் சிங்கள மொழி பயின்றார்.
- ➢. கஜமன் நோனா என்ற புகழ் பெற்ற பெண் கவிஞருடன் போட்டிக்குக் கவிபாடும் அளவுக்குத் தேர்ச்சி பெற்றவர் எனக் கூறப்படுகின்றது.
- ➢. பொதுமக்களிடமும் கண்டிப் பிரதானிகளிடமும் செல்வாக்குப் பெற்றிருந்தார்.

**17. 1815ல் பிரித்தானியர்களால் கண்டியைக் கைப்பற்றுவதில் ஜோன் டொயிலியின் பங்கு யாது?**

- ➢. கண்டிப்பிரதானிகளுடன் இரகசியத் தொடர்புகளைக் கொண்டிருந்து அவர்களை ஆங்கிலேயருக்குச் சார்பானவர்களாய் மாற்றிக் கொள்வதில் அதீத ஈடுபாடு காண்பித்தார்.
- ➢. வர்த்தகர்கள், அறிஞர்கள், சமயக்குருமார்கள் போன்று வேடம் பூண்ட ஒற்றர்களைக் கண்டிக்கு அனுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைபலம், பலவீனம், உறவுகள், பகைமைகள், குடும்பப் போட்டிகள், கிராமியப் பாதைகள் பற்றிய விபரங்ளைச் சேகரித்துக் கொண்டான்.

- ➢. மன்னனை மதுவுக்கு அடிமையாக்கினான்.
- ➢. கண்டி இராச்சியத்தின் உள்நாட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக எந்தவொரு ஐரோப்பியரும் அறிந்திராத விடயங்களைத் தெரிந்து வைத்திருக்கும் திறமையாளராகக் காணப்பட்டார.

**18. 1815ல் பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற ஏதுவான காரணங்களைத் தருக.**

- ➢. தோமஸ் மெயிட்லண்டும், ஜோன் டொயிலியும் உருவாக்கியிருந்த சூழல்.
- ➢. மன்னன் பிரதானிகளுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகள்.
  - ❧. நாயக்க பிரதானிகளுக்கு கூடிய சலுகை வழங்கியமை.
  - ❧. தன்னை மன்னனாக்கிய பிலிமத்தலாவை என்ற பிரதானியுடனான மோதல் உருவாகியமை.
  - ❧. மன்னன் கொலை செய்த சதி அம்பலமான காரணத்தால் பிலிமத்தலாவைக்கு மரண தண்டனை வழங்கியமை.
  - ❧. 1814ல் எகலபொல ஆங்கிலேயரைத் தஞ்சமடைந்தமை.
  - ❧. பிரதானிகளுக்குக் கொடூரமான தண்டனைகள் வழங்கியமை.
- ➢. பௌத்த குருமாரின் எதிர்ப்பைச் சம்பாதித்தமை.
  - ❧. பிக்குகள் பலர் கொலை செய்யப்பட்டதாலும், சிறையிலிடப்பட்டமையாலும் பிக்குகளுடன் இருந்த நல்லுறவு பாதிப்படைந்தமை.
  - ❧. கண்டி வாவியைப் பெருப்பிக்க மல்வத்த பீடத்தின் வழிபாட்டிடத்தை வேறு இடத்திற்கு மாற்றியமை.
- ➢. கண்டி மக்களது ஆதரவை இழந்தமை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- ❧. போகம்பர வாவியை விஸ்தரித்தல், பத்திரிப்புவைக் கட்டுவித்தல் போன்ற கண்டி மாநகரை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த சப்ரகமுவ, நான்கு கோறளை, ஏழு கோறளை மக்கள் இரவு வேளையில் தங்குவதற்கு தடைவிதித்தமை.

➤. எகலப்பொலவின் மனைவி, பிள்ளைகளுக்கு கொடூர தண்டனை வழங்கியதால் மக்கள் வெறுப்புறறமை.

➤. றொபர்ட் பிரவுண்றிக்கின் இராஜதந்திரம்

- ❧. கண்டி ஆக்கிரமிப்பானது மக்களின் நலனுக்காக மேற்கொள்ளப்படுகின்றதாக பிரசாரம் செய்தமை.
- ❧. கண்டி இராச்சியத்தின எதிரி ஆங்கிலேயரல்ல, ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனே என்ற செய்தியை மக்களிடையே பரப்பியமை.
- ❧. பொருத்தமான காலத்தில் படையெடுப்பு மேற்கொண்டமை.

➤. எகலப்பொலவின் வழிகாட்டலில் படையெடுப்பு திட்டமிடப்பட்டமை.

➤. மொல்லிகொட தலைமையிலான அரச படைகள் ஆங்கிலேயருக்கு எதிர்ப்பு காட்டாமல் பின் வாங்கியமை.

**19. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் கைதானமை பற்றிக் குறிப்பிடுக.**

➤. 1815ம் ஆண்டு மன்னனும் மற்றும் மனைவி ஆகியோர் மெதமாநுவர எனும் இடத்தில் கைது செய்யப்பட்டனர்.

➤. பின்னர் திருகோணமலைத் துறைமுகம் மூலமாக இந்தியாவில் உள்ள வேலூரில் உள்ள சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கண்டி உடன்படிக்கை பற்றிய விபரங்களைத் தருக.

- 1815ம் ஆண்டு மார்ச் மாதம் 2ம் திகதி கண்டி அரசசபை (மடுல்மடுவ) மண்டபத்தில் இவ்வுடன் -படிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- பிரித்தானியாவின் மூன்றாம் ஜோர்ஜ் மன்னன் சார்பாக ஆள்பதி பிரௌன்றிக்குக்கும், கண்டியர்கள் சார்பாக பிரதானிகளுக்குமிடையே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- இதன் வாசகங்களை ஆங்கிலத்தில் ஜோன் டொயிலியும், சிங்களத்தில் டி சேரமும் வாசித்து விளக்கினர்.
- இந்நிகழ்வில் சிங்கக் கொடி கீழிறக்கப்பட்டு ஆங்கிலக் கொடி ஏற்றப்பட்ட போது கோபமுற்ற வ்ாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரர் ஆங்கிலக் கொடியைக் கீழிறக்கி சிங்கக் கொடியை ஏற்றியதாகவும் கருத்து நிலவுகின்றது.
- எகலப்பொல, கலகொடதிசாவ, மொல்லிகொட, மொனரவில கெப்பற்றி பொல, ரத்வத்த, கலஹம ஆகியோர் இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பிரதானிகள் சிலராவர்.

21. கண்டி ஒப்பந்தத்தின் முக்கிய வாசகங்களைத் தருக.

- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனுக்கும், அவரது உறவினர்களுக்கும், கண்டி மீதான அரச உரிமைகள் யாவும் நீக்கியது. (முதல் மூன்று வாசகங்கள்)
- ஆங்கிலேயர் ஆட்சியில் பிரதானிகள், உரிமைகள், அதிகாரங்கள் உறுதிப்படுத்தப் பட்டது. (4ம் வாசகம்)
- புத்தசாசனமும், கிறிஸ்தவ மதமும் தடையின்றிச் செயற்படுவதுடன் புத்த விகாரைகளும், பிக்குகளும் தேவாலயங்களும் பாதுகாக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. (5ம் வசனம்)
- ஏனைய வாசகங்கள் கண்டி இராச்சிய நிதிமுறை, வருமானம், வர்த்தகம் பற்றியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. கண்டி ஒப்பந்தத்தின் பின்னர் கண்டிய நிர்வாக நிலைமைகளைத் தருக.

- ➢. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக பாதுகாப்புடன் இருந்த இலங்கையின் சுதந்திரம் இழக்கப்பட்டது.
- ➢. மலைநாட்டுப் பிரதேச நிர்வாகத்திற்காக ஆளுநரின் வதிவிடப் பிரதிநிதியாக ஜோன் டொயிலி நியமிக்கப்பட்டார.
- ➢. மொல்லி கொட முதலதிகாரம் பதவி பெற்றார்.
- ➢. பிரித்தானிய ஆட்சியின் கீழ் பணிபுரிய விரும்பிய பிரதானிகளுக்குப் பதவிகள் வழங்கப்பட்டன.

23. 1818ம் ஆண்டு சுதந்திரப் போராட்டம் ஏற்பட்டமைக்கான காரணங்களை எழுதுக.

- ➢. ஆங்கிலேயர் ஆட்சியின் காரணமாக ஏற்பட்ட வெறுப்புணர்வு.
  - இது வரை அனுபவித்து வந்த சுதந்திரம் கைவிட்டுப் போனதால் ஏற்பட்ட வேதனை.
  - கண்ணுக்குத் தெரியாத மன்னன் ஆட்சியை மக்கள் விரும்பாமை.
  - தம்முடன் வாழ்ந்து வரும் மன்னனிடம் தமது துன்பங்களுக்கு நிவாரணம் பெறக்கூடிய மன்னனை விரும்பியமை.
- ➢. அந்நியர் ஆட்சியில் தமது கலாசாரங்களும், சம்பிரதாயங்களும் அழிந்தொழிந்து போகும் என்ற பயம்.
- ➢. பௌத்த பிக்குகள் புறக்கணிக்கப்பட்டமை.
  - ஐந்தாம் வாசகத்தில் குறிப்பிட்டபடி பௌத்த சமயத்தை பாதுகாப்பது பௌத்த குருமாருக்கு மரியாதை செய்வது, விகாரைகள், கோயில்கள் போன்றவற்றைப் பாதுகாப்பது என்பவை தொடர்பாக பிரித்தானியரால் நடைமுறைப் படுத்த முடியாமல் போனமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மன்னன் ஆட்சியில் சமய அனுட்டங்களில் பௌத்த குருமார் சிறப்பிக்கப்பட்டனர். இவ்வாட்சியில் தமது மதிப்பு, கௌரவம், குறைவடைந்ததாகக் கருதினர்.

➤. கண்டிப் பிரதானிகளின் அதிருப்தி.
- கண்டி இராச்சிய பாரம்பரியப் பதவிகளை ஆங்கிலேயர் தொடர்ந்து பேணி வந்தனர்.
- பிரதானிகளின் அதிகாரமும் சமூக நிலையும் பாதுகாப்பானதாக இருக்கவில்லை.
- பிரித்தானிய படைவீரர்கள் தமக்கு மரியாதை செலுத்தவில்லை என ஜோன் டொயியிலிடம் முறைப்பாடு செய்தும் பயன் ஏற்படவில்லை.
- பிரதானிகள் தமது சம்பிரதாய பூர்வமான வருமான வழிகளை இழந்தனர்.

(உ+ம் : தெருக் கடவை வரி அகற்றப்பட்டமை)

- பிரதானிகளுக்கு பாரம்பரிய உரிமையாக - வருந்த பதவி நிலைகளை பிரித்தானியர் மாற்றியமைத்தமை. சிங்களவர்களே வகித்து வந்த மடிகே முகாந்திரம் என்ற பதவிக்கு ஹஜ்ஜிமரைக்கார் என்ற முஸ்லிம் ஒருவரை நியமித்தமை. ஊவா வெல்லஸ பிரதானிகள் அதிருப்தியுற்றமை. இதுவே போராட்டத்தின் உடனடிக் காரணமாக அமைந்தது.

➤. ஆட்சி உரிமைகோரி போலியாளன வெளிப்பட்டமை.
- 1817 யூலை மாதம் கதிர்காம மகோற்சவ திருவிழா முடிவு தினத்தில் வில்பாவே என்ற போலியாளன் தன்னை நாயக்க வம்ச துரைசாமி எனக் கூறி வெல்லஸ பிரதேசத்தி -லிருந்து வெளிப்பட்டமை.

➤. கெப்பற்றிப் பொல திசாவையின் தலைமை.
- பிரித்தானியர் நிலைமையைக் கட்டுப்படுத்த ஊவாவுக்குப் பொறுப்பான கெப்பற்றிப் பொல திசாவையை அனுப்பினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃ. அவன் கிளர்ச்சியாளர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கி அவர்களுடன் சேர்ந்து கொண்டான்.

ஃ. ராடல பிரதானிகளையும், ஊவா, வெல்லஸ மக்களையும் கிளர்ச்சி செய்யும்படி தூண்டினான.

ஃ. கெப்பற்றிப்பொலவின் வழி நடத்தலில் போராளிகளால் துரைசாமி மன்னனாகப் பிரகடனப்படுத்தப்பட்டார். மன்னன் மகாதிகாரமாக கெப்பற்றிப்பொல நியமனம் செய்யப்பட்டார.

**24. 1818 சுதந்திரப்போராட்டத்தின் போக்கினைக் குறிப்பிடுக.**

➢. கெப்பற்றிப்பொல திசாவையின் தலைமையில் பிரதானிகள் ஆதரவு பெருகியது.

➢. தும்பறை, ஹேவா ஹெற்ற, ஏழு கோறளை, ஹிரிஸ்பத்துவ, மாத்தளை, சப்ரகமுவின் ஒரு பகுதி, நுகரகலாவிய முதலிய பகுதிகளில் கலகங்கள் தோன்றின.

➢. கண்டி மாவட்டத்தில் மூன்று கோறளை, நான்கு கோறளை, உடுநுவர தவிர்ந்த ஏனைய பகுதிகள் கலகத்தில் பங்கு கொண்டன.

➢. கலகக்காரர்கள் புனித தந்த தாதுவைக் கைப்பற்றினர். மக்கள் ஆதரவு பெருகின.

➢. கலகக்காரர்கள் கொரில்லாத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

➢. பிரித்தானியப் படையினர் கடும் சிரமங்களை அடைந்தனர். பலர் நோய்வாய்ப்பட்டனர்.

➢. றொபர்ட் பிரௌன்றிக் தனக்கு விசுவாசமில்லாத மாகாணங்களிலிருந்து படைகளை வாபஸ் பெற்றதுடன் இந்தியாவிலிருந்து மேலதிக படைகளைத் தருவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. 1818ம் ஆண்டு போராட்டத் தலைவர்களைக் குறிப்பிடுக.

- ➢. மொனரவில்ல கெப்பற்றிப்பொல
- ➢. மடுகல்ல
- ➢. கிவுலு கெதர மொகட்டால
- ➢. பூட்டான் வேரட்டேரால
- ➢. திம்புலான திசாவை.
- ➢. இரண்டாம் பிலிமத்தலாவ அதிகாரம்.
- ➢. கதிர்காம பசநாயக்க நில்மே.

26. 1818ம் ஆண்டுப் போராட்டம் தோல்வியுற்றமைக்கான காரணங்களை ஆராய்க.

- ➢. பிரித்தானியர் கையாண்ட கடுமையான அடக்குமுறைக் கொள்கை.
  - 1818 பெப்ரவரியில் "மார்சல்" எனப்படும் இராணுவச் சட்டத்தைப் பிரகடனம் செய்தனர்.
  - பயிர்செய்யும் நிலங்களை அழிக்கும் பாழ்நிலைக் கொள்கையைப் பிரகடனப் படுத்தியமை.
  - உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.
  - வெளியிலிருந்து உணவுப் பொருட்கள் பெறுவது தடைசெய்யப்பட்டது.
  - இராணுவச் சட்டப்படி மக்களைக் கைது செய்து தண்டனை வழங்கப்பட்டது.
- ➢. போராட்டம் ஒழுங்கான முறையில் திட்டமிடாமை.
  - போராட்டம் கட்டுக்கோப்புடையதாக இருக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. முறையான தலைவர்கள் தோன்றாமை.

ஆ. போராட்டங்கள் தனித்தனிக் கிளர்ச்சிகளாக வெவ்வேறு இடங்களில் தோன்றியமை.

ஆ. பிரதேசத் தலைவர்களிடையே முறையான தொடர்பாடல் இல்லாமை.

ஆ. பிரதானிகள் தேசிய உணர்வுடன் போரட்டத்தில் ஈடுபடாமை.

ஆ. கெப்பறறிப்பொல, மடுகல்ல, பிலிமத்தலாவ ஆகியோருக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டமை.

- நீண்ட காலம் போராடுவதற்குத் தேவையான வளங்களோ, ஆயுதங்களோ கிளர்ச்சியாளர் - களிடம் இல்லாமை.
- ஆட்சியுரிமை கோரிய துரைசாமி போலியானவன் எனவும் பிரித்தானியர் வெளிக்கொணர்ந்தமை.
- மொல்லிகொட அதிகாரம் பிரித்தானியர் பக்கம் சார்ந்தமை.

  இவர் கட்டுப்பாட்டிலிருந்த நான்கு கோறளை வழியாக கொழும்பிலிருந்து கண்டிக்குப் படைகள், ஆயுதங்கள், மருந்துகள் கொண்டு செல்ல முடிந்தமை.
- பிரித்தானியர் தந்த தாதுவைக் கைப்பற்றியமை.

## 27. 1818ம் ஆண்டு போராட்டத்தின் விளைவுகள்.

- கெப்பற்றிப்பொல, மடுகல்ல கைதாகினர். போகம்பர மைதானத்தில் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- பிரதானிகள், சொத்துக்கள் அரசுடமையாக்கப் பட்டது.
- எகலப்பொல உட்பட போராட்டத்தை ஆதரித்த தலைவர்கள் நாடு கடத்தப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. இக்கலவரத்தின் போது ஆதரவளித்த மொல்லிகொட, எக்னொலிகொட போன்ற பிரதானிகளுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டன.

➢. 1818ம் ஆண்டு நவம்பர் மாதம் கண்டியில் ஆங்கிலேயர் ஆட்சி முழுமையானதாக்கப்பட்டது.

**28. 1848ம் ஆண்டு சுதந்திரப் போராட்டம் பற்றிக் குறிப்பிடுக.**

➢. இப்போராட்டமானது இரண்டாம் சுதந்திரப் போராட்டம், விவசாயக்கிளர்ச்சி, மாத்தளைக் கலகம் போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டது.

➢. 1818ம் ஆண்டுககுப் பின் 30 வருடங்களின் பின் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக மீண்டும் ஆரம்பிக்கப் பட்ட போராட்டமாகும்.

➢. இப்போரட்டத்திற்கான காரணங்களாவன :

- கோல்புறுக் சீர்திருத்தத்தின் செல்வாக்கு.
- ஆளுநர் ரொறிங்டனின் புதிய வரிக் கொள்கை.

**29. கோல்புறுக் சீர்திருத்தத்தின் செல்வாக்கும் / விளைவுகளையும் தருக.**

➢. அரசின் நிலக் கொள்கை

- 1840ல் தரிசு நிலச்சட்டம் கொண்ட வரப்பட்டமை. இதன்படி மக்கள் தொடர்ச்சியாக அனுபவித்து வந்த நிலங்களின் சட்ட ரீதியான உரிமையை நிரூபிக்க முடியாது நிலங்களை இழந்தமை.
- இவ்வாறான நிலங்கள் அரசுரிமையாக்கப் பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❧. இதன் காரணமாக வருமானம் வீழ்ச்சி கண்டதுடன் இருப்பிட வசதியின்மை ஏற்பட்டது.

➢. கிராம சபைகள் செயலற்றுப் போனமை.
- ❧. கட்டாய அரசு சேவை ஒழிக்கப்பட்டதன் காரணமாக கிராம சபைகளுக்கு உழைப்பைப் பெறுவது கடினமாகியது.
- ❧. இவற்றின் செயலிழப்பால் அவ்வப் பிரதேசக் குளங்கள், அணைக்கட்டுக்கள், கால்வாய்கள் போன்றவற்றின் அமைப்பு, பராமரிப்பு போன்றவைகளும் தடைப்பட்டன.
- ❧. கிராமசபையின் நீதித்துறை அதிகாரங்கள் நீக்கப்பட்டதால், சிறிய பிரச்சினையைத் தீர்ப்பதில் மக்கள் சிரமத்திற்குள்ளாகினர்.

➢. புதிய நீதிமன்ற முறை
- ❧. கமரனின் நீதிமன்ற முறைக்கமைய சிறுபிரச்சினைகளுக்கும் நீதிமன்றங்களை நாடிச்செல்ல வேண்டியிருந்தமை.
- ❧. இம்மன்றங்களில் பயன்படுத்தப்பட்ட ஆங்கில மொழி அறிவு, சட்டத்திட்டங்கள் பற்றிய அறிவு கிராமிய மக்களிடம் காணப்படவில்லை.
- ❧. வழக்கறிஞர்களுக்கான கொடுப்பனவுகளுக்கும், முத்திரைக் கட்டணங்களுக்கும் பணம் செலவிடவேண்டியிருந்தது.
- ❧. சிறிய வழக்குகளுக்காக தமது நேரத்தையும், பணத்தையும் செலவிட நேர்ந்தது.
- ❧. இதனால் இவர்களது விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

➢. அரசுக்கும், பொதுமக்களுக்கும் தொடர்பு விலகிச் சென்றமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ᅟ. கோல்புறூக்கின் சிபாரிசுகளுக்கமைய சிவில் சேவையாளர்களின் தொகையைக் குறைத் -தமையும், அவர்களுக்குப் பெருந்தோட்டச் செய்கையில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டமை -யாலும் நிர்வாக சேவை செயலற்றுப் போனது.

ᅟ. குறைந்தளவு நிர்வாக உத்தியோகத்தர்க -ளினால் அதிகளவு பரந்த நிர்வாகப் பிரதேசம் நிர்வகிக்கப்பட்டமையால் எல்லைப் புற விவசாயிகளின் நன்மைகள் கவனிக்கப் படவில்லை.

ᅟ. பொது மக்கள் பிரச்சினைகள் அரசுக்கு அறிக்கைப்படுத்தப்பட முடியாது போயிற்று.

ᅟ. ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமையால் கண்டி எல்லைப்புற விவசாயிகள் நலன்கள் கவனிக்கப்படவில்லை.

➢. ஆளுநர் ரொறிங்டனின் புதிய வரிக் கொள்கை.

ᅟ. கோப்பியின் விலை வீழ்ச்சியினால் அரசின் வருமானம் குறைந்து செல்ல அதனை ஈடுசெய்ய முத்திரை வரி, வண்டி வரி, படகு வரி, கடை வரி, துப்பாக்கி வரி, நாய் வரி, ஆள்வரி எனப் பல வரிகள் விதிக்கப்பட்டன.

ᅟ. இவ்வரிகளுள் குறிப்பாக துப்பாக்கி, நாய், ஆள் வரிகளுக்கு கடும் எதிர்ப்பு உருவாகியது. இவை பொருத்தப்பாடற்ற வரிகளாகக் காணப்பட்டது.

ᅟ. பயிர்ச்செய்கையைப் பாதுகாக்க (மிருகங்களிட -மிருந்து) துப்பாக்கி அவசியமானதாக இருநதது. ஒவ்வொரு வீட்டிலும நாய் வளர்க்கப்பட்டது. வயது வந்த ஆட்கள் அனைவரும் வருடத்தில் 6 நாட்கள் பாதைகள் வெட்டும் பணியில் ஈடுபடவேண்டும். அவ்வாறு செய்யாவிடின் 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலின் பணம் ஆள்வரியாகச் செலுத்தப்பட வேண்டும் எனவும் விதிக்கப்பட்டது.

➢. மதுபானக்கடைகள் மலைநாட்டில் திறக்கப் பட்டமை.

➢ நீலப்புத்தகமும் மக்களின் எதிர்ப்பும்.

உ. நீலப்புத்தகம் என்ற பெயரில் மேற்கொண்ட குடிமக்கள் தொடர்பான புள்ளிவிபரச் சேகரிப்பை புதிய வரி விதிப்பதற்கான ஏற்பாடாக மக்கள் சந்தேகம் கொண்டமை.

➢. முறைப்பாடுகளைக் கையளிக்கச் சென்ற மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டமை.

➢. பௌத்த மதத்திற்கான அரச ஆதரவு நீடிக்கப் படாமை. தலதா மாளிகைக்கு வழங்கப்பட்ட நன்கொடை நிறுத்தப்பட்டமை.

**30. 1848ம் ஆண்டுப் போராட்டம் ஏற்பட்ட முறைகளைக் குறிப்பிடுக.**

➢. அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக பொதுமக்கள் ஒன்றுபட்டதுடன் மோதல்கள் ஆரம்பமாகின.

➢. பதுளையில் திரண்ட விவசாயிகள் சிலர் துப்பாக்கி வரிக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக அரச அதிபரின் முன்பாக தமது துப்பாக்கிகளை நிலத்தில் அடித்து உடைத்தனர்.

➢. மாத்தளைப்பிரதேசத்தை மையமாகக் கொண்டு கொழும்பு, கண்டி போன்ற பிரதேசங்களில் உருவான எதிர்ப்பு தம்புள்ள, குருணாகலை, வாரியப்பொல போன்ற இடங்களுக்கும் பரவியது.

➢. கண்டிக் கச்சேரிக்கு அண்மையில் 4000 பேர் வரி எதிர்ப்பு ஊர்வலம் நடத்த முயன்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. தம்புள்ளவில் கொங்கல கொட பண்டா, குடா பொலவினால் ஸ்ரீ விக்கிரம சர்வசித்தி ராஜசிங்க எனும் பெயரில் முடிசூட்டப்பட்டார்.

➢. மாத்தளையில் வீரபுரன் அப்பு, கொங்கலகொட பண்டா ஆகியோர் கலகத்திற்குத் தலைமை தாங்கினர்.

➢. ஆளுநர் ரொறிங்டன் இராணுவச் சட்டத்தைப் பிரயோகித்தார்.

➢. வீரபுரன் அப்புவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. குடாப்பொல தேரர் போதியளவு விசாரிக்கப்படாமலேயே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

**31. 1848ம் கண்டு போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்களை ஆராய்க.**

➢. போராட்டம் ஒழுங்குமுறைப் படுத்தப்படாமை.

➢. தலைமைத்துவத்திடம் ஒற்றுமை காணப்படாமை.

➢. போராட்டத் தலைவர்களின் போதிய அனுபவமின்மை.

➢. போாட்டத்தில் ஈடுபட்டோரில பெருந்தொகையானோர் பொது மக்களாக இருந்தமை.

➢. குறுகிய காலத்தில் பல தலைவர்களைக் கைது செய்ய முடிந்தமை.

➢. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மரபுரீதியான ஆயுதங்களைப் பயன்படுத்தினர்.

➢. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் படைப்பயிற்சி பெறவில்லை.

➢. மலையகத்தில் சிறப்பான பாதைகள் காணப்படாமையினால் பிரித்தானியரால் மேலதிகப் படைகளைப் பெற முடிந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. மலைநாட்டுப்பிரதானிகளின் ஆதரவு கிடைத்தமை. இப்போராட்டம் மலைநாட்டின் சில பகுதிகளில் எல்லைப்படுத்தப்பட்டமை.

➢. இராணுவச் சட்டத்தினைப் பயன்படுத்தி போராட்டக் -காரர்கள் சுடப்பட்டனர்.

**32. 1848ம் ஆண்டு போராட்டத்தின் விளைவுகளைத் தருக.**

➢. ஆளுநர் டொரிங்டன் பிரித்தானியாவுக்கு திருப்பி அழைக்கப்பட்டார்.

➢. பொதுமக்களின் எதிர்ப்புக்குள்ளான வரிகள் நீக்கப்பட்டன.

➢. ஏனைய வரிகளும் மீள் பரிசோதனை செய்யப் பட்டு பாதகமான வரிகளை நீக்க அரசு நடவடிக்கை எடுத்தது.

➢. குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டதுடன், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

➢. பிரித்தானியர் விவசாயிகள், சமூக நலன்கள் என்பனவற்றில் அக்கறை காட்டத்தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 03
# இலங்கையில் தேசிய மறுமலர்ச்சி

**01. 1848ம் ஆண்டுக்கும் 1948ம் ஆண்டுக்கும் இடையில் இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிடுக.**

- 1850 இலிருந்து 1915 வரையான சமய, தேசிய மறுமலர்ச்சி இயக்க நிகழ்வுகள்.
- 1915 இலிருந்து 1948 வரையான அரசியல் போராட்ட நிகழ்வுகள்.

**02. மிஷனறி இயக்கம என்றால் என்ன?**

கல்வி, தொடர்பு சாதனங்கள் மற்றும் பல்வேறு செயலொழுங்குகள் மூலம் சமயத்தைப் பரப்புவதற்காக கிறிஸ்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைமையினையே மிஷனறி முறை எனப்படும.

**03. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் செயற்பட்ட மிஷனறி இயக்கங்களை அட்டவணைப் படுத்துக.**

| மிஷனறி இயக்கங்கள் | இலங்கைக்கு வந்த காலம் | கிறிஸ்தவ மதமும் கல்வியும் போதிக்கப்பட்ட இடங்கள் |
|---|---|---|
| இலண்டன் மிஷனறி இயக்கம் | 1804 - 1805 | — |
| பப்டிஸ்ட் மிஷனறி இயக்கம் | 1812 | கொழும்பு |
| வெஸ்லியன் மிஷனறி இயக்கம் | 1814 - 1815 | நாட்டின் வடக்குத் தெற்குப் பகுதி |
| அமெரிக்கன் மிஷனறி இயக்கம் | 1816 | யாழ்ப்பாணம் உட்பட வட பகுதி |
| சேர்ச் மிஷனறி இயக்கம் | 1818 | கொழும்பு, காலி, கற்பிட்டி, மன்னார் கண்டி |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

04. மிஷனறியினர் தமது சமயத்தைப் பரப்புவதற்கு கையாண்ட மூன்று துறைகளும் எவை?

➢. <u>எழுத்து ஊடகம்.</u>

செய்தித் தாள்கள், நூல்கள், சஞ்சிகைகள் அச்சிட்டு விநியோகித்தல்.

➢. <u>சொற்பொழிவு</u>

பொதுமக்கள் ஒன்று சேரும் இடங்களுக்கு வந்து உரையாற்றுதல், கலந்துரையாடல், போன்ற - வற்றை மேற்கொண்டமை.

➢. <u>கல்வி.</u>

மிஷனறி அமைப்புக்கள் பாடசாலைகளை அமைத்தமை.

05. **எழுத்து ஊடகத்தின் மூலம் மிஷனறி இயக்கம் செயற்பட்ட விதத்தினை எழுதுக.**

➢. தேசிய மொழி அறிவைப் பெற்றுக் கொள்ள சிங்களத்தையும், தமிழையும் கற்றனர்.

➢. பைபிளை சிங்களத்திலும், தமிழிலும் மொழி பெயர்த்தனர்.

➢. தமிழ், சிங்கள மொழிகளில் நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றை அச்சிட்டு விநியோகித்தனர்.

➢. அச்சகங்கள் அமைப்பதற்கும், நூல்கள், சஞ்சிகைகள, அச்சிடுவதற்கும் தேவையான பணத்தினை ஒழுங்கமைக்கும் திறன் காணப்பட்டது.

➢. மிஷனறிகளால் அச்சிடப்பட்ட வெளியீடுகள்.

மாசிக்க தேக்க (1822) - சேர்ச் மிஷனறி சங்கம்.
லங்கா நிதானய (1840) - சமய பூஸ்திகா சங்கம்.
உரகல (1842) - பப்டிஸ்ட் மிஷனறி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. சொற்பொழிவின் ஊடாகவும், கல்வியின் ஊடாகவும் சமயத்தைப் பரப்பிய முறையை எழுதுக.

- பன்சலை அருகிலும், பொதுமக்கள் ஒன்று சேரும் இடங்களிலும் சொற்பொழிவுகளை நிகழ்த்தி சமயம் பரப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
- பாடசாலைகளை அமைத்து அதனை நடாத்திச் செல்லுதல்.
- மிஷனறிப் பாடசாலைக்கு அரசாங்கத்தின் உதவி கிடைத்தது.
- மிஷனறி கல்வி முறையின் நவீன வசதிகள் மக்களைக் கவர்ந்தன.
- ஆங்கிலம் மூலம் கல்வி வழங்கும் உயர் பாடசாலைகள் நகரங்களில் நிறுவியமை.
- இங்கு கல்வி கற்பது கவர்ச்சியாகக் காணப் பட்டது.
- அரசாங்கத்தின் பதவி, சலுகை பெற ஆங்கில மொழி அறிவு தேவைப்பட்டமை.

07. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் சமய, மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான காரணங்களைத் தருக.

- மிஷனறிமாரின் பிரசார நடவடிக்கைகள் சிலை வணக்கத்தினைக் கண்டித்தமை.
- பௌத்த, இந்து மக்களின் பழக்க வழக்கங்கள் விமர்சனத்துக்குள்ளாகின. அத்துடன் இம்மத அனுஸ்டானங்கள் இழிவுபடுத்தப்பட்டன.
- சிங்கள, தமிழ் மொழிக் கல்வி நடவடிக்கைகளுக்கு அரச உதவி கிடைக்காமை.
- மிஷனறிப் பாடசாலைகளில் கல்வி கற்ற பௌத்த, இந்து, இஸ்லாமிய பிள்ளைகள் தமது மத தனித்துவத்தை இழக்கும் நிலை ஏற்பட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. இவற்றின் காரணமாக தத்தமது சமயங்களையும், கலாசாரங்களையும் பாதுகாக்க வேண்டிய தேவை பௌத்த, இந்து, இஸ்லாமிய மத பற்றுடைய தலைவர்களுக்கு ஏற்பட்டது.

**08. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பௌத்த கலாசார இயக்கத்தின் செயற்பாடுகளைத் தருக.**

➢. பிரிவெனாக் கல்வி நிறுவனங்கள் நிறுவப் பட்டமை.

➢. பகிரங்க வாத, பிரதி வாதங்கள் மேற்கொள்ளப் பட்டமை.

➢. அச்சகங்கள் நிறுவப்பட்டமை.

➢. பத்திரிகைகள் ளியிடப்பட்டமை.

➢. பௌத்த ஆங்கிலப் பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டமை.

➢. தேசப்பற்றை வளர்க்கும் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டமை.

➢. பௌத்த புனித தலங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.

**09. பிரிவெனாக் கல்வி இலங்கையில் மீளவும் ஆரம்பிக்கப்பட்டமை பற்றி எழுதுக.**

➢. வலானே சித்தார்த்த தேரர் 1835ல் இரத்மலானை பரமதம்ம சைத்திய பிரிவெனாவை ஆரம்பித்தார். சிங்களம், பாளி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளைக் கற்ற பௌத்த குருமார்கள் தோன்ற அப்பிரிவெனாக்கள் வழிவகுத்தன.

➢. ஹிக்கடுவ ஸ்ரீசுமங்கல தேரர் 1837ல் மாளிகாகந்த வித்தியோதய பிரிவெனாத் தோற்றுவித்தார்.

➢. இரத்மலானை ஸ்ரீ தர்மலோகதேரர் 1875ல் பேலியகொட வித்தியோதய பிரிவெனாவை ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பௌத்த மத விருத்திக்காக அச்சகங்கள் நிறுவப் -பட்டமை பற்றிக் குறிப்பிடுக.

➢. பௌத்தர்களுக்கென முதலில் அச்சகத்தை அமைப்பதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் புலத்கம தம்மாலங்கார ஸ்ரீசுமண திஸ்ஸ தேரர் ஆவார்.

➢. இலங்கை வாழ் செல்வந்தர்களதும், சீய நாட்டு அரச உதவியும் பெற்று 1862ல் காலியில் லங்கோபகார அச்சகத்தை நிறுவினார்.

➢. அதன் பின் நாட்டில் பல அச்சகங்கள் உருவாகின.

உ+ம் : கடவதிக அச்சகம், சுதர்ஷண அச்சகம், சரவி சந்தரஸ அச்சகம்.

11. பௌத்த மத விருத்திக்காக அச்சிடப்பட்ட பத்திரிகைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

➢. லக்மினி பஹன (1862) -

➢. லங்கா லோகய - ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்

➢. சரவி சந்தரெஸ (1880) - ஹென்றி ஸ்டீல்ஓல் ஸ்கொட்

➢. சிங்கள ஜாதிய (1902) - பியதாஸ சிறிசேன

➢. சிங்கள பௌத்தயா - அநகாரிக தர்மபால

12. பகிரங்க விவாதங்களை நடத்த வேண்டிய சூழ்நிலை எவ்வாறு ஏற்பட்டது.?

➢. மிஷனறிமார் பௌத்த சமய நூல்களிலுள்ள கருத்துக்களை விமர்சனம் செய்தமை.

➢. 1860ல் கோகர்லி பாதிரியார் பௌத்த சமயம் பொய்யானது என நிரூபிக்க ஆதாரங்களைத் திரட்டியமை.

➢. இதற்குப் பதிலடி கொடுப்பதற்காகவே பௌத்தர்கள் பகிரங்க விவாதங்களில் ஈடுபட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஐம்பெரும் விவாதங்கள் பற்றிக் குறிப்பிடுக.

- ➢. பத்தேகம விவாதம் - 1865
- ➢. உதன் கொட் விவாதம் - 1865
- ➢. வார கொட விவாதம் - 1865
- ➢. கம்பளை விவாதம் - 1871
- ➢. பாணந்துறை விவாதம் - 1873

இவ்வாதங்களுள் பாணந்துறை விவாதம் மிகவும் முக்கியமான வாதமாகும்.

- ➢. இவ்வாதத்துக்கு தலைமை தாங்கியவர் மீகெட்டு வத்தே குணானந்த தேரர் ஆவார்.
- ➢. பாணந்துறை விவாதத்தின் முக்கியத்துவத்தினை அறிநது இலங்கை வந்து பௌத்த மதத்தை தழுவிய அமெரிக்கர் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட ஆவார்.

14. விவாதங்களில் பங்கெடுத்துக் கொண்ட ஏனைய பௌத்த குருமார்களைக் குறிப்பிடுக.

- ➢. ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்.
- ➢. வஸ்கடுவ சுபுதிதேரர்.
- ➢. பொத்துவில் இந்திர ஜோதி தேரர்.
- ➢. இரத்மலானை தம்மாலோக தேரர்.

15. ஐம்பெரும் விவாதங்களினால் கிடைக்கப்பெற்ற பயன்களைக் குறிப்பிடுக.

- ➢. பாணந்துறை விவாதம் சர்வதேசப் பிரசித்தி பெற்றது.
- ➢. வெளிநாட்டு வேற்று மதத்தவர்களின் கவனம் பௌத்த சமயத்தின் மீது திரும்பியது.
- ➢. பௌத்த மதத்திற்கு ஒரு புதுயுகம் ஆரம்பமானது.
- ➢. அமெரிக்கரான ஹென்றி ஹென்றி ஸ்டீல் ஒல்கொட, இரஷ்ய நாட்டவரான ஹெலான பல வெட்ஸ்கி அம்மையார் முதலியோர் இலங்கை வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. **பௌத்த பாடசாலைகளை உருவாக்கும் இயக்கத்திற்கு முன்னோடியாகச் செயற்பட்டவர் -களைக் குறிப்பிடுக.**
- ➢. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட
- ➢. மீக்கெட்டுவத்தே குணானந்த தேரர்
- ➢. ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல தேரர்
- ➢. டொன் கரோலிஸ் ஹேவாவர்தன
- ➢. இரத்மலானை ஸ்ரீ தர்ம லோக தேரர்
- ➢. அநகாரிக தர்மபால
- ➢. வஸ்கடுவே ஸ்ரீ சுபதி தேரர்
- ➢. டி.எஸ். சேனநாயக்க

17. **இலங்கையின் முக்கிய நகரங்களில் அமைந்துள்ள பௌத்த பாடசாலைகளைக் குறிப்பிடுக.**
- ➢. கொழும்பு ஆனந்தா கல்லூரி
- ➢. கண்டி தர்மராஜா கல்லூரி
- ➢. காலி மஹிந்தா கல்லூரி
- ➢. மாத்தளை விஜய கல்லூரி
- ➢. கம்பளை ஜினராஜ வித்தியாலயம்
- ➢. நாவலப்பிட்டி அநுருத்த வித்தியாலயம்.

18. **பௌத்த புனித தலங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டமை பற்றி எழுதுக.**
- ➢. 19ம் நூற்றாண்டின் பின்னரான பகுதிகளிலிருந்து அனுராதபுர, பொலனறுவைத் தலைநகரங்களை அண்டியிலிருந்த பௌத்த சின்னங்களைப் பேணிப் பாதுகாப்பதில் மக்களிடையே உத்வேக உணர்வு பிறந்தது.
- ➢. ஐரோப்பிய கல்விமான்களான ஜோர்ஜ் டர்னர், எச்.சீ.பி.பெல், ஹென்றி பாக்கர் என்போர் தொல்பொருள் அகழ்வுகள் ஆய்வுகளில் ஈடுபட்டு புராதன கலாசாரம் பற்றிய விடயங்களை முன் கொணர்ந்தனர்.
- ➢. இவர்கள் எழுதிய நூல்களுக்கு விளக்கமாக தேசிய கல்விமான்களும், நூல்களை ஆக்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-தால் புராதன நாகரீகம், பாரம்பரியம் பற்றிய அறிவு மக்களிடையே விசாலமடைந்தன.

- ➢. வலிசிங்க ஹரிச்சந்திரா அனுராதபுரத்திலுள்ள புனித இடங்களைப் பாதுகாக்கும் இயக்கத்தை ஆரம்பித்தார்.
- ➢. அநகாரிக தர்மபாலா இந்தியாவிலுள்ள புத்த காயா போன்ற புனித இடங்களைப் பாதுகாக்க முன் வந்தார்.

**19. மது ஒழிப்பு இயக்கம் என்றால் என்ன?**

பிரித்தானியர் ஆட்சியில் 31.5.1912 மதுவரிச் சட்டத்தில் கடைகள் அதிகரித்தன. விளைவாக மதுப்பாவனை அதிகரித்துச் சென்றமையால், சமூகத்தில் பல்விதமான பிரச்சினைகள், தேசிய கலாசாரம், சமயங்கள் சீரழிந்தன. இதனால் இதற்கு எதிரான போராட்டத்தை ஏற்படுத்திய இயக்கம் மது ஒழிப்பு இயக்கம் எனப்படும்.

**20. மது ஒழிப்பு இயக்கத்தின் செயற்பாடுகளைத் தருக.**

- ➢. பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவர்கள் மதுவுக்கு எதிராக பொது மக்களுக்கு அறிவூட்டினர்.
- ➢. அநகாரிக தர்மபால, பியதாஸ சிறிசேன, ஜோன் த சில்வா என்போரும் பல்வேறு ஊடகங்களின் மூலமாக மக்களுக்கு அறிவூட்ட ஆரம்பித்தனர்.
- ➢. அநகாரிக தர்மபால பகிரங்க சொற்பொழிவு மூலமும், பத்திகைக்கு எழுதுதல் மூலமாகவும் இப்பணியை மேற்கொண்டார்.
- ➢. ஜோன் த சில்வா நாடகங்கள் மூலம் மதுவின் தீமைகளை எடுத்துக் காண்பித்தார். "பராபவ" என்ற சிங்கள நாடகத்தின் மூலம் மது பாவனையின் தீமைகளை வெளிக் கொணர்ந்தார்.
- ➢. இலங்கை மது ஒழிப்பு இயக்கத்தின் தந்தையாக ஆத்தர் வீ. தியெஸ் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. மது ஒழிப்பு இயக்கத்தினால் ஏற்பட்ட விளைவுகள்.

- ➢. தேசிய இயக்கங்கள் உருவாகின.
- ➢. தேசிய கலாச்சாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடிந்தமை.
- ➢. தேசிய தலைவர்களை ஒன்றுபடுத்தியமை.
- ➢. அரசியல் போராட்ட இயக்கங்கள் எழுச்சிபெறக் காரணமாக அமைந்தது.
- ➢. அரசியல் தலைவர்கள் தோன்றியமை.

22. பௌத்தசமய மறுமலர்ச்சித் தலைவர்கள் பற்றி எழுதுக.

1. **ஹிக்கடுவ ஸ்ரீ மங்கல தேரர்**

- ✎. வலானே சித்தார்த்த தேரரின் மாணவன்.
- ✎. 1873ல் மாளிகா கந்தையில் வித்தியோதய பிரிவெனாவை ஆரம்பித்தார்.
- ✎. இவரின் தலைமையில் பத்திரிகை, சஞ்சிகைகள் மூலம் பௌத்த சமய பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- ✎. 1865ல் முதலாவது பௌத்த பத்திரிகையான "லக்மினி பஹன" வை வெளியிட்டார். லங்கா லோகய பத்திரிகை, சுமதி என்ற சஞ்சிகை பேன்றவற்றை ஆரம்பித்தார்.
- ✎. 1865ல் இவரின் நெறியாள்கையில் பௌத்த பிக்குகள் பெல்மடுல்ல பகுதியில் தர்மோபதேசம் நிகழ்த்தினர்.

2. **மீக்கெட்டுவத்தை குணானந்த தேரர்.**

- ✎. 1873ல் நடைபெற்ற மிஷனறிப் பிரதேசங்க -ளுக்கு எதிராக பாணந்துறை பகிரங்க விவாதம் மூலம் புகழ்பெற்றவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பௌத்த மறுமலர்ச்சியினை ஏற்படுத்தும் நோக்கில் மக்கள் மனங்களில் சமய உணர்வைத் தூண்டி விட்டார்.
- பௌர்ணமி விடுமுறையை மீண்டும் பெற்றுக் கொள்ளும் விதத்தில் பிரம ஞான சங்கத்தினை நிறுவினார்.
- மாளிகா கந்த வித்தியோதய பிரிவெனாவை அமைப்பதில் பங்களிப்புச் செய்து பௌத்த சமயத்தை வளர்த்தமை.
- காலியிலும், கொட்டாஞ்சேனையிலும் அச்சங் -கங்களை நிறுவினார். சாவக்ஞசாசன அபிவிருத்தி சங்கத்தை நிறுவினார்.
- இவரது புகழ் பெற்ற விவாத மேடை பாணந்துறை புகையித நிலையத்துக்கு அண்மையில் உள்ளது.

3. **ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்**
   - அமெரிக்கரான இவர் பாணந்துறை விவாதத்தின் மூலம் கவரப்பட்டு வெலிவத்த விஜயானந்த பிரிவெனா சென்று பௌத்த மதத்தைத் தழுவினார்.
   - பௌத்த மதம் பற்றிய அறிவையும், கல்வியையும் வளர்க்க ஞாயிறு தர்ம பாடசாலைகளை நிறுவினார்.
   - சரசவி சந்தரெச எனும் பத்திரிகையினை ஆரம்பித்து பௌதத்ர்களை ஒன்று படுத்தியமை.
   - ஆனாந்தா கல்லூரி, தர்மராஜா கல்லூரி, மகிந்த கல்லூரி, விஜயா கல்லூரி, பெண்களுக் -கான விசாகா கல்லூரி, மியுசியாஸ், சங்கமித்த ஆகிய பௌத்த பாடசாலைகளை நிறுவினார்.
   - பௌத்த கதனோபய கதனாய எனும் பெயரில் வினாவிடை வடிவிலான புத்தகத்தை எழுதிப் பௌத்த மாணவாகளின் சமய அறிவு விருத்திக்கு உதவினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெரஹரா ஊர்வலங்கள் நடாத்தும் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தார்.
- பௌர்ணமி தினத்தை விடுமுறை தினம் ஆக்கினார்.
- ஐந்து நிற பௌத்த கொடி ஒன்றினை உருவாக்குவதற்கு வழிவகுத்தார்.
- இவரால் ஆரம்பிக்கப்பட்ட சரவி சந்தரஸ என்ற தினசரிப்பத்திரிகை, தபுடிஸ்ற் எனும் ஆங்கில சஞ்சிகை என்பனவற்றை வெளியிட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.
- பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய சீடர் பரம்பரை ஒன்றினை உருவாக்கினார்.

4. அநகாரிக தர்மபால
- இவரது இயற் பெயர் - தொன் டேவிட் ஹேவா வித்தாரண
- பிறந்த தினம் - 17ம் திகதி செப்ரெம்பர் மாதம் 1864 ம் ஆண்டு
- 20வது வயதில் பௌத்த சாசனத்திற்கு தன்னை அர்ப்பணித்து "அநகாரிக" என அழைக்கப்பட்டார்.
- மகாபோதி சங்கத்தை ஆரம்பித்தார்.
- சிங்கள பௌத்தயா எனும் சிங்களப் பத்திரிகையை ஆரம்பித்து பௌத்த சமய வளர்ச்சிக்குப் பங்காற்றினார்.
- மகாபோதி சங்கம் மூலம் த பிரிட்டிஷ் எனும் ஆங்கிலச் சஞ்சிகையையும், மகாபோதி சஞ்சிகையையும் வெளியிட்டு பௌத்த சமய வளர்ச்சிக்கு உதவினார்.
- ஒல்கெட் அவர்களுக்கு மொழி பெயர்ப்பாள -ராகக் கடமையாற்றினார்.
- பௌத்த பாடசாலைகளை நிறுவினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தேரவாத பௌத்தத்தைப் பரப்ப இந்தியா. ஜப்பான், சீனா, கொரியா, தாய்லாந்து போன்ற இடங்களுக்குச் சென்றார்.
- 29வது வயதில் சிக்காகோவில் நடைபெற்ற உலக சமய பாரளுமன்றத்தில் "தர்ம" பற்றி உரை நிகழ்த்தினார்.
- புத்தகாயாவை மீட்பதற்காக தனது வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணிப்பேன் எனக் கூறியவர் ஆவார்.
- மகாபோதி அச்சங்கத்தின் கிளைகளை கல்கத்தா, சாரணாத், டில்லி, புத்தகாயா, பம்பாய், சென்னை போன்ற இடங்களில் நிறுவினார்.
- "சிறி தேவ மித்த" என்ற பெயரில் துறவு பூண்டார்.
- 1933ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்தியாவில் உள்ள வாரணாசி நகரில் உள்ள சாரணாத்தில உயிர் நீத்தார்.

23. இந்து சமய மறுமலர்ச்சி ஏற்படுத்திய தலைவர்கள் பற்றி எழுதுக.

1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்.
   - இவர் நல்லூரில் 18ம் திகதி டிசம்பர் மாதம் 1822ம் ஆண்டு பிறந்தார்.
   - இவரது தாயார் பெயர் சிவகாமி அம்மையார், தந்தையின் பெயர் கந்தப்பர் என்பதாகும்.
   - 1893ம் ஆண்டளவில் சைவ பரிபாலன சபை, இந்துக் கல்விச் சபை என்பனவற்றை நிறுவினார்.
   - 1897ல் வண்ணார் பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையை நிறுவினா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முதலாம் பாலபாடம், இரண்டாம் பால பாடம், சைவவினாவிடை, இலக்கணச் சுருக்கம், இலங்கையின் பூமிசாஸ்திரம், சிவாலய தரிசனவிதி, சிதம்பர மான்மியம், நான்காம் பாலபாடம் போன்ற நூல்களை எழுதினார்.
- உதயபானு எனும் பத்திரிகையை ஆரம்பித்தார்.
- கந்த புராணம், சேது புராணம், பெரிய புராணம், சரசோதிமாலை, நாலடியார் முதலான நூல்களை மொழி பெயர்ப்புச் செய்து செய்யுள் வடிவிலும், வசன நடை வடிவிலும் பிரசாரம் செய்தார்.
- 1849ல் நல்லூர் வித்தியானு பாலன இயந்திரசாலை, முத்தமிழ் விளக்க அச்சுக் கூடம், வாணி நிவேதன அச்சக்கூடம் என்பனவற்றிலிருந்து நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார்.
- பேர்ஸிவல் அடிகளாருடன் இணைந்து பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தார்.
- மெதடிஸ்த சபை குருவானவர் ஒருவரின் கீழ் பணியாற்றிய இவர் அவர்களின் பிரசார செயற்பாடுகளை நன்கறிந்து இந்துக்களை நிந்தித்த கண்டனங்களை எதிர்த்தார்.

2. **சேர். பொன் இராமநாதன்**
   - 1851ல் பிறந்த இவர் இந்து சமயப் பண்பாட்டு வளர்ச்சிக்கு உழைத்தார்.
   - 1913ல் மருதனாமடத்தில் இராமநாதன் பெண்கள் கல்லூரியை ஆரம்பித்தார்.
   - 1921ல் திருநெல்வேலியில் பரமேஸ்வரா ஆண்கள் கல்லூரியை ஆரம்பித்தார்.
   - கொழும்பில் கலையழகு மிகுந்த பொன்னம்பல வாணேஸ்வரர் கோயிலை அமைத்தார.
   - பகவத் கீதை விரிவுரை, செந்தமிழ் இலக்கணம் ஆகிய நூலகளை எழுதினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி ஏற்படுத்திய தலைவர்கள் பற்றி எழுதுக.

1. அறிஞர் எம்.சி. சித்திலெப்பை

➢ 1832ல் பிறந்தார். இவர் நவீன கல்வியின் முக்கியத்துவத்தை முஸ்லீம் மக்களுக்கு உணரச் செய்தார்.

➢. 1882ம் ஆண்டு முஸ்லீம் நேசன், ஞான தீபம் ஆகிய பத்திரிகைகளை ஆரம்பித்தார். இதன் மூலம் இஸ்லாமியரின் கலாசார விருத்திக்கு வித்திட்டார்.

➢. 1882ம் ஆண்டளவில் முஸ்லீம்களின் கல்வி அபிவிருத்திக்காக கொழும்பு மருதானை சாஹிரா கல்லூரியை ஆரம்பித்தார். இதுவே முஸ்லீம்களின் முதலாவது ஆங்கிலப் பாடசாலையாகும்.

➢. கண்டியில் முஸ்லிம் பெண்கள் பாடசாலையை ஆரம்பித்தார். இது சித்திலெப்பையின் பெயராலேயே அழைக்கப்பட்டது.

➢. 1891ல் கொழும்பு முஸ்லிம் சங்கத்தை ஆரம்பித்தார்.

➢. முஸ்லிம் மாணவர்களின் கல்விக்காக மதரஸா மதப்பாடசாலைகளுக்கு புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

➢. பாட நூல்கள், சமய நூல்கள் பலவற்றையும் எழுதினார்.

(உ + ம் : கருத்துஸ்ஸலாத்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. டி.பி. ஜாயா

- ➢. 1921ல் கொழும்பு சாஹிரா கல்லூரி அதிபராகி அதன் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்.
- ➢. அரபு மொழிக் கல்வியை முஸ்லீம் மக்களுக்கு வழங்குவதற்கு அரும் பாடுபட்டார.
- ➢. இலங்கையின் பல்வேறு பிரதேசங்கலிலும் முஸ்லீம் மாணவர்களுக்கு பாடசாலை அமைப்பதில் முன்னின்று செயற்பட்டார்.
- ➢. 1914ல் சிலோன் முஸ்லிம் ரிவியு எனும் சஞ்சிகைகளில் முஸ்லீம் மக்களுக்கான கல்வி முக்கியத்துவத்தை விளக்கினார்.
- ➢. 1936 - 1947 காலப்பகுதியில் அரசுக் கழகத்தின் அங்கத்தவராகி முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்காக சட்டசபையில் வாதிட்டார்.
- ➢. மக்காவில் இலங்கை ஹஜ்ஜிகளுக்கு விடுதியொன்றை நிறுவும் பணியை மேற் கொண்ட போது மதினாவில் காலமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 04
# பிரித்தானியரின் ஆட்சியில் இலங்கையின் அரசியல் மாற்றங்கள்

01. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புக்களைக் குறிப்பிடுக.

- ➢. கோல்புறூக் சீர்திருத்தம் - கி.பி. 1833
- ➢. குறூ - மக்கலம் சீர்திருததம் - கி.பி. 1910 - 1912
- ➢. மனிங் சீர்திருத்தம் - கி.பி. 1921
- ➢. மனிங் - டிவென்சியர் சர்திருத்தம - கி.பி. 1924
- ➢. டொனமூர் சீர்திருத்தம் - கி.பி. 1931
- ➢. சோல்பரி யாப்பு - கி.பி. 1947

02. கோல்புறூக் ஆணைக்குழுவின் இலங்கை வருகைக்கான காரணங்களைத் தருக.

- ➢ 1815ம் ஆண்டிலிருந்து பிரித்தானிய ஆட்சி நடவடிக்கைகளுக்கான செலவுகள் வருமானத்தை விட அதிகரித்துச் சென்றமை.
- ➢. தொடர்ந்தும் குடியேற்ற நாடுகளின் தேவைக்காக பணத்தை செலவிட பிரித்தானிய அரசு விரும்பாமை.
- ➢. இந்நிலையை ஆராய்ந்து ஆலோசனை வழங்கவே கோல்புறூக் இலங்கைக்கு அனுப்பி வைக்கப் பட்டார்.
- ➢. இவ்வண்ணம் குடியேற்ற நாட்டுக்குச் செயலாளரினால் கோல்புறூக்குடன் அனுப்பி வைக்கப்பட்ட குழுவே கோல்புறூக் ஆணைக்குழு எனப்பட்டது.

  (கோல்புறூக் ஆணைக்குழு நிர்வாகம், வருமானம், அரச நிறுவனங்கள், 1830ல் வந்த கமரன் நீதித்துறை பற்றியும் ஆராய்ந்தார்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. **கோல்புறூக் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக.**

- ➢. சட்டவாக்கக் கழகம், சட்ட நிர்வாகக் கழகம் என்பன அமைக்கப்பட்டன.
- ➢. மலை நாடும் கரையோரப்பிரதேசங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே ஆட்சி முறையின் கீழ் கொண்டு வரப்பட்டன.
- ➢. 16 நிர்வாகப் பிரிவுகளாக இருந்த இலங்கை 5 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டன.
- ➢. கட்டாய அரச கரும முறை நீக்கப்பட்டது. (இராஜகாரிய முறை)
- ➢. அரசின் வர்த்தக ஏகபோக உரிமை முறை நீக்கப்பட்டது
- ➢. ஆங்கிலக் கல்வி அரச கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- ➢. செலவினங்களைக் குறைக்க சிவில் சேவையாளர்களின் சமபளத்தைக் குறைத்தல், ஓய்வூதியத்தை நீக்குதல்.
- ➢. நாட்டிற்குப் புதிய சட்டங்களும், நீதி மன்றங்களும் உருவாக்கப்பட்டன.

04. **1833 சட்டவாக்க உத்தியோகத்தர்கள் பற்றிய விபரத்தைப பாய்ச்சற் கோட்டுப் படத்தில் தருக.**

**1833 சட்டவாக்கக் கழகம் (15)**





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

05. **கோல்புறூக் சீர்திருத்தத்தினால் உருவான நன்மை -களைத் தருக.**

- ➢. இலங்கையில் பிற்காலத்தில் பாராளுமன்ற முறைக்கு தோற்றுவாயாக அமைந்தது.
- ➢. ஆளுனரின் அளவுக்கதிகமான அதிகாரங்கள் குறைக்கப்பட வழி வகுக்கப்பட்டது.
- ➢. நிதி தொடர்பான ஆளுநரின் அதிகாரம் மட்டுப் படுத்தப்பட்டது.
- ➢. இலங்கையில் யாப்புறு ஆட்சி, பிரதி நிதித்துவ ஆட்சி போன்றவற்றின் ஆரம்பம் ஏற்பட்டது.
- ➢. இராஜகாரிய முறை நீக்கப்பட்டமையினால் சுதந்திர ஊழியச் சந்தை உருவானது.
- ➢. பெருந்தோட்டத்துறை வளர்ச்சிக்கு உதவியது.
- ➢. சமூக, பொருளாதார விடயங்களில் மாற்றங்கள் ஏற்பட்டன.

06. **கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபாரிசுக்கமைய அமைக்கப்பட்ட ஐந்து மாகாணங்களையும், நிர்வாக மையங்களையும் குறிப்பிடுக.**

| மாகாணங்கள் | | நிர்வாக மையங்கள் |
|---|---|---|
| வட மாகாணம் | - | யாழ்ப்பாணம் |
| கிழக்கு மாகாணம் | - | திருகோணமலை |
| தென் மாகாணம் | - | காலி |
| மேல் மாகாணம் | - | கொழும்பு |
| மத்திய மாகாணம் | - | கண்டி |

07. **கோல்புறூக் சீர்திருத்தத்தின் குறைபாடுகளைத் தருக.**

- ➢. இனவாரிப் பிரதிநிதித்துவமானது பிற்காலத்தில் இனரீதியான முரண்பாடுகளுக்கு வித்திட்டது.
- ➢. உத்தியோக பற்றுள்ளவர்கள் ஆளுநருக்குச் சார்பாக நடந்து கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. உத்தியோகப் பற்றற்றவர்களையும் ஆளுநரே நியமித்தமையால் இச்சபை ஆளுநர் சார்பான சபையாகவே இருந்தது.
- ➢. நாட்டின் நீதி, நிர்வாகம் ஆகியவற்றில் ஆளுநர் அதிகாரமே நீடித்தது.
- ➢. ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டமையால் சுதேச மொழிகள் முக்கியத்துவம் இழந்தன.
- ➢. பெருந்தோட்டப்பயிர்ச் செய்கை அறிமுகப்படுத்தப் பட்டமையால் கிராமியப பயிர்ச்செய்கை பாதிப்புற்றமை.

**08. கோல்புறூக் சீர்திருத்தத்திற்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட போராட்டங்களை விளக்குக.**

- ➢. ஐரோப்பிய முதலீட்டாளர்களின் போராட்டம்.
  - ☙. பெருந்தோட்டத் துறையில் ஈடுபட்டிருந்த இவர்களுக்குப் போதுமான பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள் உட்கட்டமைப்புக்கள் போதியளவு மேம்படுத்தப்படவில்லை. ஆரம்பத்தில இதற்கான நிதி ஒதுக்கீடு செய்வது சிரமமாயிருந்தது.
  - ☙. உத்தியோகப் பற்றற்றவர்கள் சிறுபான்மை -யினராகவிருந்தமை. ஆளுநர் மூலம் நியமிக்கப் பட்டமை போன்றவற்றினால் அதிருப்தி அடைந்தமை.
- ➢. 1865ல் ஜோஜ்வால் இலங்கையர் சங்கத்தைத் தோற்றுவித்தார்.
- ➢. 1889ல் இப் போராட்டங்களால் சட்டவாக்க கழகத்தில் உத்தியோக பற்றற்றோர் தொகை 8 ஆக அதிகரிக்கபபட்டது.

**09. அரசியல் யாப்புக் கோரிக்கைகளை முன் வைத்த அரசியல் இயக்கங்களைத் தருக.**

1. கரைநாட்டு உற்பத்தியாளர் சங்கம்
2. சிலாபச் சங்கம்.
3. யாழ்ப்பாணச் சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஜேம்ஸ் பீரிஸ் யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக முன்வைத்த கோரிக்கைகளைத் தருக.

- ➢. சட்டவாக்கக் கழகத்தின் உத்தியோகச் சார்பற்றோரின் அங்கத்துவத்தை அதிகரித்தல்.
- ➢. இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை நீக்குதல்.
- ➢. பிரதேசங்களில் பிரதிநிதித்துவத்திற்கேற்ப வாக்குரிமை மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல.
- ➢. சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்களை அதிகரித்தல்.

11. குறூ - மக்கலம் சீர்திருத்தத்தின் அங்கத்தவர்கள் எண்ணிக்கையை பாய்ச்சற் கோட்டுப்படம் மூலம் எடுத்துக்காட்டுக.

(1910 - 1912) சட்டவாக்கக் கழகம் (21)




| | | | |
|---|---|---|---|
| கரையோரச் சிங்களவ- | 02 | ஐரோப்பியர் | - 02 |
| தமிழர் | - 02 | பறங்கியர் | - 01 |
| கண்டிச் சிங்களவர் | - 01 | கல்வி கற்ற இலங்கையா- | 01 |
| முஸ்லீம் | - 01 | | |

12. குறூமக்கலம் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்களைத் தருக.

- ➢. சட்டவாக்கக் கழகத்திற்கு முதன் முறையாக வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப் பட்டமை. (1912ம் ஆண்டு)
- ➢. கல்வி கற்ற இலங்கையர் பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை. (1912ம் ஆண்டு).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது தேர்தலில் கல்வி கற்ற இலங்கையர் பிரதிநிதியாக சேர்.பொன். இராமநாதன் தெரிவுசெய்யப்பட்டார்.

- தொடர்ந்தும் உததியோகப் பற்றுள்ளோர் பெரும்பான்மையினராக இருந்தமை.
- கல்வி கற்றவர்களின் அரசியல் பிரவேசம், அரசியல் இயக்கங்கள் உருவாவதற்கும் அரசியல் சீர்திருத்த கோரிக்கைகளை முன்வைப்பதற்கும் காரணமாக விளங்கின.
- உத்தியோக பற்றற்றவர்கள் எட்டிலிருந்து பத்தாக அதிகரிக்கப்பட்டமையால் அவர்களின் செல்வாக்கு அதிகரித்தது.

**13. குறூ - மக்கலம் சீர்திருத்தத்தின் குறைபாடுகளைக் கூறுக.**

- வாக்களிக்கும் உரிமை வரையறுக்கப்பட்டிருந்தது. (4% மட்டுமே). வாக்காளர்களுக்கு பால் கல்வி, சொத்து போன்ற தகமைகள் கருத்தில் கொள்ளப்பட்டது.
- ஆளுநரின் மேலான அதிகாரம் தொடர்ந்தது.
- பிரதேசவாரியான தேர்தல் முறை அமுல் செய்யப் படாதமையால் தேசியவாதிகள் ஏமாற்றமடைந்தனர்.

**14. இலங்கையின் மது ஒழிப்பு இயக்கம் பற்றி விளக்குக.**

- 1912ம் ஆண்டு அரசினால் மதுபானசாலைகளை அமைப்பதற்கு புதிய சட்டம் ஒன்று பிறப்பிக்கப் பட்டதன் காரணமாக, அதனை எதிர்த்து, மதுவினால ஏற்படும் தீமைகளை விளக்கி மக்களை அதிலிருந்து மீட்பதே நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இயக்கமாகும்.
- 1910ஆம் ஆண்டு சீர்திருத்தத்தில் தமது கோரிக்கையை பெற முயற்சித்திருந்த மத்திய வர்க்கத்தினர் இவ்வியக்கத்தினூடாக அரசியல் தன்மையுடைய ஓர் இயக்கமாக மாறிப் போராடினா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகள்

- ➢. அரசின் மதுவரிக் கொள்கைக்கு எதிராகப் பொதுமக்களின் அபிப்பிராயத்தை உருவாக்க முயற்சித்தமை.
- ➢. மத்திய தர வர்க்கத்தினரும், மறுமலர்ச்சி இயக்கத்தினரும் (சமய கலாசார இயக்கத்தினர்) ஒரே கொள்கை அடிப்படையில் செயற்பட்டமை.

**15. மது ஒழிப்பு இயக்கத்தின் செயற்பாட்டினால் ஏற்பட்ட விளைவுகள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

- ➢. புதிய மதுச்சாலைகளை அமைப்பதற்கு இடங்கள் பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்பட்டது.
- ➢. மது ஒழிப்பு இயக்கத்தினூடாக மக்கள் இயக்க ரீதியாக ஒன்றுபட்டனர்.
- ➢. அடக்குமுறை மூலம் பல தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.
- ➢. சிங்களப் பத்திரிகைகள் பிரசுரமாகாது தடை செய்யப்பட்டது.
- ➢. இவ்வியக்கத்தினூடாக பல தலைவர்கள் அரசியலில் நுழைந்து தேசியத் தலைவர்களாகப் பெயர் பெற்றனர்.

உ + ம் : F.R. சேனநாயகா, டி.எஸ்.சேனநாயக்க,
சேர்.டி..பி. ஜெயதிலகா

**16. இந்திய தேசியசங்கம் பற்றி எழுதுக.**

- ➢. 1815ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் மூலமாக 20ம் நூற்றாண்டின் சக்திவாய்ந்த இயக்கமாகச் செயற்பட்டனர்.
- ➢. 1918ம் ஆண்டில் மொண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தத்தின் மூலம் பிரித்தானியா இலங்கையை விட முற்போக்கான அரசியல் யாப்பை இந்தியாவிற்கு வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுரேந்திரநாத் பானர்ஜி, பாலகங்காதர திலகர், மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு ஆகிய தலைவர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
- மகாத்மா காந்தி 1927ல் இலங்கைக்கும் வந்து தங்கி உரையாற்றினார்.
- ஜவஹர்லால் நேருவும் இந்நாட்டு மக்களுக்கு உரையாற்றினர்.
- மனுக்களை வைத்தல், பேச்சுவார்த்தை நடத்துதல் மூலம் சீர்திருத்தங்கள் பெற முடியாது என விளங்கிக் கொண்ட தலைவர்கள் 1915க்குப் பின் ஒழுங்கமைக்கப்பட்ட போராட்டங்களை முன் எடுத்துச் செல்லத் தீர்மானித்தனர்.

**17. இலங்கைத் தேசியசங்கத்தின் ஆரம்பத்திற்கான அடிப்படைக் காரணிகளை எழுதுக.**

- 1915ம் ஆண்டு சிங்கள முஸ்லீம் கலவரம் இடம்பெற்றது. அப்போது இராணுவச்சட்டங்களைப் பிரயோகித்து மக்களை அடக்கியமை.
- அநீதியான அடக்குமுறையிலிருந்து விடுபட பலம் வாய்ந்த தேசிய தாபனம் அவசியம் வேண்டும் என உணர்ந்தமை.
- நிர்வாக அதிகாரங்கள் இலங்கைக்கு கூடிய அளவில் பகிரப்பட வேண்டும் என எண்ணியமை.
- மது ஒழிப்பு இயக்கம் தேசியத் தலைவர்கள் ஒன்றுபட வழி வகுத்தமை.
- இந்திய தேசிய காங்கிரஸின் கருத்துக்கள் இலங்கைச் சீர்திருத்தவாதிகளைக் கவர்ந்தமை.
- இதுவரை காலமும் இருந்து இயங்கிய சிறிய அமைப்புக்களால் சக்தி வாய்ந்த முறையில் இயங்க முடியாதிருந்தமை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

18. **இலங்கைத் தேசியசங்கம் பற்றி எழுதுக.**

- ➢. பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட பாரிய அமைப்பாக விளங்கியது.
- ➢. 1919ம் ஆண்டு இச்சங்கமானது அமைத்துக் கொள்ளப்பட்டது.
- ➢. முதலாவது தலைவராக சேர்.பொன். அருணாசலம் தெரியப்பட்டமையானது தேசிய இன ஒற்றுமையைக காட்டியது.
- ➢. பொதுவான நோக்குடன் செயற்படுவதற்காக சிங்கள, தமிழ். முஸ்லீம்கள் அங்கம் வகித்த பல்வேறு இயக்கங்களும், தேசிய சங்கம் என்ற ஒரே அமைப்பின் கீழ் ஒன்றுபட்டமை இந்நாட்டு வரலாற்றின் ஓர் முக்கிய அம்சமாகும்.
- ➢. 1920, 1924, 1931 யாப்புச் சீர்திருத்தங்கள் தேசிய சங்கத்தின் நெறிப்படுத்தலில் பெறப்பட்டது.
- ➢. மனிங் சீர்திருத்தத்தை இனப்பிளவு, பிரதேசப் பிளவுக்கு வழி வகுக்கும் எனவும், சுயாட்சிக்கு ஏற்ற பயிற்சியை வழங்கவில்லையெனவும் தேசிய சங்கம் எதிர்த்தது.

19. **இலங்கை தேசியசங்கத்தில் ஏற்பட்ட பிளவு – களைத் தருக.**

- ➢. ஆள்பதி வில்லியம் மனிங்கின் செயற்பாடுகள் காங்கிரஸில் பிளவு ஏற்படக் காரணமானது.
- ➢. சட்டவாக்கக் கழகத்தில் ஆசனங்களைப் பகிர்ந்து கொள்வதில் சிங்கள, தமிழ் தலைவர்களிடையே கருத்து வேறுபாடு தோன்றியது.
- ➢. 1921ல் சட்டவாக்கக் கழகத்தில் மேல் மாகாண இட ஒதுக்கீடு சம்மந்தமான விவகாரத்தில் தமிழர்கள் தேசிய சங்கத்தை விட்டு விலகினர். தமிழ் மக்கள் சபை ஒன்றினை நிறுவினர்.
- ➢. 1924ல் கண்டிச் சிங்கள அங்கத்தவர்கள் விலகிக் கண்டித் தேசிய அமைப்பொன்றை உருவாக்கினர்.
- ➢. 1928ல் ஏ.ஈ. குணசிங்கா தலைமையிலான இலங்கைத் தொழிற்கட்சி விலகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. மனிங் அரசியல் சீர்திருத்தத்தின் சட்டவாக்க கழகத்தின் உறுப்பினர்களை எடுத்துக்காட்டும் பாய்ச்சற்கோட்டு அட்டவணையைத் தருக.

1921 சட்டவாக்கக் கழகம்.




21. மனிங் அரசியல் யாப்பின் முக்கிய அம்சங்களைத் தருக.

- ➢. உத்தியோகச் சார்புள்ளோரை விட உத்தியோகச் சார்பற்றோர் தொகை அதிகரிக்கப்பட்டமை.
- ➢. பிரதேசவாரிப் பிரதி நிதித்துவ முறைமை அறிமுகப் படுத்தப்பட்டமை.
- ➢. மாகாண ரீதியான தெரிவு முறை இடம் பெற்றமை.
- ➢. சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்கள் அதிகரிக்கப -பட்டமை.
- ➢. இனரீதியான பிரநிதித்துவ முறைமை தொடர்ந்தும் இருந்தமை.
- ➢. சட்ட நிர்வாகக் கழகத்திற்கு முதன் முறையாக உத்தியோகப் பற்றற்ற மூவர் தெரிவு செய்யப் பட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. மனிங் அரசியல் யாப்பின் குறைபாடுகள் எனக் கருதப்பட்டவை யாவை?

- ➢. இலங்கையர்கள் எப்பிரிவினரையும் திருப்திப் படுத்தவில்லை.
- ➢. சிங்கள, தமிழ் மக்களிடையே யாப்பு அடிப்படையில் பகைமை உணர்வு ஏற்பட வழி வகுத்தது.
- ➢. ஆளுநர் தொடர்ந்தும் சட்டநிர்வாக அதிகாரப் படைத்தலைவராக விளங்கினார்.
- ➢. இலங்கைத் தேசிய காங்கிரஸின் அபிலாசைகளை இவ்வரசியல் சீர்திருத்தம் பூர்த்தி செய்யவில்லை.
- ➢. வாக்களிக்கும் உரிமை போதுமானளவு விஸ்தரிக்கப் படவில்லை.

23. **மனிங் - டிவன்சியர் யாப்புச சீர்திருத்தத்தில் சட்டவாக்க கழகத்தின் உறுப்பினர்களை எடுத்துக்காட்டும் பாய்ச்சல் கோட்டுப் படத்தினைத் தருக.**

1924 சட்டவாக்கக் கழகம்.




24. மனிங் - **டிவன்சியர் யாப்பின் முக்கியத்துவங்களைத் தருக.**

- ➢. சட்டவாக்கக் கழகத்தில் உத்தியோகச் சார்பற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. சட்டவாக்கக் கழகத்தின் அங்கத்தவர்களுள் பெரும்பான்மையானோர் வரையறுக்கப்பட்ட வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டமை.

➢. சட்டவாக்கக் கழகத்தின் உபதலைவராக அங்கத்தவர்களில் ஒருவரை வாக்குரிமையின் மூலம் தெரிவு செய்து கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

➢. மேல் மாகாணத்தில் தமிழருக்கென்று புதிய அங்கத்துவம் ஒன்று வழங்கப்பட்டது.

➢. நிர்வாகக் கழகத்திற்கு உத்தியோகச் சார்பற்ற அங்கத்தவர் மூவரை நியமிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தமை.

**25. மனிங் - டிவன்சியர் யாப்பின் குறைபாடுகளைத் தருக.**

➢. சட்டவாக்கக் கழகத்தில் பொறுப்பும் அதிகாரமும் வேறாக்கப்பட்டமை பெரும் குறைபாடாகும்.

➢. வாக்குரிமை விரிவாக்கப்பட்டாலும் சனத் தொகையில் 4% மட்டுமே வாக்களிக்கும் உரிமை பெற்றிருந்தனர்.

➢. இந்த யாப்பும் இலங்கையரை இன அடிப்படையில் பிளவு ஏற்படுத்தியது.

**26. டொனமூர் ஆணைக்குழு வருகை பற்றி எழுதுக.**

➢. ஆளுநர் ஹர்பட் ஸ்டென்லி காலத்தில் (1927இல்) இலங்கைக்கு வந்தனர்.

➢. டொனமூர் பிரபு அக்குழுவின் தலைவராவார்.

➢. சேர். மெதிங் நேடன், சேர் ஜெப்ரி பட்லர், பேராசிரியர் டிரமன்ட் றீல்ஸ் ஆகியோரும் இக்குழுவில் இணைக்கப்பட்டிருந்தனர்.

➢. இலங்கையில் பல காலம் தங்கியிருந்து மக்கள் குழுவினரையும், தேசிய சங்கங்களையும் சந்தித்துக் குறைபாடுகளைத் தெரிந்து கொண்டனர்.

➢. இவற்றின் பின்னரே 1931ல் டொனமூர் அரசியல் யாப்பு நடைமுறைக்கு அறிமுகமாகியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. டொனமூர் யாப்பின்படி அரசுக்கழகத்தின் அங்கத்தினர் விபரங்களைக் குறிப்பிடுக.

அரசுக் கழகம்.
(61)

| தேர்தல் மூலம் | ஆளுனர் நியமனம் | அரச உத்தியோகத்தர். |
|---|---|---|
| (50) | (08) | (03) |

1. பிரதம காரியதரிசி
2. நிதிச் செயலாளர்
3. சட்டச் செயலாளர்

28. டொனமூர் யாப்பின் முக்கிய அம்சங்களைத் தருக.
- ➢. அரசுக்கழகம் உருவாக்கப்பட்டமை.
- ➢. சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை. 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இரு பாலாருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.
- ➢. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டமை. பிரதேசவாரியாக 50 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.
- ➢. நிர்வாகக் குழு ஆட்சி ஏற்படுத்தப்பட்டமை. அரசுக் கழகத்திலுள்ள 58 பேரும் 7 நிர்வகக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்.
- ➢. ஆளுநரின் அதிகாரங்கள் மறுசீரமைக்கப்பட்டமை.
- ➢. அரசுக் கழகம் முன்னைய சட்டவாக்கக் கழகங்களை விட இறைமை படைத்ததாகக் காணப்பட்டது.

29. சர்வஜன வாக்குரிமை வழங்கப்படுவதற்கான நியாயங்களைத் தருக.
- ➢. 1912ம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்ட வாக்குரிமை வீதம் மிகக்குறைவாகக் காணப்பட்டமை.
- ➢ வாக்குரிமை பெறுதற்கு கல்வி, சொத்து போன்ற தகைமைகள் தடையாயிருந்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. 1924ம் ஆண்டு வரை வாக்களிப்போர் 4% ஆக வரையறுக்கப்பட்டிருந்தமை.
- ➢. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படாமை.
- ➢. ஏழைகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசியல் வாதிகள் கவனம் குறைவாகக் காணப்பட்டமை.
- ➢. பொது மக்களுக்கு வாக்குரிமை கிடைக்காமையால் அவர்கள் அரசியல் விடயங்களில் அதிகம் அக்கறை காட்டாமை.
- ➢. சமூக நலன் திட்டங்கள் உருவாகும் எனக் கருதியமை.
- ➢. பிரித்தானியாவில் 1928ல் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தமை.
- ➢. மககளால் தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதிநிதிகள் அனைவரையும் நிர்வாகத்தில் பங்குபெறச் செய்வதற்கு வாக்குரிமை அவசியம் எனக் கருதியமை.

**30. டொனமூர் அரசியல் சீர்திருத்தப்படி அறிமுகமாகிய நிர்வாகக் குழு முறைமை அமைக்கபபட்டமைக் - குரிய காரணங்களைத் தருக.**

- ➢. சட்டவாக்க, சட்ட நிர்வாகத் துறையினருக்குக் கிடையில் தொடர்பு குறைவாகக் காணப்பட்டமை.
- ➢. இலங்கையில் மந்திரி சபை அமைப்பதற்குத் தேவையான கட்சி முறைமை இல்லாமை.
- ➢. நிர்வாகக்குழு முறை அரசியல் பயிற்சியை வழங்கும் என்ற நம்பிக்கை கொண்டமை.
- ➢. சிறுபான்மையினருக்கும் ஆட்சியில் பங்கு பெறும் வாய்ப்பை ஏற்படுத்தல்.

**31. டொனமூர் யாப்பின் கீழான நிர்வாகக் குழு முறைமைக் கட்டமைப்பு யாது?**

- ➢. 61 அங்கத்தவர்களில் அதிகாரிகள் மூவரையும் தவிர்த்து ஏனைய அங்கத்தவர்கள் அனைவரும் ஏழு நிர்வாகக் குழுக்களாக பிரிக்கப்பட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நிர்வாகக் குழு | தலைவர் |
|---|---|
| உள்நாட்டு அலுவல்கள் | டி.பி.ஜயதிலக |
| விவசாயமும் காணியும் | டி.எஸ். சேனநாயகா |
| உள்ளூராட்சி | சீ. பட்டுவன் துடாவ |
| சுகாதாரம் | டி.பி. பானபொர்க்க |
| போக்குவரத்தும் பொது வேலைகளும் | M.M.மாக்கன் மாக்கல் |
| தொழில், கைத்தொழில், வர்த்தகம் | பி. சுந்தரம் |
| கல்வி | C.W.W. கன்னங்கரா |

32. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்திய -மைக்கான காரணங்களைத் தருக.

➢. இனவாரிப் பிரதிநிதித்துவம் நாட்டு மக்களிடையே பகைமையைத் தோற்றுவிக்கின்றது எனக் கருதியமை.

➢. இனவாரிப் பிரதிநிதித்துவம் தேசிய ஒற்றுமையை சிதைக்கின்றது என எண்ணியமை.

➢. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் மூலம் பிரதேசங்கள் அபிவிருத்தி அடையும் என்ற நோக்கம்

➢. மக்களுக்கும், அரசுக்கும் இடையேயுள்ள நெருக்கம் அதிகரிக்கும் எனக் கருதியமை.

33. டொனமூர் யாப்பின் மூலம் ஏற்பட்ட நன்மைகள் யாவை?

➢. இலங்கைக்குக் குறிப்பிட்டளவு பொறுப்பாட்சி வழங்கப்பட்டது.

➢. சமூக நலன்கள் கருதும் சட்டங்கள் உருவாகின. (தொழிலாளர் நிவாரணச் சட்டம் - 1934)

➢. அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றன. ( லங்கா சமசமாஜக்கட்சி - 1934, கம்யூனிசக் கட்சி - 1943, ஐக்கிய தேசியக் கட்சி - 1946)

➢. பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் முதலில் சர்வஜன வாக்குரிமை பெற்ற நாடாக இலங்கை விளங்கியது.

➢. நிர்வாக ரீதியிலான அனுபவத்தைப் பெற முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. டொனமூர் அரசியல் யாப்பின் குறைபாடுகளைத் தருக.

- ➢. இலங்கை மக்களுக்கு அரைகுறைப் பொறுப்பு ஆட்சியே வழங்கப்பட்டிருந்தது.
- ➢. முக்கியமான ஆட்சித்துறை அதிகாரங்கள் ஆளுநரிடமும், அரச செயலாளர்களிடமும் வழங்கப பட்டிருந்தமை.
- ➢. கூட்டுப் பொறுப்புடைய அமைச்சரவை இடம் பெறவில்லை.
- ➢. இலங்கை மக்களின் எந்தத் தரப்பினரையும் திருப்தி செய்யவில்லை.
- ➢. கட்சி அரசியல் முறை விருத்தியடைந்து இனவாத நோக்கே காணப்பட்டது.
- ➢. டொனமூர் யாப்பு 'பத்தில் ஏழு பங்கு சுதந்திரத்தையே வழங்கியது என்றும், மூன்று அரச செயலாளர்களும் அரசியல்காவல் நாய்களாக விளங்கினர் என்றும் கருதப்பட்டது.

35. சூரியமல் இயக்கம் பற்றி எழுதுக.

- ➢. இடதுசாரி இயக்கங்கள் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொண்ட போராட்ட இயக்கமாகும்.
- ➢. 1926ல் இலங்கையில் பிரித்தானிய படையில் பணிபுரிந்தோர் சங்கத்தினால் பொப்பி மலர் விற்கப்பட்ட அதே தினத்தில் தோற்றம் பெற்ற சூரிய காந்தி மலரை விற்கும் இயக்கமே 'சூரிய மல்' இயக்கமாகும்.
- ➢. 1ம் உலக மகா யுத்தத்தில் அங்கவீனமுற்ற படை வீரர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் உதவி புரிய பிரித்தானியா தனது குடியேற்ற நாடுகளில் பொப்பி மலரை விற்பனை செய்ய ஏற்பாடு செய்தனர். 1932ம் ஆண்டு ஓய்வு பெற்ற இலங்கைப் படை வீரர்கள் பொப்பி மலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனைக்கு எதிராக சூரிய மலர்களை விற்பனை செய்தார்கள்.

- ➢. எலியன் பெரேரா என்ற சட்டத்தரணியே இவ்வியக்கத்தை ஆரம்பித்தார்.
- ➢. அரசுடன் ஏற்பட்ட உடன்பாட்டிற்கு அமைய இவர் அதனைக் கைவிட்டுவிட, இவ்வியத்தின் இடது சாரித் தலைவனான கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி கொல்வின, ஆர்.டி. சில்வா போன்றவர்கள் அவ்வியக்கத்தைப் பொறுப்பேற்றனர்.
- ➢. சூரியமல் இயக்கத்தினால் சேகரிக்கப்பட்ட பணத்தை வெள்ளம், மலேரியா நோய் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டது.
- ➢. சூரியகாந்தி மலர் சுதந்திரத்தின் சின்னம் எனவும், அதனை அணிவது சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு நல்குவது எனவும் கருதப்பட்டது.

**36. புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தம் ஏற்பட வழி வகுத்த காரணிகளைத் தருக.**

- ➢. 1939ம் ஆண்டில் 2ம் உலகப்போர் ஆரம்பமான -தால் பிரித்தானியருக்கு இலங்கை உதவி தேவைப்பட்டமை.
- ➢. அமைச்சரவை அதற்கு ஏற்றாற்போல் ஒத்துழைப்பு வழங்கியமை.
- ➢. யுத்தம் நடைபெற்ற கஷ்டமான காலப்பகுதியில் அமைச்சரவை பெற்றுக் கொடுத்த உதவிகளினால ஆளுநர் திருப்தியுற்றமை.
- ➢. யுத்தம் முடிவுற்ற பின்னர் புதிய அரசியல் யாப்பின் அவசியம் பற்றிய கோரிக்கை விடுக்கப்பட்டமையும், ஆளுநரும் பிரித்தானியாவுக்கு சீர்திருத்தம் வழங்கும்படி சிபாரிசு செய்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. சோல்பரி யாப்புப் பற்றிக் குறிப்பிடுக.

- ➢. இலங்கையின் கோரிக்கைகளுக்கிணங்க அமைச்சரவையின் வரைபையும், கருத்தில் கொண்டு புதிய அரசியல் யாப்பினை முன் வைப்பதற்கு 1944ல் சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.
- ➢. இக்குழுவினர் 1945ல் தமது அறிக்கையை முன் வைத்தனர்.
- ➢. இதில் பாராளுமன்ற ஆட்சி முறை பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.
- ➢. சோல்பரி யாப்பு பெரும்பாலும் அமைச்சரவை முன் வைத்த திட்டத்தை ஒத்ததாகக் காணப்பட்டது.
- ➢. 1945ம் ஆண்டு நவம்பர் மாதம் அரசுக்கழகத்தால் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 01
# கணிப்பீட்டுப் பயிற்சி
## கைத்தொழிற் புரட்சி

➢. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. 1814ல் நீராவிப் புகையிரத என்ஜினைக் கண்டுபிடித்த கண்டுபிடிப்பாளர் யார்?
(1) ஜேம்ஸ்வாட (2) றொபர்ட் புல்டன்
(3) மார்க்கோனி (4) ஜோர்ஜ் ஸ்டீவன்சன்

✍. பின்வரும் கண்டுபிடிப்புக்களைக் கொண்டு 3ம், 4ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A - பறக்கும் நூனாளி D - மியுல் இயந்திரம்
B - பாதுகாப்பு விளக்கு E - நீராவி இயந்திரம்
C - மெக்கடம் முறை F - ஜெனீ இயந்திரம்

02. போக்குவரத்துடன் தொடர்புடையவை.
(1) A,B (2) B,F (3) C,E (4) D,A

03. ஹம்ப்றி டேவியின் கண்டுபிடிப்பு
(1) A (2) B (3) C (4) D

04. நிலக்கரிக் கைத்தொழிலுக்கான முதற்கண்டுபிடிப்பு பின்வருவனவற்றுள் எது?
(1) நீரை வெளியேற்றும் இயந்திரம்
(2) நீராவி இயந்திரம்
(3) வானொலி
(4) பாதுகாப்பு விளக்கு

05. பணத்தை முதலீடு செய்யும் முதலாளித்துவ வகுப்பு எனவும், உழைப்பிற்கு தொழிலாளர் வகுப்பு எனவும் வகுப்புக்கள் எதன் விளைவாக உருவாகின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) குடியேற்றமுறையின் விளைவாக
(2) மறுமலர்ச்சியின் விளைவாக
(3) கைத்தொழில் புரட்சியின் விளைவாக
(4) மானிய முறையின் விளைவாக

**௲. பின்வரும் கண்டுபிடிப்புக்களைக் கொண்டு 6ம், 7ம் வினாக்களுக்கு விடை தருக.**

A - பறக்கும் நூனாடா D - நீராவி இயந்திரம்
B - பாதுகாப்பு விளக்கு E - மியுல் இயந்திரம்
C - மெக்கடம் முறை

06. புடவைக் கைத்தொழிலோடு தொடர்புடைய கண்டு பிடிப்புக்களின் விடைத்தொகுதி
(1) A,C (2) B,E (3) C,D (4) A,E

07. நிலக்கரிக் கைத்தொழிலோடு தொடர்புடைய கண்டுபிடிப்புக்களின் விடைத் தொகுதி
(1) A,C (2) B,D (3) C,D (4) A,D

**௲. பின்வரும் கண்டுபிடிப்புக்களைக் கொண்டு 8ம், 9ம் வினாக்களுக்கு விடை தருக.**

A - ஸ்பின்னிங் ஜெனி D - கொதி நீராவி இயந்திரம்
B - ரோலர் இயந்திரம் E - மின்சாரச் சூளை
C - நீர்ச்சட்டம்

08. புடவைக் கைத்தொழிலோடு தொடர்புடைய கணடு -பிடிப்புக்களின் விடைத்தொகுதி
(1) A,C (2) B,E (3) C,D (4) A,D

09. இரும்புக் கைத்தொழிலோடு தொடர்புடைய கண்டுபிடிப்புக்களின் தொகுதி
(1) A,C (2) B,E (3) C,D (4) A,D

10. இங்கிலாந்து கைத்தொழில் புரட்சிக் காலத்தின் கண்டுபிடிப்பாளர்கள் சிலர் நிரல் 'A" யிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கண்டுபிடிப்புகள் நிரல் ‘B” யிலும் தரப்பட்டுள்ளது. நிரல் ‘A” ஐ நிரல் ‘B” யுடன் பொருத்தும் போது பெறப்படும் விடையின் ஒழுங்கு.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. ஜேம்ஸ்வாட் | A. நிலக்கரி மூலம் இரும்புத்தாதை உருக்குதல் (1730) |
| 2. அலெக்சாண்டர் கிரகம்பெல் | B. கொதி நீராவி இயந்திரம் (1736) |
| 3. ஜோன்கே | C. தொலைபேசி (1876) |
| 4. ஆபிரகாம் டார்பி | D. பறக்கும் நூனாளி (1733) |
| | E. விசைத்தறி (1785) |

(1). E,C,D,A (2). B,C,D,A
(3). C,B,D,A (4). D,C,A,B

11. இங்கிலாந்து கைத்தொழில் புரட்சிக் காலத்தின் கண்டுபிடிப்பாளர்கள் சிலர் நிரல் ‘A” யிலும் அவர்களின் கண்டுபிடிப்புகள் நிரல் ‘B” யிலும் தரப்பட்டுள்ளது. நிரல் ‘A” ஐ நிரல் ‘B” யுடன் பொருத்தமாக்கும் போது சரியான விடை பின்வருவனவற்றுள் எது?

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. சாமுவல்மோஸ் | A. மோட்டார் வண்டி |
| 2. கிரகம்பெல் | B. தந்தி |
| 3. மார்க்கோணி | C. தொலைபேசி |
| 4. ஜோன் லொகிபெயார்ட் | D. வானொலி |
| | E. தொலைக்காட்சி |

(1). A,B,C,D (2). B,C,D,E
(3). A,C,D,E (4). A,B,D,E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௲. பின்வரும் கண்டுபிடிப்புக்களைக் கொண்டு 12ம், 13ம் வினாக்களுக்கு விடை தருக.

A - தையல் இயந்திரம் D - இரும்பு கேபிள்
B - மின்சாரச் சூளை E - ரோலர் இயந்திரம்
C - நீர்ச்சட்டம்

12. நெசவுக் கைத்தொழிலோடு தொடர்புடைய கண்டு பிடிப்புக்களின் விடைத்தொகுதி
(1) A,B (2) A,C (3) B,D (4) C,D

13. இரும்பு உருக்குக் கைத்தொழிலோடு தொடர்புடைய கண்டுபிடிப்புக்களின் விடைத்தொகுதி
(1) A,C (2) B,D (3) C,D (4) B,E

14. தொடர்புபடுத்தி பெறப்படும் சரியான விடையின் ஒழுங்கினைத் தருக.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. றொபர்ட் புல்டன் | A. ஆகாய விமானம் |
| 2. டெம்ளர் | B. புகைப் படகு |
| 3. சாமுவெல் மோஸ் | C. மோட்டார் வாகனம் |
| 4. ரைட் சகோதரர்கள் | D. தந்திச் சேவை |

(1). B,C,D,A (2). B,C,A,D
(3). D,C,B,A (4). C,B,D,A

15. கைத்தொழில் புரட்சியினால் அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்களுள் அடங்காதது.
(1) சமவுடைமைவாதம், தாராண்மைவாதம், முதலாளித்துவ வாதம், பேரரசுவாதம் போன்ற புதிய அரசியல் கருத்துக்கள் தோன்றின.
(2) புதிய குடியேற்ற வாதம் ஏற்பட்டது.
(3) தொழிற்சங்கங்கள், வேலை நிறுத்தங்கள் ஆரம்பமாகின.
(4) முதலாளி, தொழிலாளி என்ற வர்க்க வேறுபாடு தோன்றியமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கைத்தொழில் புரட்சியின் போது முதலில் ஆரம்பமான மூன்று கைத்தொழில் துறைகளில் அடங்காதது.
(1) நெசவுத் தொழில்
(2) இரும்புருக்குத் தொழில்
(3) மோட்டார் வாகனத் தொழில்
(4) நிலக்கரித் தொழில்

17. கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் முதலில் ஆரம்பித்தமைக்கான காரணமல்லாதது.
(1) மூலப்பொருட்கள் தாராளமாகக் கிடைத்தமை.
(2) சனத்தொகைப் பெருக்கம்
(3) உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக விருத்தி
(4) நாடுகாண் பயணங்களின் வளர்ச்சி

18. பின்வரும் தொடர்புகளில் ஒன்று தவறானது. அதனைத தெரிக.
(1) எட்வேட் பாண்ஸ் - 1850ம் ஆண்டின் பின் கல்லும் தாரும் பயன்படுத்தப்பட்ட பெருந்தெருக்கள் ஆரம்பிக்கப்பட்டன.
(2) ஆளுனர் சேர்.ஆர்தர் கோடன் - 1899ல் பேராதனையிலிருந்து பண்டாரவளை வரை புகையிரத வீதியைநீடித்தார்.
(3) ஹென்றி வார்ட் - 1858ம் ஆண்டு கண்டி - கொழும்பு புகையிரதப் பாதை 1863ல் பூர்த்தி செய்யப்பட்டது.
(4) 1804ல் ஆளுனர் பிரெட்ரிக் நோத்தினால் புகையிரத வீதிகள், பெருந்தெருக்கள் என்பன அமைக்கப்பட்டன.

19. இலங்கையில் முதன் முதலாக தபால் முத்திரை வெளியிடப்பட்ட ஆண்டு.
(1) 1815 (2) 1903 (3) 1857 (4) 1858



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. இலங்கையில் கைத்தொழில் புரட்சியின் காரணமாக ஏற்பட்ட பொருளாதாரத்துறை மாற்றங்கள் என்ற தொகுதிக்குள் அடக்க முடியாதது.
(1) தொழிலாளர் வகுப்பு உருவானமை.
(2) முதலாளித்துவ பொருளாதாரம் உருவானது
(3) வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டமை.
(4) பெருந்தெருக்கள், புகையிரத வீதிகள் அமைக்கப்பட்டன.

21. பின்வரும் விளைவுகளைக் கருதுக.
A - நீரை வெளியேற்றுதல்
B - விஷ வாயு உருவாகுதல்
C - வெளிச்சத்தை தருவித்தல்
மேற்கண்டவற்றுடன் தொடர்புடைய தொழில்.
(1) நெசவுக் கைத்தொழில்
(2) இரும்பு உருக்குத் தொழில்
(3) நிலக்கரிக் கைத்தொழில்
(4) போக்குவரத்து தொழில்

22. கைத்தொழிற் புரட்சி பிரித்தானியாவைத் தொடர்ந்து ஐரோப்பாவில் பரவிய நாடு அல்லாததைத் தெரிவு செய்க.
(1) அமெரிக்கா (2) பிரான்ஸ்
(3) ஜேர்மன் (4) இத்தாலி

23. தொடர்பாடல்த் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் தொடர்புபட்ட கண்டுபிடிப்பாளர்.
(1) ஹென்றி பெல் (2) ஜோன்லோகி பெயார்ட்
(3) றொபட் புல்டன் (4) தோமஸ் நியூ கொமன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 02
## கணிப்பீட்டுப் பயிற்சி
## இலங்கையில் பிரத்தானியர் அதிகாரத்தை நிலைநாட்டல்.

➢. **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. பிரித்தானியர்கள் இலங்கையைக் கைப்பற்றுவதில் தமது கவனத்தைச் செலுத்துவதற்குப் பிரதான காரணியாக விளங்கியது.

(1) இந்தியாவில் மொகலாய ஆட்சியை பலவீனடையச் செய்ய முடியும் என்பதால்

(2) இந்தியாவைச் சுற்றியுள்ள வர்த்தக வலயத்தில் நடைபெறுகின்ற வர்த்தக நடவடிக்கைகளை நிர்வகிக்க இயலும் என்பதால்

(3) இந்து சமுத்திரத்தில் நடைபெறுகின்ற கடல் போக்குவரத்துச் செயற்பாடுகளைக் கட்டு பாட்டுக்குள் வைத்திருக்கலாம் என்பதால்

(4) பெருந்தோட்டப் பயிர்செய்கைக்கு தேவையான நிலத்தைப் பெற்றுக்கொள்ள இயலும் என்பதால

ஆ. **பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் I வரையிலான தகவல்களைப் பயன்படுத்தி 2ம், 3ம் வினாக்களுக்கு விடை தருக.**

| வருடம் | பிரித்தானிய ஆளுனர்கள் | வரலாற்று நபர்கள் |
|---|---|---|
| A - 1815 | D - பிரெட்ரிக் நோத் | G - முத்துச்சாமி |
| B - 1848 | E - றொபர்ட் பிரென்றிக் | H - வீரபுரன அப்பு |
| C - 1803 | F - ரொறிங்டன் பிரபு | I - ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. கண்டி இராசதானியைப் பிரித்தானியர்கள் கைப்பற்றியதுடன் தொடர்புடைய தகவல்கள் அடங்கிய தொகுதி.

(1) A,E,I (2) A,F,I (3) A,D,H (4) B,E,G

03. கண்டி இராசதானி கைப்பற்றப்பட்ட பின்னர் பிரித்தானி -யருக்கு எதிராக இடம்பெற்ற கிளர்ச்சியுடன் தொடர்புயை தகவல்களின் விடைத்தொகுதி

(1) C,F,H (2) B,F,H (3) A,F,H (4) B,F,G

உ. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் I வரையிலான தகவல்களைப் பயன் படுத்தி 4ம், 5ம் வினாக்களுக்கு விடை தருக.

| வருடம் | பிரித்தானிய ஆளுனர்கள் | வரலாற்று நபர்கள் |
|---|---|---|
| A - 1818 | D - பிரெட்ரிக் நோத் | G - ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் |
| B - 1815 | E - ரொரிங்டன் பிரபு | H - கெப்பற்றிப் பொல திசாவ |
| C - 1803 | F - றொபர்ட் பிரவுணறிக் | I - கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் |

04. பிரித்தானியர் கண்டி மீது படையெடுத்துத் தோல்வி -யுற்ற நிகழ்வுடன் தொடர்புடைய தகவல்கள் அடங்கிய தொகுதி.

(1) C,D,G (2) B,E,G (3) A,F,I (4) A,D,E

05. பிரித்தானியர்கள் கண்டியைக் கைப்பற்றிய பின்னர் அவர்களுக்கு எதிராக இடம்பெற்ற கிளர்ச்சியுடன் தொடர்புடைய தகவல்களின் விடைத்தொகுதி.

(1) C,F,H (2) B,F,H (3) B,F,G (4) A,F,H

06. கி.பி.1848ம் ஆண்டு விவசாயக் கலவரத்தின் போது இலங்கையின் ஆளுனராக இருந்தவர்.

(1) றொபின்சன் (2) எட்வட் பாண்ஸ்
(3) பிரட்றிக் நோத் (4) ரொறிங்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் உள்நாட்டு விவசாயத்தின் சீரழிவிற்கு செல்வாக்கு செலுத்திய பிரதான காரணி.

(1) கட்டாய அரசசேவை ஒழிக்கப்பட்டமை.
(2) தரிவு நிலச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை.
(3) இந்தியத் தொழிலாளர்களின் உழைப்பைப் பெற்றமை.
(4) மதுபானக் கடைகள் திறக்கப்பட்டமை.

08. கி.பி.1848ம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தின் கிளர்ச்சிக்குரிய காரணம் பின்வருவனவற்றுள் எது?

(1) கோல்புறுக் கமரன் சீர்திருத்தத்தின் விளைவு
(2) பௌத்த பிக்குக்கள் புறக்கணிக்கப்பட்டமை
(3) கண்டிப் பிரதானிகள் அதிருப்தி அடைந்தமை.
(4) பொதுமக்கள் வெறுப்படைந்தமை.

09. மலையகத்தைக் கைப்பற்றும் பணியில் பாரிய பங்களிப்பை மேற்கொண்டவராகக் கருதப்படுபவர்.

(1) ஜோன் பைபஸ் (2) ஹியு பொயிட்
(3) றொபர்ட் அன்ட்றூஸ் (4) ஜோன் டொயிலி

10. பிரித்தானியருக்கு எதிராக 1797ல் இடம்பெற்ற கரையோரக் கிளர்ச்சி ஏற்படுவதற்கு காரணம் அல்லாதது.

(1) பிரித்தானியர் புதிய வரிகளை விதித்தமை
(2) சென்னை வரி முறைகளை இங்கு புகுத்தியமை
(3) பௌத்த பிக்குகள் புறக்கணிக்கப்பட்டமை
(4) வரி ஏல விற்பனை முறையை அறிமுகப்படுத்தியமை.

௨. பின்வருவனவற்றைக் கருதுக. 11ம், 12ம் வினாக்-களுக்கு விடையளிக்குக.

A - தரிசு நிலச்சட்டம்
B - பாழ் நிலக் கொள்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கண்டிய மக்கள் காணிகளை இழப்பதற்கு காரணமாக அமைந்த சரியான விடைத்தொகுதி.
   (1) A சரியானது B தவறானது.
   (2) A தவறானது B சரியானது.
   (3) A யும் B யும் சரியானவை.
   (4) A யும் B யும் தவறானவை.

12. கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபாரிசினால் தோன்றியவை.
   (1) A சரியானது B தவறானது
   (2) A தவறானது B சரியானது
   (3) A ,B இரண்டும் சரி
   (4) A ,B இரண்டும் தவறு

**உ. பிரித்தானியரின் கண்டி மீதான படையெடுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு 13ம், 14ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

A - உளவாளியாக ஜோன் டொயிலியை நியமித்தமை.
B - முத்துச்சாமி கொலை செய்யப்பட்டமை.
C - கண்டி மன்னன் ஹங்குரன்கெத்தைக்கு பின்வாங்கியமை
D - பருவமழை பொழியும் காலத்தில் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டமை.
E - மன்னனுக்கு மது வழங்கி மதுவுக்கு அடிமையாக்கியமை.

13. மேற்குறிப்பிட்டவற்றுள் 1803ல் மலையகப் படையெடுப்புடன் தொடர்புடைய விடைத்தொகுதி.
   (1) Aயும் Bயும்   (2) Cயும் Dயும்
   (3) Cயும் Eயும்   (4) Aயும் Eயும்

14. 1815ல் மலையகப் படையெடுப்புடன் தொடர்புடைய விடைத்தொகுதி.
   (1) Aயும் Eயும்   (2) Cயும் Dயும்
   (3) Bயும் Eயும்   (4) Aயும் Dயும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றுவதற்கு ஏதுவாயமைந்த காரணியாக அமையாதது பின்வருவனவற்றுள் யாது?
(1) இலங்கையின் அமைவிட முக்கியத்துவம்
(2) வர்த்தக நடவடிக்கைகள்
(3) குடியேற்ற கொள்கைகள்
(4) இலங்கைக்குள் சுயாதீன இராச்சியம் இருப்பது பிரித்தானியரின் நடவடிக்கைகளிற்கு தடையாகக் காணப்பட்டமை.

16. ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பனி உருவாக்கப்பட்ட ஆண்டு.
(1) 1600 (2) 1598 (3) 1624 (4) 1605

17. பிரித்தானியர்களின் வர்த்தக நிலையங்கள் நிரல் 'A" யிலும் அவை நிறுவப்பட்ட ஆண்டுகள் நிரல் 'B" யிலும் தரப்பட்டுள்ளன. தொடர்புபடுத்தி பெறப்படும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. சூரத் | A. 1690 |
| 2. சென்னை | B. 1625 |
| 3. கல்கத்தா | C. 1661 |
| 4. மும்பை | D. 1639 |

(1). A,B,C,D (2). B,D,A,C (3). D,B,A,C (4). B,A,D,C

18. 1762, 1782 ஆம் ஆண்டுகளில் முறையே ஜோன்பைபஸ், ஹியு பொயிட் ஆகியோர் தூதுவர்களாக வந்த வேளையில் கண்டி மன்னர்களாக விளங்கியவர்கள்.
(1) விக்கிரம இராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
(2) இராஜாதி இராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
(3) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன், ஸ்ரீ விஜய இராஜசிங்கன்
(4) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன், இராஜாதி இராஜசிங்கன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. இலங்கையில் பிரித்தானியரின் இரட்டை ஆட்சி முறை நிலவிய காலப்பகுதி யாது?
(1) 1798 - 1802 (2) 1796 - 1798
(3) 1802 - 1815 (4) 1797 - 1802

20. 1797ல் ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆட்சிக்கெதிரான கலவரத்திற்குரிய காரணியல்லாதது.
(1) பாரம்பரிய நிர்வாக வரி சேகரிக்கும் முறைகளில் அக்கறை செலுத்தாமை.
(2) தெங்கு வரி விதிக்கப்பட்டமை.
(3) முதலாளிமார், முகாந்திரம் போன்றோரின் எதிர்ப்பு
(4) பௌத்த பிக்குகள புறக்கணிக்கப்பட்டமை.

21. மியூரன் குழுவின் சிபாரிசுகளிள் ஒன்றாக அமையாதது.
(1) தெங்கு வரி உட்பட புதிய வரிகள் நீக்கப்பட வேண்டும்
(2) ஏல விற்பனை முறை நீக்கப்பட வேண்டும்
(3) பணம் மூலம் வரி செலுத்தும் முறை நீக்கப்பட்டு பொருட்கள் மூலம் வரிசெலுத்த அனுமதிக்கப்பட வேண்டும்.
(4) வரி வசூலிப்பதில் சென்னை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

22. இரட்டை ஆட்சி முறையின் தோல்விக்கு காரணமாக அல்லாத விடயம்.
(1) ஆளுனர் பிரித்தானிய முடிக்குப் பொறுப்பாகவும், வர்த்தகக் கம்பனியின் பணிப்பாளர் சபையின் ஆலோசனைகளையும் பின்பற்ற வேண்டியிருந்தமை.
(2) ஆளுனர் நியமிக்கப்படுவதை விரும்பாத வர்த்தகக் கம்பனியினர் போதியளவு ஒத்துழைப்பு வழங்காமை.
(3) 1797ல் வர்த்தகக் கம்பனிக்கு எதிரான கிளர்ச்சிகள் ஏற்பட்டமை.
(4) வர்த்தகக் கம்பனியின் ஆளுனருக்கும், ஆளுனரின் அலுவலர்களுக்குமிடையே நல்லுறவுகள் காணப் -படாமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. 1815ல் கண்டி "மகுல்மடுவ" மண்டபத்தில் கண்டி உடன்படிக்கையில கைசாத்திட்ட கண்டித் தலைவர்களுள் ஒருவர்.
(1) மொல்லிகொட (2) கெப்பற்றிபொல திசாவ
(3) வீரபுரன் அப்பு (4) பிலிமத்தலாவ

24. கண்டி உடன்படிக்கை இடம்பெற்ற நிகழ்வில் ஆங்கிலேய கொடியை இறக்கி சிங்கக்கொடியை ஏற்றிய தேரரின் பெயர் யாது?
(1) மீகெடுவத்த குணானந்த தேரர்
(2) ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல தேரர்
(3) வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரர்
(4) வஸ்கடுவே ஸ்ரீ சுபுதி தேரர்

25. 1817ல் கதிர்காம மகோற்சவத் திருவிழா முடிவு தினத்தில் தன்னை நாயக்கவம்ச துரைசாமி எனக்கூறி வெல்லஸப் பிரதேசத்திலிருந்து வெளிபட்ட போலியாளன் யார்?
(1) கொடுகும்புரே (2) வில்பாவே
(3) பூட்டோ வேரட்டேரால (4) ஹஜ்ஜி மரைக்கார்

26. 1818 சுதந்திரப் போராட்ட தலைவர்களுள் அடக்க முடியாதவர்.
(1) மடுகல்ல (2) கெப்பற்றிப்பொல திசாவ
(3) திம்புலான திசாவ (4) மொல்லிகொட

27. முதலாம் சுதந்திரப் போராட்டத்திற்கு முன்னின்று தலைமை தாங்கியவர் .
(1) கொங்கல கொட பண்டா (2) வீர புரன் அப்பு
(3) கெப்பட்டிபொல திசாவ (4) எகலப்பொல

28. முத்துசாமிக்கு கிடைக்க வேண்டிய கண்டி இராச்சிய உரிமையை இல்லாமல் செய்து அதனைக் கண்ணுசாமிக்கு பெற்றுக் கொடுக்கக் காரணமானவன.
(1) எகலப்பொல (2) எக்னொலிகொட
(3) பிலிமத்தலாவ (4) மொல்லிகொட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 03
## கணிப்பீட்டுப் பயிறசி
### இலங்கையில் தேசிய மறுமலர்ச்சி

➢. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

➢. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் I வரையிலான தகவல்களைப் பயன்படுத்தி 1ம், 2ம் வினாக்களுக்கு விடை தருக.

| நபர்கள் | வெளியீடுகள் | பாடசாலை |
|---|---|---|
| A - அறிஞர் சித்திலெப்பை | D - சிங்கள பௌத்தயா | G - கண்டி சித்திலெப்பை மகாவித்தியாலயம |
| B - அநகாரிக தர்மபால | E - முஸ்லிம் நேசன் | H - வண்ணார் பண்ணை ஆங்கில பாடசாலை |
| C - ஆறுமுக நாவலர் | F - உதய பானு | I - பன்னிப்பிட்டிய தர்மபால வித்தியாலயம் |

01. இந்துசமய மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய சம்பவங்களின் விடைத்தொகுதி
(1) A,D,I (2) A,E,H (3) B,D,G (4) C,F,H

02. பௌத்த சமய மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய சம்பவங்களின் விடைத்தொகுதி
(1) A,E,I (2) B,D,I (3) C,F,H (4) A,E,G


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௲. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் I வரையிலான தகவல்களைப் பயன்படுத்தி 3ம், 4ம் வினாக்களுக்கு விடை தருக.

| தலைவர்கள் | நூல்கள்/ சஞ்சிகைகள் | சேவைகள் |
|---|---|---|
| A - T.B.ஜாயா | D - மகாபோதி | G - புத்தகாயாவை மீட்டெடுத்தல் |
| B - அநகாரிக தர்மபால | E - தத்துவ சமயக் கல்வி | H- ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் |
| C - சேர்.பொன். அருணாச்சலம | F- சிலோன் முஸ்லிம் ரிவ்யு | I - இலங்கை தேசியசங்கத்தின முதலாவது தலைவர் |

03. பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தோடு தொடர்புடைய சம்பவங்களின் விடைத்தொகுதி

(1) A,E,I (2) B,D,G (3) A,F,G (4) B,E,I

04. இந்துசமய மறுமலர்ச்சி இயக்கத்தோடு தொடர்புடைய சம்பவங்களின் விடைத்தொகுதி

(1) A,F,H (2) B,E,H (3) C,E,I (4) A,D,I

05. மது ஒழிப்பு இயக்கத்தின் தந்தை எனப் போற்றப் பட்டவர் யார்?

(1) அநகாரிக தர்மபால (2) F.R.சேனாநாயக
(3) எட்மன் ஹேவவிதாரண (4) ஆதர் வீ தியஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௫. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள **A** தொடக்கம் **I** வரையிலான தகவல்களைப் பயன்படுத்தி 6ம், 7ம் வினாக்களுக்கு விடை தருக.

| நபர்கள் | வெளியீடுகள் | பாடசாலை |
|---|---|---|
| A - ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் | D - ஞானதீபம் | G - கண்டி தர்மராஜ கல்லூரி |
| B - அறிஞர் சித்தி லெப்பை | E - உதயபானு | H - வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை |
| C - ஆறுமுக நாவலர் | F - சரசவி சந்தரெச | I - கொழும்பு சாஹிராக் கல்லூரி |

06. பௌத்த சமய மறுமலர்ச்சி இயக்கத்தோடு தொடர்புடைய சம்பவங்களின் விடைத்தொகுதி

(1) A,F,G (2) B,E,I (3) C,E,H (4) A,E,G

07. இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி இயக்கத்தோடு தொடர்புடைய தகவல்களைக் கொண்ட விடைத் தொகுதி

(1) C,E,I (2) B,D,G (3) B,D,I (4) A,E,H


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் I வரையிலான தகவல்களைப் பயன்படுத்தி 08ம், 09ம், 10ம் வினாக்களுக்கு விடை தருக.

| நபர்கள் | நூல்கள் | சேவைகள் |
|---|---|---|
| A - ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் | D - சைவ வினாவிடை | G - சைவப்பிரகாச சபையை அமைத்தமை. |
| B - அறிஞர் சித்திலெப்பை | E - முஸ்லிம் நேசன் | H - ஞாயிறு தினங்களில தர்ம பாடசாலைகளை நிறுவியமை |
| C - ஆறுமுகநாவலர் | F - த புடிஸ்ற் | I - முஸ்லிம் மதப் பாடசாலைகளின் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்தமை. |

08. பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தோடு தொடர்புடைய சம்பவங்களின் விடைத்தொகுதி
(1) A,E,H (2) A,F,H (3) B,E,H (4) B,H,I

09. இந்து மறுமலர்ச்சி இயக்கத்தோடு தொடர்புடைய சம்பவங்களின் விடைத்தொகுதி
(1) C,D,G (2) C,D,H (3) C,F,I (4) C,E,H

10. முஸ்லிம் மறுமலர்ச்சி இயக்கத்தோடு தொடர்புடைய சம்பவங்களின் விடைத்தொகுதி
(1) B,E,I (2) B,F,H (3) B,D,G (4) A,E,I

11. கீழே காணப்படும் கூற்றுகளுடன் தொடர்புடைய இலங்கையின் பௌத்த மறுமலர்ச்சியாளர்.
- ➢ மகாபோதி சங்கத்தை ஆரம்பித்தல்.
- ➢ புத்தகாயாவை மீட்கப் பாடுபடல்.
- ➢ ஆனந்த பாலிகா கல்லூரியை அமைத்தல்.

(1) அநகாரிக தர்மபால
(2) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
(3) டீ.பி.ஜயதிலக
(4) மீகெட்டுவத்த குணாநந்த தேரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பின்வருவனவற்றுள் சேர்.பொன்.இராமநாதனின் சேவை தொடர்பான கூற்று எது?
(1) வண்ணார் பண்ணையில் ஆங்கிலப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தல்.
(2) பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தமை.
(3) சைவ பரிபாலன சபையை ஆரம்பித்தல்.
(4) பரமேஸ்வரக் கல்லூரியைக் கட்டுவித்தமை.

13. சரசவி சந்தரெஸ, த புடிஸ்ட் என்ற பத்திரிகையின் ஆசிரியர்.
(1) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
(2) அநகாரிக தர்மபால
(3) டி.பி.ஜாயா
(4) எம்.சி.சித்திலெப்பை

14. பாணந்துறை விவாதத்தை மேற்கொண்டு பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்.
(1) ஹிக்கடுவ சுமங்கல தேரர்
(2) இரத்மலானை தர்மலோக தேரர்
(3) மீக்கெட்டுவத்த குணானந்த தேரர்
(4) வலானே சித்தார்த்த தேரர்

15. இலங்கையில் வடபகுதியில் வெற்றிகரமான மிஷனறி சேவையை ஸ்தாபித்தவர்கள்.
(1) லண்டன் மிஷனரி (2) பப்டிஸட் - மிஷனரி
(3) வெஸ்லியன் மிஷனரி (4) அமெரிக்கன் மிஷனரி

16. சமய மறுமலர்ச்சி இயக்கம் தொடர்பான தவறான கூற்று பின்வருவனவற்றுள் யாது?
(1) சுதேச சமயங்களை வளர்ப்பதில் பங்காற்றியது.
(2) இலங்கையில் தோற்றம் பெற்ற முதலாவது இயக்கமாகக் கொள்ளலாம்.
(3) சமய மறுமலர்ச்சி இயக்கத்தின் மூலம் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன.
(4) சமய பண்பாட்டு ஸ்திரத்துக்கு வித்திட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி இயக்கத்தினைப் பற்றிய கூற்றுக்களின் தொகுதி.

A - முஸ்லிம் ஆங்கிலப் பாடசாலைகள் அமைக்கப் பட்டமை.

B - அரபு மொழிக் கல்வி முக்கியத்துவம் எடுத்துக் காட்டப்பட்டது.

C - பஞ்சமா விவாதம் மேற்கொள்ளப்பட்டது.

D - மதரஸா பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை.

(1) A,B,C (2) B,C,D (3) A,B,D (4) A,C,D

18. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் காணப்படாத தேசிய இயக்கம்.

(1) யாழ்ப்பாண சங்கம் (2) இலங்கை தேசிய சங்கம்
(3) சிலாபச் சங்கம் (4) சமய மறுமலர்ச்சி இயக்கம

19. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட், அநகாரிக தர்மபால, வலசிங்க ஹரிசந்திர, டி.பி.ஜயதிலக ஆகியோரில் உள்ள பொதுப்பண்பு.

(1) பௌத்த பாடசாலைகள் அமைப்பதில் பெரும் பங்கு கொண்டவர்கள்.

(2) இலங்கையின் கடந்தகால சிறப்பினை உலகத்துக்கு காண்பிக்க நடவடிக்கை மேற் கொண்டவர்கள்

(3) பௌத்த மறுமலர்ச்சி இயக்கத் தலைவர்களாக இருந்தனர்.

(4) மது ஒழிப்பு இயக்கத்தின் முன்னோடிகளாக செயற்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. நிரல் ‘A’’ யில் பஞ்சமா விவாதங்களும் நிரல் ‘B’’ யில் அவை இடம்பெற்ற ஆண்டுகளும் தரப்பட்டுள்ளன. தொடர்புபடுத்தி பெறப்படும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. பாணந்துறை விவாதம் | A. 1871 |
| 2. பத்தேகம விவாதம் / வாரகொட விவாதம் | B. 1866 |
| 3. கம்பளை விவாதம் | C. 1873 |
| 4. உதன்விட விவாதம் | D. 1865 |

(1). C,A,B,D (2). A,B,C,D
(3). C,D,A,B (4). B,C,A,D

21. பாணந்துறை விவாதத்தில் தலைமைத் தாங்கிப் புகழ் பெற்றவர்.
(1) மீகெட்டுவத்த குணானந்த தேரர்
(2) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
(3) இரத்மலானை தம்மாலோக தேரர்
(4) வஸ்கடுவ சுபுதி தேரர்

22. தொடர்பு படுத்துக.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. ஞானதீபம் | A. அநாகரிக தர்மபால |
| 2. மகாபோதி | B. ஆறுமுக நாவலர் |
| 3. சரசவி சந்தரஸ | C. சித்திலெப்பை |
| 4. உதயபானு | D. ஸடீல் ஒல்கொட் |

(1) A,B,C,D (2) C,A,D,B
(3) C,D,A,B (4) C,A,B,D


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. "எமது அரசியல் தேவை" எனும் தலைப்பில் உரையாற்றியவர் யார்?
(1) டி.பி.ஜாயா
(2) அநகாரிக தர்மபால
(3) சேர்.பொன். அருணாச்சலம்
(4) ஸ்டீல் ஒல்கொட்

24. பின்வரும் சோடித்தகவல்களில் பொருத்தமற்றதைத் தெரிவு செய்க.
(1) அநாகரிக தர்மபால - மகாபோதி சங்கம்
(2) டி.பி.ஜயதிலக - பௌத்த இளைஞர் சங்கம்
(3) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் - பரம விஞ்ஞானார்த்த சங்கம்
(4) எம.சி.சித்திலெப்பை - முஸ்லிம் இளைஞர் சங்கம்

25. கொழும்பை மையமாகக் கொண்டு செயற்பட்ட மிஷனரி இயக்கம்.
(1) பப்டிஸ்ட் (2) வெஸ்லியன்
(3) அமெரிக்கன் (4) சேர்ச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 04
## கணிப்பீட்டுப் பயிற்சி
### பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையின் அரசியல் மாற்றங்கள்

➢. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

அ. கோல்புறூக் - கமரன் சீர்திருத்தக் குழுவினரால் முன்னெடுக்கப்பட்ட சில திருத்த சிபாரிசுகள் கீழே தரப்பட்டுள்ளன. இத்தகவல்களைக் கொண்டு 1ம், 2ம் வினாக்களுக்கு விடை தருக.

A - சட்டசபை, சட்ட நிரூபண சபை ஆகியவற்றை அமைத்தல்

B - மலைநாடு, கரையோரப் பிரதேசங்கள் ஆகியவை இணைந்த வகையில் நிர்வாக அமைப்பொன்றை அறிமுகம் செய்தல்.

C - புதிய நீதி பரிபாலன முறையொன்றை அறிமுகம் செய்தல்.

D - இராஜகாரிய கட்டாய சேவை முறையை இல்லாதொழித்தல்.

E - அரசின் வர்த்தக ஏகபோகத் தன்மையை இல்லாதொழித்தல்.

01. மேற்குறிப்பிட்டவற்றுள் அரசியல் துறையில் மேற் கொள்ளப்பட்ட சீர்த்திருத்தங்களின் விடைத்தொகுதி.

(1) A,B (2) A,D (3) C,D (4) D,E

02. பொருளாதாரத் துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்த்திருத்தங்களின் விடைத்தொகுதி.

(1) A,B (2) C,D (3) D,E (4) A,C

03. பின்வருவனவற்றைக் கருதுக.

➢ கட்டாய இராஜகாரிய முறை ஒழிப்பு
➢ இனவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகம்
➢ அரசு வர்த்தக ஏகபோக உரிமை நீக்கல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்தரப்பட்ட சிபாரிசுகளுடன் தொடர்புடைய யாப்பு.
(1) டொனமூர் (2) கோல்புறூக் - கமரன்
(3) மனிங் (4) சோல்பரி

✍. **மனிங், டொனமூர் ஆகிய யாப்புகளுடன் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. இத்தகவல்களைக் கொண்டு 4ம், 5ம் வினாக் - களுக்கு விடையளிக்குக.**

A - சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை.
B - மாகாண ரீதியான தெரிவு முறை இடம் பெற்றமை.
C - முதன் முதலாக அமைச்சரவை உருவாக்கப் பட்டமை.
D - சட்டசபைக்கு முதன் முதலில் கல்வி கற்ற இலங்கையர் தெரிவு செய்யப்பட்டமை.
E - சட்டவாக்கக் கழகத்தில் முதன்முதலாக உத்தியோக சார்பற்றோர் அதிகரிக்கப்பட்டமை.

04. மனிங் யாப்பு தொடர்பான விடைத்தொகுதி.
(1) A,B (2) B,D (3) C,D (4) B,E

05. டொனமூர் யாப்பு தொடர்பான விடைத்தொகுதி.
(1) A,E (2) A,C (3) B,C (4) B,E

✍. **பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு 6ம், 7ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

A - 61 உறுப்பினர் கொண்ட அரசுக் கழகம் உருவாக்கப பட்டது.
B - நிர்வாகக் குழு ஆட்சி ஏற்படுத்தப்பட்டமை.
C - மேல் மாகாணத்தில் தமிழருக்கென்று புதிய அங்கத்துவம் வழங்கப்பட்டது.
D - சட்டவாக்கக் கழகத்திற்கு முதன்முறையாக வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப் பட்டமை.
E - வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. குறு - மக்கலம் யாப்பில் இடம் பெற்ற விடயங்களைக் கொண்ட விடைத்தொகுதி.
(1) A,B (2) C,D (3) D,E (4) A,C

07. டொனமூர் யாப்பில் இடம் பெற்ற விடயங்களைக் கொண்ட விடைத்தொகுதி
(1) A,B (2) B,C (3) C,D (4) D,E

08. பின்வருவனவற்றுள் கோல்புறூக் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சம் அல்லாதது எது?
(1) மலைநாடும், கரையோரப் பிரதேசங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே ஆட்சி முறையின் கீழ் கொண்டுவரப்பட்டமை.
(2) 16 நிர்வாகம் கூறுகளாக இருந்த இலங்கை 5 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமை.
(3) கட்டாய அரசகரும முறை நீக்கப்பட்டது.
(4) உத்தியோகச் சார்பற்றவர்கள் எண்ணிக்கை 8 இலிருந்து 10 ஆக அதிகரிக்கப்பட்டது.

| ஆண்டு | உறுப்பினர்-களின் எ/கை | சிபாரிசுகள் |
|---|---|---|
| A - 1833 | E - 49 | I- சட்டவாக்கக் கழகத்திற்கு முதல் தடவையாக வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் தெரிவு |
| B - 1910 | F - 21 | J- சட்டவாக்கக் கழகத்தில் 50% க்கு மேற்பட்டவர்கள் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் தெரிவுசெய்யப்பட்டனர். |
| C - 1921 | G - 37 | K- பிரதேசவாரி பிரதிநிதித்துவம் அறிமுகமானது |
| D - 1924 | H - 15 | L- நிதி தொடர்பான ஆளுனரின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டது |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. மேற்தரப்பட்டவற்றுள் கோல்புறூக் அரசியல் யாப்பு தொடர்பான விடைத்தொகுதி.
(1) A,F,L (2) A,H,L (3) A,E,I (4) D,E,J

10. மனிங் யாப்பு தொடர்பான விடைத்தொகுதி
(1) B,G,J (2) D,F,L (3) C,G,K (4) B,G,K

11. குறூ - மக்கலம் யாப்பு தொடர்பான விடைத்தொகுதி.
(1) B,F,I (2) C,F,I (3) A,G,L (4) B,H,J

12. மனிங் - டிவன்சியர் யாப்பு தொடர்பான விடைத் தொகுதி
(1) D,G,J (2) C,E,J (3) D,E,J (4) B,E,I

13. 1931 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த டொனமூர் குழுவினரின் சிபாரிசுகளுள் அடங்காதவை பின்வருவன -வற்றுள் எது?
(1) 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது.
(2) 61 உறுப்பினர்கள் கொண்ட அரசுக் கழகம் உருவாக்கப்பட்டது.
(3) நிர்வாகக் குழு முறை அமைக்கப்பட்டமை.
(4) மேல் மாகாணத்தில் தமிழருக்கென்று புதிய அங்கத்துவம் ஒன்று வழங்கப்பட்டது.

14. 1932ம் ஆண்டு பொப்பி மலர் விற்பனைக்கு எதிராக சூரிய மலர்கள் விற்பனை செய்வதை ஆரம்பித்தவர்.
(1) ஏலியன் பெரேரா (2) ஆதர்.வி.தியெஸ்
(3) ஜோன்.த.சில்வா (4) பியதாஸ சிறிசேன

15. பின்வருவனவற்றுள் தவறான தெடர்பினைத் தெரிவு செய்க.
(1) படித்த இலங்கையர் பிரதிநிதித்துவம் - குறு-மக்கலம் யாப்பு
(2) சட்டவாக்கக் கழகம், சட்ட நிர்வாகக் கழகம் உருவாக்கப்படல் - கோல்புறூக் யாப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) நிர்வாகக் குழுமுறைமை - டொனமூர் யாப்பு
(4) உத்தியோகப்பற்றற்றோர் 37 ஆக அதிகரிக்கப் பட்டது. - மனிங் யாப்பு

16. 1865ல் ஐரோப்பியரால் தோற்றுவிக்கப்பட்ட இலங்கையர் சங்கத் தலைவர் யார்?
(1) ஜோர்ஜ் வால் (2) ஏ.ஈ.குணசிங்க
(3) ஜோர்ஜ் பேட் (4) ஹெமிலியா வஸ்ராறிக்கஸ்

17. 1912ம் ஆண்டு தேர்தலில் கல்விகற்ற இலங்கையர் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்.
(1) சேர்.பொன்.அருணாச்சலம்
(2) சேர்.பொன்.இராமநாதன்
(3) டி.எஸ்.சேனநாயக்க
(4) சோ.நடேசஐயர்

18. 1920ம் ஆண்டு யாப்புச் சீர்திருத்தம் மூலம் இனப்பிளவும், பிரதேசப்பிளவும் ஏற்பட வழிவகுத்த ஆளுனர்.
(1) கோல்புறூக் (2) வில்லியம் மனிங்
(3) ஹென்றி மேசன் மூர் (4) டிவன்சியர்

19. சட்டவாக்கக்கழகம், அரசுக்கழகம், இருசபை பாராளுமன்றம் போன்ற முறைமைகளை அறிமுகம் செய்த அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் முறையே.
(1) கோல்புறூக், மனிங், டொனமூர்
(2) மனிங், டொனமூர், சோல்பரி
(3) கோல்புறூக், டொனமூர், சோல்பரி
(4) குறூமக்கலம், மனிங், டொனமூர்

20. "பத்தில் ஏழு பங்கு சுதந்திரத்தையே" வழங்கியது என்றும், பிரதம காரியதரிசி, நிதிக்காரியதரிசி, சட்டக்காரியதரிசி போன்ற மூன்று அரச செயலாளர்கள் "அரசியல் யாப்பின் காவல் நாய்கள்" எனவும் கருத இடமளித்த யாப்பு.
(1) சோல்பரி (2) டொனமூர்
(3) மனிங் - டிவன்சியர் (4) கோல்புறூக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. கீழே அட்டவணையில் தவறானதைத் தெரிவு செய்க.

| | ஆண்டு | மொத்தம் | உ / சார்பு உள்ளோர் | உ / சார்பு அற்றோர் |
|---|---|---|---|---|
| (1) | 1833 | 15 | 09 | 06 |
| (2) | 1924 | 49 | 12 | 37 |
| (3) | 1921 | 37 | 14 | 23 |
| (4) | 1912 | 23 | 12 | 11 |

22. அரசுக்கழகத்தில் இவர் வகித்த பதவி யாது?



(1) விவசாய மந்திரி
(2) கல்வி மந்திரி
(3) சுகாதார மந்திரி
(4) உள்நாட்டு மந்திரி

23. சர்வஜன வாக்குரிமை டொனமூர் அரசியல் யாப்பில் வழங்கப்பட்டமையினால் ஏற்பட்ட விளைவு அல்லாதது.
(1) சமூகம் துரிதமாக மாற்றமடைவதற்கு வழி வகுத்தது
(2) பிரதிநிதித்துவ ஜனநாயகத்துக்கு மக்கள் பழக்கப் பட்டனர்
(3) அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்கு வழி வகுத்தமை.
(4) இனவாரிப் பிரதிநிதித்துவம் கொண்டுவரப்பட்டமை.

24. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சட்டசபைக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது கரைநாட்டு சிங்களவர் யார்?
(1) அமரசேகர
(2) பிலிப்ஸ் விஜயகோன் பண்டிதரத்ன
(3) ஜேம்ஸ் பீரிஸ்
(4) P.B.பானபொக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிப்பீட்டுப் பயிற்சிகளுக்கான விடைகள்.

## அலகு 01
## கைத்தொழில் புரட்சி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 02. | 3 | 03. | 2 | 04. | 4 |
| 05. | 3 | 06. | 4 | 07. | 2 | 08. | 1 |
| 09. | 2 | 10. | 2 | 11. | 2 | 12. | 2 |
| 13. | 4 | 14. | 1 | 15. | 4 | 16. | 3 |
| 17. | 4 | 18. | 4 | 19. | 3 | 20. | 4 |
| 21. | 3 | 22. | 4 | 23. | 2 | | |

## அலகு 02
## இலங்கையில் பிரததானியர் அதிகாரத்தை நிலைநாட்டல்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 02. | 1 | 03. | 2 | 04. | 1 |
| 05. | 4 | 06. | 4 | 07. | 2 | 08. | 1 |
| 09. | 4 | 10. | 3 | 11. | 1 | 12. | 1 |
| 13. | 2 | 14. | 1 | 15. | 2 | 16. | 1 |
| 17. | 2 | 18. | 4 | 19. | 1 | 20. | 4 |
| 21. | 4 | 22. | 3 | 23. | 1 | 24. | 3 |
| 25. | 2 | 26. | 4 | 27. | 3 | 28. | 3 |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அலகு 03
## இலங்கையில் தேசிய மறுமலர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| 01. 4 | 02. 2 | 03. 2 | 04. 3 |
| 05. 4 | 06. 1 | 07. 3 | 08. 2 |
| 09. 1 | 10. 1 | 11. 1 | 12. 4 |
| 13. 1 | 14. 3 | 15. 4 | 16. 2 |
| 17. 3 | 18. 3 | 19. 3 | 20. 3 |
| 21. 1 | 22. 2 | 23. 3 | 24. 4 |
| 25. 1 | | | |

## அலகு 04
## பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையின் அரசியல் மாற்றங்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 02. 3 | 03. 2 | 04. 4 |
| 05. 2 | 06. 3 | 07. 1 | 08. 4 |
| 09. 2 | 10. 3 | 11. 1 | 12. 3 |
| 13. 4 | 14. 1 | 15. 4 | 16. 1 |
| 17. 2 | 18. 2 | 19. 3 | 20. 2 |
| 21. 4 | 22. 1 | 23. 4 | 24. 2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று விளக்கப்படங்களும் குறிப்புக்களும்.

**ஜோர்ஜ் ஸ்டீவன்சன்**



- இவர் நீராவியால் இயங்கும் புகையிரத என்ஜினைக் கண்டுபிடித்தார்.
- கி.பி. 1814ம் ஆண்டளவில் இக்கண்டு -பிடிப்பு ஏற்பட்டது.
- இவரது கண்டுபிடிப்பு லிவர்பூல் நகருக்கும் மன்செஸ்டர் நகருக்கு மிடையில் 1830ல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.
- இது போக்குவரத்து துறையில் மறுமலர்ச்சி ஏற்பட வழிவகுத்தது.

**அலெக்சாண்டர் கிரஹம்பெல்**



- இவரது தாயகம் ஸ்கொட்லாந்து ஆகும்.
- பேராசிரியராகத் திகழ்ந்த இவரின் கண்டுபிடிப்பு தொலைபேசியாகும்.
- 1876ம் ஆண்டு இக் கண்டுபடிப்பு நிகழ்த்தப்பட்டது.
- இதன் மூலம் தொடர்பாடல் துறை வளர்ச்சி பெற்றது என்றால் அது மிகையாகாது.

**குக்லிமோ மார்க்கோனி**



- இவரது தாயகம் இத்தாலி ஆகும். 1895 ஆம் ஆண்டு இவர் வானொலி -யைக கண்டுபிடித்தார்.
- இவரது கண்டுபிடிப்பால் தொலைத் தொடர்பில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோன் லொகி பெயாட்டு



➢. இவரது கண்டுபிடிப்பு தொலைக் காட்சி ஆகும்.

➢. 1940ல் இக்கண்டுபிடிப்பு ஏற்பட்டது.

➢. இக் கண்டுபிடிப்பால் தொலைத் தொடர்பாடல் மற்றும் வர்த்தகத் துறை என்பவற்றில் பாரிய மாற்றம் ஏற்பட்டது.

➢. இன்று அதிகளவான மக்களைத் தன்பக்கம் ஈர்த்திருப்பதும் இதுவேயாகும்.

➢. விளம்பரத்துறைக்கு இன்று தொலைக்காட்சியே முக்கிய ஊடகமாக உள்ளது.

ரைட் சகோதரர்கள்



➢. இவர்கள் வில்பர் ரைட், ஓர்வில் ரைட் என்னும் ரைட் சகோதரர்கள் ஆவர்.

➢. இவ்விருவரும் அமெரிக்காவைத் தாயகமாக கொண்டவர்கள்.

➢. இவர்களே முதன்முதலில் ஆகாய விமானத்தை கண்டு பிடித்தவர்கள் ஆவர்.

➢. ஆகாய மார்க்கமான போக்குவரத்துக்கு அடித்தளம் இட்டவர்கள் இவர்கள் எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி



- அலெக்சாண்டர் கிரஹம்பெல் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட தொலைபேசியாகும்.
- இது 1876ம் ஆண்டு கண்டுபிடிக்கப் -பட்டது.
- இரண்டு இடங்களுக்கு இடையே கம்பிகள் ஊடாக கருத்துக்கள் பரிமாறிக்கொள்ள முடிந்தது.
- வர்த்தகத்துறை மற்றும் பொதுஜனத் தொடர்பாடல்களின் முன்னேற்றத்திற்கு இதுவே காரணமாகும்.

புகையிரத என்ஜின்



- இது ஜோர்ஜ் ஸ்டீவன்சனால் கண்டு -பிடிக்கப்பட்ட புகையிரத என்ஜின் ஆகும்.
- 1814ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.
- நீராவி மூலம் இது இயக்கப்படக் கூடியதாகவிருந்தது.
- இக்கண்டுபிடிப்பு போக்குவரத்துத் துறையில் புதிய பரிமாணத்தைக் கண்டது.

நூல் நூற்கும் ஜெனி



- இதனைக் கண்டுபிடித்தவர் ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ் என்பவர் ஆவார்.
- 1764 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப் பட்டது.
- நூல் நூற்பதை வேகப்படுத்துவ -தற்காக இது பயன்பட்டது.

நீர் வலுவினால் இயங்கும் நூல் நூற்கும் இயந்திரம்



- இதனை றிச்சர்ட் ஆக்ரைட் என்பவர் 1769ல் கண்டுபிடித்தார்.
- இவ்வியந்திரத்தின் மூலம் நூல் நூற்பது அதிவேகப்படுத்தப்பட்டது.
- இதன் மூலமாக நெசவுத்தொழில் அதிவேக முன்னேற்றமடைந்தது எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிறசாலைகளில் வேலை செய்யும் சிறார்கள



நிலக்கரிச் சுரங்கத்தில் சிறுவர் உழைப்பு பெறப்பட்ட விதம்



➢. இவ்விரண்டு படங்களும் தொழிற்சாலைகளிலும், நிலக்கரிச் சுரங்கங்களிலும் சிறார்களின் உழைப்பு பெறப்பட்ட விதம் காட்டப்பட்டுள்ளது.

➢. இவர்கள் குறைந்த ஊதியத்தில் நாளொன்றுக்கு 12 அல்லது 14 மணித்தியாலம் தொழில் புரிய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததுடன் அவர்களது வேலையும் மிகவும் கடினமாக இருந்தது.

➢. இம்மக்களது வாழ்வு அபாயகரமான சூழ்நிலையிலும், துன்பகரமான நிலையிலுமே காணப்பட்டது.

பாதுகாப்பு விளக்கு



➢. இதனைக் கண்டுபிடித்தவர் ஹம்பிரி டேவி என்பவராவார்.

➢. இது 1812இல் கண்டுபிடிக்கப்பட்டது.

➢. நிலக்கரிச் சுரங்கங்களுக்கு வெளிச்சத்தை வழங்குவது இதன் பயன்பாடாக அமைந்தது.

➢. இதன் மூலமாக நிலக்கரிச் சுரங்கங்களில ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்கக் கூடியதாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்திறன்மிக்க நீராவி இயந்திரம்



- ➤. ஜேம்ஸ் வாட் என்பவரால் இவ்வியந்திரம் கண்டுபிடிக்கப்பட்து.
- ➤. 1736 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- ➤. இது வினைத்திறன் மிகுந்த இயந்திரமாகும்.
- ➤. எல்லா விதமான கைத்தொழிலுக்கும் பயன்படும் இயந்திரமாக அமைந்திருந்தது.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

## நீரைவெளியேற்றும் இயந்திரம்



- ➤. நீராவியினால் இயங்கும் நீரை வெளியேற்றும் இயந்திரமாகும்.
- ➤. 1735ம் ஆண்டில் தோமஸ் நியூ கொமன் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.
- ➤. இக்கண்டுபிடிப்பானது நிலக்கரிக் கைத்தொழிலுக்கு மிகவும் பயனுடையதாக அமைந்தது.
- ➤. இது சுரங்கத்தினுள் சேரும் நீரைக் குழாய் மூலம் வெளியேற்றுதலும் செயற்கையான வாயுவை அனுப்பி சுரங்கத்தை குளிரூட்டக்கூடியதுமான இயந்திரமாகும்.

## உருக்கு உற்பத்தி உலை



- ➤. இதனது கண்டுபிடிப்பாளர் ஹென்றி பேஸ்மர் ஆவார்.
- ➤. 1856 ஆம் ஆண்டு இது கண்டுபிடிக்கப்பட்டது.
- ➤. இது இரும்பை உருக்குவதற்கும், இரும்பை உருக்கி கழிவுகளை வேறாக்குவதற்கும் பயன்பட்டது.

Class No: 900
Acc No 533



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாய விமானம்





- ➤. உருவில் காணப்படுவது ரைட் சகோதரர்களால் கண்டுபிடிக்கப் பட்ட ஆகாய விமானமாகும்.
- ➤. 1903ல் இது கண்டுபிடிக்கப்பட்டது.
- ➤. ஆகாய மார்க்கமான போக்குவரத்துக்கு வழிவகுத்த கண்டுபிடிப்பாகும்.

வானொலி



- ➤. இங்கு காட்டப்படுவது குக்லிமோ மார்க்கோனியினால் உருவாக்கப் -பட்ட வானொலி ஆகும்.
- ➤. இது 1895 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.
- ➤. இது வானலைகள் மூலம் செய்திப் பரிமாற்றம் செய்யும் உபகரணமாகும்.

**D.P**.ஜாயா



- ➤. இவர் 1921ல் கொழும்பு சாஹிராக் கல்லூரியில் அதிபராக கடமை -யாற்றினார்.
- ➤. முஸ்லிம் மக்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கு சிலோன் முஸ்லிம் ரிவ்யு என்ற சஞ்சிகைக்கு கட்டுரைகளை எழுதினார்.
- ➤. 1946 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியில் உப தலைவராக பதவி வகித்தார்.
- ➤. இலங்கையின் முதலாவது பாராளு -மன்றத்தில் தொழிலாளர் மற்றும் சமூக சேவை அமைச்சராக தெரிவு செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர் சித்திலெப்பை



➢. மருதானையில் சாஹிரா கல்லூரி மற்றும் கண்டியில் சித்திலெப்பை மகா வித்தியாலயம் என்பன இவரால் அமைக்கப்பட்ட பாடசாலைகளாகும.

➢. இவரால் உருவாக்கப்பட்ட பத்திரிகைகளாக முஸ்லிம்நேசன், ஞான தீபம் என்பவை விளங்குகின்றன.

➢. இவர் முஸ்லிம்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக முஸ்லிம் கல்விச் சபையை உருவாக்கினார்.

➢. இவரால் மத்ரஸா எனும் இஸ்லாமிய பாடசாலை புனரமைப்புச் செய்யப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



➢. இவர் சைவசமய வளர்ச்சிக்காகவும், இந்து கல்விக்காகவும் தொண்டாற்றிய பெரியார் ஆவார்.

➢. தமிழ், ஆங்கிலம், வடமொழி, இலத்தீன் ஆகிய மொழிகளில் இவர் பாண்டித்தியம் பெற்றவராக திகழ்ந்தார்.

➢. இவர் வண்ணார் பண்ணையில் சைவ பிரகாச வித்தியாசாலையை அமைத்தார்.

➢. சைவ பரிபாலன சபை, இந்துக் கல்வி சபை போன்ற சபைகளை உருவாக்கினார்.

➢. இவர் எழுதிய நூல்களாக இலக்கணச் சுருக்கம், 1ம், 2ம், 3ம் பால பாடங்கள், சைவ வினாவிடை போன்றன விளங்குகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநகாரிக தர்மபால



➢. இவர் "புத்தகயாவை மீட்பதற்காக எனது வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணிப்பேன்" எனக் கூறி பௌத்த மறுமலர்ச்சிக்குத் தொண்டாற்றியவர் ஆவார்.

➢. 1891ல் பிரசித்தி பெற்ற மகா போதி சங்கத்தை அமைத்தவர் இவரேயாவார்.

➢. இவர் "சிங்கள பௌத்தயா" என்ற பத்திரிகையை ஆரம்பித்தார்.

➢. சாரணாத், லண்டன் ஆகிய இடங்களில் பௌத்த விகாரைகளை அமைத்தப் பெருமைக்குரியவர்.

ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்



➢. இவரின் தாயகம் அமெரிக்கா ஆகும்.

➢. இவர் 1873 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாணந்துறை விவாதத்தின் மூலம் கவரப்பட்டு பௌத்த மதத்தை தழுவிக் கொண்டார்.

➢. இவரின் முயற்சியினாலேயே போயா தினம் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டது.

➢. இவரால் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, நாலந்தாக் கல்லூரி, கண்டி தர்மராஜ கல்லூரி, காலி மஹிந்தக் கல்லூரி, கொழும்பு மியுசியஸ், விசாகா, சங்கமித்தை பெண்கள் கல்லூரி போன்ற பாடசாலைகளை அமைக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீகெட்டுவத்த குணானந்தத் தேரர்



- இவர் 1873 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாணந்துறை விவாதத்திற்கு தலைமை தாங்கிய பௌத்தபிக்கு ஆவார்.
- இவர் பாணந்துறை விவாதத்தின் போது கொகர்லி பாதிரியாரை தோல்வியடையச் செய்தார்.
- மாளிகாகந்தை வித்தியோதய பிரிவெனாவை அமைக்க உதவி புரிந்தார்.
- இவரைக் கௌரவப்படுத்தும் முகமாக இவரின் உருவச்சிலை பாணந்துறை காலி வீதி அருகில் வைக்கப்பட்டுள்ளது.

## ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்



- இவர் பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக லக்மினி பஹன என்னும் பௌத்த பத்திரிகையை ஆரம்பித்தார்.
- 1873ல் மாளிகாகந்தை வித்தியோதய பிரிவெனாவை ஆரம்பித்தார்.
- இவர் வலானே சித்தார்த்த தேரரின் சீடராவார்.
- இவரின் தலைமையில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலம் பௌத் மயப்பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- 1865ல் சுமங்கல தேரரின் பௌத்த மதத்தில காணப்பட் நெறியாக்கத்தில் பௌத்த பிக்குகள் சப்ரகமுவ, பெல்கடுகல்ல பகுதியில் தர்மோபதேசம் நிகழ்த்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்.பொன்னம்பலம் அருணாச்சலம்



- இவர் இலங்கைத் தேசிய காங்கிரஸின முதலாவது தலைவராவார்.
- 1917ல் "எமது அரசியல் தேவை" என்ற தலைப்பில் உரையாற்றி தேசிய தலைவர்களை ஒன்றிணைத்தார்.
- இலங்கை இந்திய வரலாறு, கல்வியில் கழைத்தேசத்தின் முன்மாதிரிகள், தத்துவ சமயக்கல்வி போன்ற நூல்களை எழுதினார்.

சேர்.பொன்னம்பலம் இராமநாதன



- இவர் 1910 ஆம் ஆண்டு குறூமக்கலம் யாப்பில் சட்டவாக்க கழகத்திற்கு படித்த இலங்கையர் சார்பில் தெரிவுசெய்யப்பட்டு சட்டவாக்ககழக உறுப்பினராக பதவி வகித்தார்.
- பிரித்தானிய அரசின் "நைற்" பட்டத்தைப் பெற்ற இவர் இறுதி வரை இந்து சமயத்திற்காகப் பாடு - பட்டவராவார்.
- யாழ் பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி என்பன இவரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் ஆகும்.

கெப்பற்றிப் பொல திசாவ



- முதலாவது சுதந்திரப் போரான ஊவா வெல்லஸ்ஸ கிளர்ச்சிக்கு தலைமை தாங்கிய போராளியாவார்.
- இவர் துரைசாமியை கைது செய்யச் சென்ற வேளையில் பிரித்தானிய படைவீர்களை பார்த்து "உங்களுடைய ஆயுதங்களால் உங்களைத் தாக்க மாட்டேன்" என கூறியுள்ளார்.
- 1818 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் சிரச்சேதம் செய்யப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## C.W.W.கன்னங்கரா



➢. டொனமூர் அரசுக் கழகத்தில் கல்வி அமைச்சராக பணிபுரிந்தார்.

➢. இலங்கையில் இலவசக்கல்வியை அறிமுகப்படுத்தி "இலவசக் கல்வியின் தந்தை" என அழைக்கப்பட்டார்.

➢. இவர் ஆரம்பத்தில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் கட்சியில் அங்கத்தவராக இருந்தார்.

➢. திரு.கன்னங்கரா அவர்களே இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சர் என்ற பெருமைக்குரியவராவார்.

## E.W.பெரேரா



➢. இலங்கை வரலாற்றில் தீவிரமான செயற்பாடு காட்டியமையால் கோட்டை சிங்கம் என அழைக்கப் -பட்டார்.

➢. சிங்கள முஸ்லிம் மக்கள் கலவரத்தின் போது இரகசியமான கலந்துரை யாடலுக்கு இடமளித்தவர் ஆவார்.

➢. பிரித்தானியருக்கு எதிரான மனுவை பாதணிக்குள் மறைத்து வைத்து பிரித்தானியாவுக்கு கொண்டு சென்றார்.

➢. 1815ல் இலங்கையின் தேசியக் கொடியை இங்கிலாந்திலிருந்து மீட்டுக்கொண்டு வந்த தலைவராவார்.

➢. கொழும்பு றோயல் கல்லூரியின் மாணவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.A.விக்கிரமசிங்க



➢. இவர் வைத்தியத்தொழில் புரிந்தவராவார.

➢. இவர் உருவாக்கிய கட்சி கொம்யூனிஸ்ட் கட்சி ஆகும்.

➢. 1943ல் இக்கட்சி ஆரம்பிக்கப் பட்டது.

➢. இலங்கையின் பொருளாதாரத்துக்கு வழிகாட்டுவதற்காக "எதிர்காலவழி" என்னும் நூலை எழுதினார்.

➢. அநாதரவான மக்களுக்காக உருவாக்கிய சூரியமலர் இயக்கத்திற்கு தனது பூரண ஆதரவை வழங்கினார்.

சிறிமாவோ பண்டாரநாயக்க



➢. இவர் உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமைக்குரியவர்.

➢. இவரது ஆட்சிக் காலத்திலேயே 1972ல் புதிய யாப்பான முதலாம் குடியரசு அரசியல் யாப்பு உருவாக்கப பட்டது.

➢. இவரது ஆட்சிக்காலத்தில் பாராளுமன்றமானது தேசிய அரசுப் பேரவை என்று அழைக்கப்பட்டது.

➢. இவரது ஆட்சிக்காலம் முதற்கொண்டே இலங்கையானது "ஸ்ரீ லங்கா" எனப் பெயர் பெற்றது.

➢. இவர் 1960 - 1965, 1970 - 1977 ஆகிய ஆண்டு காலங்களில் இலங்கையின் பிரதமராக நீண்ட காலமாக பிரதமராக இருந்தவர் என்ற பெயர் பெற்றவர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## J.R.ஜெயவர்த்தன



- ➢. 1946 ஆம் ஆண்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார்.
- ➢. டட்லி சேனநாயக்காவின் பின்னர் 1973ம் ஆண்டு முதல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரானார்.
- ➢. 1977ம் ஆண்டு அதிகப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றார்.
- ➢. 1978ம் ஆண்டு முதல் புதிய யாப்புடன் சகல நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதல் ஜனாதிபதியான பெருமை இவரையே சாரும்.

## ரணசிங்க பிரேமதாச



- ➢. இவர் 1950ல் கொழும்பு மேஜராகப் பதவி ஏற்றிருந்தார்.
- ➢. 1956ல் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார்.
- ➢. 1970ல் கொழும்பு மத்தியில் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.
- ➢. 1978ல் J.R.ஜெயவர்த்தன ஜனாதிபதியான போது இவர் பிரதமர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டார்.
- ➢. இவர் இரண்டாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகவும் பதவிவகித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**S.W.R.D.பண்டாரநாயக்க**



➢. 1951ல் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை நிறுவினார்.

➢. கீழ்த்தர மத்திய வகுப்பினர், சுதேச வைத்தியர்கள், ஆசிரியர்கள் பிரச்சினைகளுக்கு இக்கட்சி மதிப்பளித்தது.

➢. 1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று பிரதமராகினார்.

➢. சிங்கள மொழியை அரசாங்க மொழியாக மாற்றினார்.

➢. 1959.09.26 இல் கொலை செய்யப்படும் வரை பிரதமராக பதவி வகித்தார்.

Class No: 900
Acc No: 533

**கலாநிதி. N.M. பெரேரா**



➢. பிரித்தானிய பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற இவரும், வெளிநாட்டில் கல்வி கற்ற தீவிர வாத இளஞர்களும் இணைந்து லங்கா சமசமாஜக் கட்சியை ஆரம்பித்தனர்.

➢. இவரது கட்சியானது இடதுசாரிச் சிந்தனைகளை உள்ளடக்கியதாகும்.

➢. 1947 தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்ற பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

➢. 1954இல் கொழும்பு மேயராகவும் கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது.

➢. 1964 - 1965, 1970 - 1975 வரையான காலங்களில் நிதி அமைச்சராகவும் கடமையாற்றினார்.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Class No: | 900 |
| Acc No | 523 |

Arasady Public Library
Municipal Council
Batticaloa

533




பூபாலசிங்கம் புத்தகசாலை

202, செட்டியார் தெரு, கொழும்பு - 11

தொ.பே.எண் : 011 2422321, 0112435713

மின்னஞ்சல் : Poobalasingham202@gmail.com



pbd

101003041

VARALARU G-11 PART -1 (SIRUKURIPU)

Rs. 200.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org